www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

மே.08-14,1994

ரூபா 8/50

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 49

## பிரேமாவின் வெற்றிடத்தை நிரப்புவாரா ஹேமா?

## தென்னாபிரிக்காவின் திருப்பம்! இங்கும் ஏற்படுத்துமா மாற்றம்?

-எக்ஸ்ரே ரிப்போர்ட்

தமிழ்-முஸ்லிம் பிளவை எதிர்பார்க்கும் பேரினவாத வல்லூறு!

அரசியல் அலசல்







ஸ்போர்ட்ஸ்

இலக்கிய நயம்

லேடீஸ் ஸ்பெஷல்

## துவிச்சக்கர வண்டியான துப்பாக்கி

## அதிசய செய்திகள்

சூடு - சுவை - சுவாரசியம் அதுதான் தினமுரசு

## விசுவாசிகள் கைவிடப்படார்

நாம் ஒரு முயற்சியில் ஈடுபடும்போது அதில் வெற்றி கிடைக்கும் என்று நம்பிக்கை வைத்து காரியத்தில் இறங்குகின்றோம். உலக ஆதாயத்திற்காக நூறுவீதம் நம்பிக்கை, விசுவாசம் வைக்கின்றோம். ஆனால் ஆத்தும இலாபத்திற்காக ஆண்டவரில்-இறைமகன் இயேசு கிறிஸ்துவில் நம்பிக்கை விசுவாசம் வைக்கின்றோமா? நாம் கர்த்தரில் வைத்திருக்கின்ற விசுவாசம் பற்றி அறிந்து கொள்வதற்கு நமது இருதயமே சாட்சியாக வரும்.

இறைமகன் கிறிஸ்து நாதர் வாழ்ந்த காலத்தில் அவரில் விசுவாசம் வைத்தோர் அடைந்த திருப்தியும் வெற்றியும் எண்ணிலடங்காதவைகள்.

ஒருமுறை,

இயேசு கப்பர்நகூமில் பிரவேசித்தபோது நூற்றுக்கு அதிபதி ஒருவன் அவரிடத்தில் வந்து "ஆண்டவரே! என் வேலைக்காரன் வீட்டிலே திமிர்வாதமாய்க் கிடந்து கொடிய வேதனைப்படுகின்றான்." என்று வேண்டிக்கொண்டான்.

அதற்கு இயேசு; "நான் வந்து அவனை சொஸ்தமாக்குவேன்" என்றார்.

நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக; "ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும். அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். நான் அதிகாரத்திற்கு கீழ்ப்பட்டவனாயிருந்தும் எனக்கு கீழ்ப்பட்டிருக்கின்ற சேவகரும் உண்டு. நான் ஒருவனை போவென்றால் போகின்றான். வாவென்றால் வருகின்றான். இதைச் செய்யென்றால் செய்கின்றான்." என்றான்.


இயேசு இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டு, தமக்குப் பின் செல்கின்றவர்களை நோக்கி; "இஸ்ரவேலருக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகின்றேன்."

பின்பு இயேசு நூற்றுக்கதிபதியை நோக்கி,

## ஆன்மீகம்

"நீ போகலாம். நீ விசுவாசித்தபடியே உனக்கு ஆகக்கடவது" என்றார். அந்த நாழிகையிலேயே அவன் வேலைக்காரன் சொஸ்தமானான்.

(மத்-8: 5-10,13)



இறைவனில் விசுவாசம் வைக்கும் எவரும் இறைவனால் ஒருபோதும் கைவிடப்பட்டது இல்லை என்பதற்கு இன்னமும் எவ்வளவோ சாட்சியங்களுண்டு. நாமும் இறைமகன் கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து பயன்பெறுவோம்.

எல்.கே.நாதன்-மோதர.

## இஸ்லாத்திற்காக முதன்முதலில் உயிர் தியாகம் செய்த உத்தமி!

ஹஜ்ரத் ஸுமையா பின்த் கய்யாத் (ரழி)அவர்கள், ஹஜ்ரத் அம்மார் (ரழி) அவர்களின் தாயார் ஆவார்கள். தமது கணவர், ஹஜ்ரத் யாஸிர் (ரழி), குமாரர் அம்மார்,(ரழி) ஆகியோரைப் போலவே ஹஜ்ரத் ஸுமையா (ரழி) அவர்களும் இஸ்லாத்திற்காக கடுமையான கஷ்ட நஷ்டங்களைச் சந்தித்துப் பெருந் தியாகம் செய்தவர் ஆவார். இஸ்லாத்தின்மீது அவர்கள் கொண்டிருந்த அழியாத அன்பின் காரணமாக, இவ்வளவு சங்கடங்களுக்குப் பிறகும்கூட, குலையாத ஈமானில் தளராத உறுதியும் கொண்டிருந்தார்கள். தகிக்கும் வெய்யிலிலோ, சுடு மணலிலே, கூழாங்கற்களிலே அவர்களைக் கிடத்தி சித்திரவதை செய்யப்பட்டது. உருக்குச் சட்டை அணிவித்துக் கடும் வெயிலில் நிறுத்தி வாட்டப்பட்டது. சூடேறிய உருக்குச்சட்டையின் உஷ்ணத்தால் அவர்களது பரிசுத்த உடல் பாகாய் உருகியது. அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அச்சமயம் அப்பக்கம் போக நேரும் போதெல்லாம், ஹஜ்ரத் ஸுமையா(ரழி) படும் மரணாவஸ்தையைக் கண்டு மனம் உருகுவார்கள். பொறுமையோடிருக்கும்படி உபதேசித்து, மறுவாழ்வில் நிச்சயமாக, சுகமான சுவர்க்க வாழ்வு இதற்குப் பரிகாரமாகக் கிடைக்கும் என்று உறுதி கூறுவார்கள்.

ஒரு தடவை, ஸுமையா(ரழி) அவர்கள் ஓரிடத்தில் நின்று கொண்டிருந்தபோது, மனித மிருகமாகிய அபூஜஹல் அவ்வழியே சென்றவன் அந்த அம்மையாரைக் கண்டுவிட்டான். அவனுக்கு கோபம் பீறிட்டெழுந்தது. வாய்க்கு வந்தவாறெல்லாம் வசைமாரி பொழிந்து தள்ளினான். அவனது கோபம் அடங்குவதற்குப் பதிலாக மேலும் கிளர்ந்தெழுந்தது. எனவே அவ்வம்மையாருக்குக் குறிவைத்து அம்பெய்தினான் அந்தப் பாதகன். அந்த அம்மையார் வேதனை தாளமாட்டாது துடிதுடித்து இறந்தார்.

இஸ்லாத்திற்காக முதன் முதலில் உயிர்த்தியாகம் செய்த பாக்கியம் ஹஜ்ரத் ஸுமையா(ரழி) அவர்களையே சாரும்.

ஜொஹறா ஹுஸைன்-தியத்தலாவ.

## முரசம்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.
அரசியலின் தரம் தாழ்ந்து
அநாகரிகங்கள் மேல் உயர்ந்து
வருவது பற்றி
பல தடவைகள்
சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

நேற்றுவரை
எந்தக் கட்சியிலும் இல்லை
என்று சொல்லிக்கொண்டிருப்பவர்
இன்று
ஏதாவது ஒரு கட்சியின்
பிரசார செயலாளராகக்கூட மாறலாம்.
முக்கிய பிரமுகராக அறிமுகமாகலாம்.

நேற்றுவரை
போதை வியாபாரிகளை
சட்டப் போர்வையால் பாதுகாத்து
சட்டைப் பையை நிரப்பிக்கொண்டவர்
இன்று
சவால்விட்டுப் பேசும்
இனக்காவல அரசியல் வாதியாக
அரிதாரம் பூசி நாடகமாடலாம்.

திருமலையில் ஒரு கூட்டம்.
தவறை சுட்டிக்காட்டிய
முரசின் எழுத்தாளரை
மிரட்டல் தொனியில் எச்சரித்துள்ளது.
புரட்டல் தனங்களை கண்டித்தால்
சனநாயக வேசத்தை கலைந்து
தம் சுய ரூபத்தை காட்டுகிறது.

முரசுக்கு
விழுந்து விழுந்து பேட்டியளித்து
ஆதரவு தருமாறு கோரிக்கையும்
விடுத்த ஒருவர்
அதையெல்லாம் மறந்துவிட்டு
தனது தவறை எடுத்துக்காட்டியவுடன்
முரசை வசைபாடியதுதான்
வேடிக்கை. வெட்கக்கேடு!
அவரைக்
கணக்கெடுக்கத் தேவையில்லை.
அவர் கௌரவத்துக்குரியவருமல்ல.

சகல கட்சிகளையும், சகல நேரத்திலும்
நன்றாகத்தான் சொல்ல வேண்டுமானால்
மக்களுக்கு உண்மை சொல்ல முடியாது.
பாராட்ட வேண்டிய இடத்தில்
பாராட்டுவதும்-தவறுகளை
சுட்டிக்காட்ட வேண்டிய நேரத்தில்
அதைச் செய்து முடிப்பதும்
பத்திரிகையின் பணிகளில் ஒன்று!

பாராட்டும்போது உச்சி குளிர்வதும்
விமர்சிக்கும்போது
சுடுநீரை விழுங்கியதுபோல் துள்ளுவதும்
சம்பந்தப்பட்டவர்களின்
சனநாயக உணர்வு எப்படியானது
என்பதற்கு சாட்சியாகிறது.

எனினும்-
துள்ளுவதும், மிரட்டுவதும்-
மேடையில் நின்று சவால்விட்டு
மைதானம் அதிர வைப்பதுவும்
மிகப் பழமையாகிவிட்ட விஷயங்கள்.

ஆரோக்கியமான அரசியலை வளருங்கள்.
வாழ்த்துவோம் - வரவேற்போம்.
ஆவேசமான நாடகம் வேண்டாம்.

முரசுக்கு யார் மீதும்
தனிப்பட்ட விரோதம் இல்லை.
பொதுப்பட்ட நடவடிக்கைகளில்
தவறுகள் தெரியும் போது
சுட்டிக்காட்ட என்றும் தயங்காது.

முரசிற்கு கிடைக்கும் தகவல்களில்
தவறுகள் இருந்தால் சுட்டிக்காட்டலாம்.
நிச்சயம் திருத்தம் செய்வோம்.
மாறாக-
தெருச் சண்டிய பாணியில்
முறைப்பதும்-முழங்குவதும்- துள்ளுவதும்
முறையுமல்ல;
முரசுக்கு அது ஒரு பொருட்டுமல்ல.
ஏனெனில் அவர்கள் முகவிலாசத்தை முரசறியும்.
■

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கவிதைப்போட்டி இல-46

களம்தேடி வந்த கவிதைகளில்
வெற்றிமுகம் கண்டதுவும், வியக்கப்பட்டவையும்.

### பரிசுக்குரிய கவிதை

**இன்னுமா.... நீ!**

யாசிக்கும்
அன்னையே!
மனிதம்
மரணித்த
சேதியை
இன்னுமா-நீ
வாசிக்கவில்லை?

ரேணுகா றிபாய்தீன்
ஏறாவூர்-02.

### வியக்கப்பட்டவை

**சாந்தியெங்கே!**

ஏந்திய கையும்
ஏமாந்த முகமும் எமக்குத்தானா?
காந்தியம் செத்து
கபடம் நிறைந்த நாட்டில்
சாந்தியெங்கே! சமாதானமெங்கே!

சண்-தங்கராஜா-பெரியகல்லாறு-01.

வன்முறைத் தீயில் வெந்து
வாடிடும் மக்கள் வாழ்க்கை
மலர்ந்திடத் தேவை நாளும்
போர் வெறி கொண்ட மாந்தர்
மனங்களில் அகிம்சை வேதம்.

சு.இரத்தினம்-அக்கரைப்பற்று-07.

**தேடல்**

சக்தியுள்ள நீங்கள் எல்லாம்
சத்தமின்றி போவதால்-ஒருதுளி
சாதமற்ற நாங்களெல்லாம்
சாவைத் தேடிப் போவதா?

பதீனா ரெஸீன்-ஹொறகொட.

**இங்கேதான்**

சமனற்ற
நுகர்வு
ஜனநாயக
நாட்டில்

இராமநாதன் பிரியதர்ஷினி
இரத்தினபுரி.

**தானம்**

சுருண்டு
கிடக்கும்-என்
தேசத்தை
உயிர்ப்பிக்க
(சமா)தானம்
தாருங்கள்.

ஏ.நஸார்
கிண்ணியா-01.



**எதிர்பார்ப்பு**

களப்போரில் கண் இழந்து
கையேந்தி வீதி வந்தேன்
விழுது ஒன்று வளர்வதற்காய்
விழும் நோட்டை நம்பி வந்தேன்.

தெ.லோஜனா-கொழும்பு-15.

**அமைதி வரம்!**

பசிக்கின்ற வயிறுகள்
பாதையிலே யாசிக்கும்.
யுத்தத்தால்-
அழிகின்ற மானிடமோ
ஆண்டவனை யாசிக்கும்.

செ.வாமதேவன்-பெரியகல்லாறு.

**தெருக்கூத்து**

நிகழ்கால நிகழ்வுகளால்
நிதமும் நாம் காணுகின்ற
நிஜமான தெருக்கூத்து.

கே.சத்தியேந்திரா
மட்டக்களப்பு.

**பாராமுகம் ஏன்?**

இந்த
தமிழ்த்தாயும்
கூபாட்சி
கேட்கிறதே!"

தமிழரசன்
இரத்மலானை.

**தாயும் சேயும்**

யுத்தத்தின் விளைவால்
செத்துக் கொண்டு வாழும்
எங்களை
எறெடுத்துப் பார்க்க
மனிதர்-
யாரும் இல்லையா?

எஸ்.எம்.தலிபா-ஓட்டமாவடி.

**மனிதம்**

ஆயுதச் சோலையில் உலகம்,
அகதி வாழ்வில் மனிதம்!

உம்முல் மக்கியா-புத்தளம்.

**தலைவிதி**

போரின் கருவறையில்
உதித்த ஜீவன்கள்!

டி.ஜீவா-திருகோணமலை.

## கவிதைப் போட்டி இல-49



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும், சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பிவையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா 100/=.

*அனுப்பிவைக்க வேண்டிய கடைசித் திகதி 14.05.1994.*

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 49
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்,
கொழும்பு-5

## வாசகர் சாலை

வண்ண வண்ண முகம் கொண்டு புன்னகையுடன் பவனிவரும், எங்கள் முத்தான தினமுரசே! உன் தித்திக்கும் செய்திகள் அனைத்தும் சுவையோ, சுவை. ஆசிரியரின் முரசம் முதல் மகாபாரதம் வரை வெளுத்துக் கட்டுகிறாய். அத்தனையும் பயனுடையவை. பாராட்டுக்குரியவை. உனை நீடூழி வாழ்க என்று வாழ்த்தும்,

சாந்தி நடராசா-பெரியகல்லாறு-02.

▫▫

அன்பின் முரசே,

நீ தரும் அனைத்து ஆக்கங்களும் ஜோர். அதிலும் தகவல் பெட்டி, மருத்துவ விந்தைகள் போன்றவை அருமை. நீ தரும் புதுமைகளை யோசித்தால் உண்மையா பொய்யா என்றுகூட மெய்மறந்து போகின்றேன். இனிமையான தகவல்களையும் சிறுகதைகளையும் தரும் நீ நூறாண்டு காலம் வாழ்க, வாழ்க,வாழ்க...

உன்னை தவறாது வாசிக்கும் இவள்

பிரமிளா பூபதிதாசன்-இறத்தோட்டை.

▫▫

அன்பின் ஐயா,

ஆசிரியனான நான் ஓர் அரசியல் பிரியன், அரசியல் கட்டுரைகளை வாசித்து முடித்த பின்னரே என் ஏனைய கடமை. முரசு வெளியாகியது முதல் இன்றுவரை தவறாது வாசித்து வருகிறேன்.

மகாஓயா மகேந்திரன்
தெகியோவிட்ட.

▫▫

**ஒற்றன் எங்கே?**

அன்பின் தினமுரசிற்கு,

உன் அங்கத்தின் ஒவ்வோர் அம்சமும் தருவதோ தனிச்சுவை. ரசிகனின் கொலைவிழும் நேரம் தூள்கிளப்புகிறது. ஆமா...எங்கே சார் நமது ஒற்றனை காணவில்லை? தகவல் சேகரிக்கப்போய் எங்கேயாவது தர்ம அடி வாங்கிக்கொண்டு விட்டாரோ?

ரசிகை-இக்கிரிகொல்லாவ.

▫▫

**ரசிகனுக்கு கண்டனம்**
**டாக்டரின் வேதனை!**

நலம் நலமே வாழ்க. பின்னி வைத்த கூந்தலில் முல்லைப்பூவை சூடினால் அன்ன நடை பின்னல் போடுமா? சிறு மின்னல் இடை பூவை தாங்குமா? இப்படி கவிநயம் கொண்ட காவியபாடல் மறைந்து இன்று, ஜிக்கு புக்கு ரலயிலே போன்ற தரம் கெட்ட நயம் கெட்ட பாடல்கள் குவியும் காலத்திலே, நான் தினமுரசு படிக்க காரணமே (தருவது ரசிகன்) அப்படி ஒரு இலக்கிய நயம்!

ஆனால் இம்முறை இலக்கிய நயம் கண்டு (முரசு 48) கொதித்து போனேன். என்ன நடந்தது ரசிகனுக்கு? அவருக்கும் இசைஞானியின் குணம் வந்துவிட்டதா? எங்கே அந்த பழமையான, சோழ சாம்ராஜ்ஜியம்? எங்கே செண்பகவல்லி? எங்கே யமுனை நதி? எங்கே பால் பொழியும் நிலவு? தயவு செய்து இன்றோடு திருந்தி விடுங்கள். என்னை என் நினைவுகளை மீண்டும் மன்னர் காலத்துக்கு கொண்டு போகும்படி அன்புடன் வேண்டுகிறேன். எனக்காக மட்டும் அல்ல. என்னைப்போல இன்று பல இரசிகர்கள் இப்படி மன ஆதங்கத்தில் இருக்கலாம்.

என் தொழிலின் எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியில் இதனை எழுதுகிறேன். எதிர்வரும் கிழமை நிச்சயமாக தரும் ரசிகன் என்னை ஏமாற்ற வேண்டாம்.

டாக்டர் என்.எல்.ரட்ணஜோதி
கொழும்பு-13.



ப்ரிய முரசே! உன்னில் வரையும் ரசிகன் அபாரம். நடுநிலை உன் மாபெரும் வளர்ச்சிக்கு ஓர் உறுதுணை. தொடரட்டும் உன் பாணியில் அமைந்த பணி.

கரம்பை-எம்.எச்.எம்.ஹாரிஸ்-புத்தளம்.

▫▫

தெரியாத அரசியல் செய்திகளை தெரியவைக்கும் முரசே!

நீ வாரம் வாரம் அரசியல் செய்திகளை பொன்னான முரசிலே பதிவதற்கு எனது நன்றியுடன் பல்லாண்டு காலம் வாழ்வதற்கு எனது வாழ்த்துக்கள் கோடி.

பீ.எம்.சாகிர் ஹுஸைன்-பேருவளை.

▫▫

அதிரடி அய்யாத்துரை, சினிவிசிட், கொலைவிழும் நேரம் அம்சங்கள் மூன்றும் கனிந்த கவிதை வரிகள் கொண்டு மென்மேலும் தனிமெருகு பெறுகின்றன. இவைகளுக்கு கவிப்பிரியர்கள் என்ற வகையில் எங்கள் ஸ்பெஷல் பாராட்டுக்கள்!

கோட்டைமுனை முத்துமணி- பதுளை.

▫▫

அன்பின் முரசே,

வாரந்தோறும் நீ அள்ளித்தரும் விஷயங்களைக் கண்டு என் மனம் மகிழ்ச்சி கொள்கிறது. மகாபாரதம் பார்க்கத் தவறிய நாட்களில் உன்னில் பிரசுரமாகும் கதை வசனத்தை வாசித்து தொலைக்காட்சியில் பார்த்த நிறைவை அடைகிறேன். உன் நற்பணி தொடர என் வாழ்த்துக்கள்.

கருப்பசாமி பத்மாவதி-இறக்குவானை.

▫▫

அன்பின் முரசே!

நீ வாரம் ஒவ்வொரு நாளும் மலர்ந்து மலர்ந்து என் இதயத்தை கொள்ளை கொண்டு வருபவற்றுள் ரசிகனின் கொலை விழும் நேரம் அத்துடன் இலக்கிய நயம், மகாபாரதம், சினிவிசிட், தேன் கிண்ணம் அரசியல் அலசல், ஆஹா! பிரமாதம்.

என்.ருமெய்னா-கிண்ணியா-04.

▫▫

அன்பின் முரசே,
பரிசு தரும் முரசே,
பகுத்தறிவு வளர்க்கும் முரசே,
.படிப்பினை நல்கும் முரசே, என் இனிய தினமுரசுக்கு எனது இனிய பாராட்டுக்கள்.

எம்.திலகவதி
உடபாகை-பொரலங்கட.

▫▫

என் இரத்த ஓட்டத்தில்
சுழலும் உயிர் முரசே
வாரமொரு முறை வந்து
உன் புன்னகை தவழும்
இனிய முகத்தை காட்டினால்தான்
எனது சந்தோஷப் பூக்கள் மலர்கின்றன.
உனது புகழ் மேலும் வளர வாழ்த்துகிறேன்.

எம்.ஆர்.பஹ்மிதா-முள்ளிப்பொத்தானை.

▫▫

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# பாரிய போருக்கு படையினர் திட்டம்!

# யாழ் மேதினக் கூட்டத்தில் புலிப் பிரமுகர் பேச்சு!!

## பிரபா உட்பட முக்கிய பிரமுகர்கள் கலந்துகொள்ளவில்லை

மே தினத்தை முன்னிட்டு யாழ் குடாநாட்டில் புலிகள் அமைப்பினர் மேதின ஊர்வலம் நடத்தினார்கள்.

யாழ்ப்பாணத்தில் உள்ள மருதனா மடம் சந்தியில் ஆரம்பித்த ஊர்வலம் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்தை சென்றடைந்தது.

சுமார் நாலு மைல் நீளமான அந்த ஊர்வலம் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தை சென்றடைய இரு மணித்தியாலங்கள் எடுத்தது.

ஊர்வலத்தில் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் உருவப்படங்கள் கொண்டு செல்லப்பட்டன.

புலிகள் அமைப்பின் பல்வேறு அணிகளும், யாழ் குடாநாட்டில் உள்ள அரசாங்க ஊழியர்களும் ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

பிற்பகல் நாலு மணியளவில் யாழ் பல்கலைக்கழக மருத்துவபீட மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் புலிகள் அமைப்பின் பிரமுகர்கள் உரையாற்றினார்கள்.

புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனோ, அல்லது இரண்டாம் கட்ட தலைவர்கள் எவருமோ கூட்டத்தில் சமூகமளிக்கவில்லை.

புலிகள் அமைப்பின் யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் இளம்பரிதி அங்கு உரையாற்றும்போது,

"அரசாங்கம் பாரிய போர் ஒன்றை எம்மீது திணிக்க முற்படுகிறது. அதற்காக பெருமளவில் படைகளையும், ஆயுதங்களையும் குவித்து வருகிறது.

"எந்தவொரு தாக்குதல் வந்தாலும் எமது போராட்டம் வெற்றி பெறும்" என்று கூறினார்.

ஈரோஸ் அமைப்பின் முன்னாள் தலைவரும், தற்போது அந்த அமைப்பை கலைத்துவிட்டு புலிகள் அமைப்போடு இணைந்துள்ளவருமான வே.பாலகுமார் அங்கு உரையாற்றும்போது,

"அரசாங்கம் தற்போது தளர்ந்துவிட்டது. இது தமிழ் மக்களுக்கு நல்ல காலம் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இராணுவத்தினர் தம்மை பலப்படுத்தி வருகின்றனர். ஆனால் இறுதிவரை நாம் போராடியே தீருவோம்."

என்று தெரிவித்தார். கூட்டத்தில் பேசிய பலரும் விரைவில் பாரிய இராணுவ நடவடிக்கையை எதிர்பார்ப்பது போலவே கருத்துத் தெரிவித்தனர்.

தமது மேதின ஊர்வலத்தில் பங்கு கொள்ளுமாறு அரசாங்க ஊழியர்களை புலிகள் முன்னதாகவே கோரியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பலாலியிலும், காங்கேசன்துறையிலும் படையினர் பெருமளவில் வந்து சேர்வதாகவும் புலிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விமானப் படையினரின் புக்காரா விமானம் யாழ்குடா நாட்டு கரையோரப் பகுதிகளில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதாகவும் யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசுக்கும்-புலிகள் அமைப்புக்கும் இடையே பேச்சுக்களுக்கான ஒரு நிலை தோன்றியுள்ளது போலவும், ஈரோஸ் சுயேச்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் வரவுள்ளனர் என்றும் சில பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டன.

தற்போது அவ்வாறான முயற்சி எதுவும் கிடையாது என்று உறுதியாகத் தெரிகிறது.

"சமாதானத் தீர்வு தற்போது வராது. யுத்தமே வரும்" என்று புலிகள் அமைப்பினர் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமது கூட்டங்களிலும், கருத்தரங்குகளிலும் கூறி வருகின்றனர்.

# மட்டக்களப்பில் சீராக இல்லை சிவில் நிர்வாகம்! வடக்கு-கிழக்கை பிரிக்கவேண்டாம்! வருகிறது பிரேரணை!!

## மட்டக்களப்பு மேயர் செழியன் தெரிவிப்பு

(அலுவலக நிருபர்)

"மட்டக்களப்பில் சிவில் நிர்வாகம் முற்றுமுழுதாக நடைபெறுகிறது என்று கூறமுடியாது. படிப்படியாக முன்னேற்றம் காணக்கூடிய வாய்ப்புக்கள் தென்படுகின்றன."

இவ்வாறு மட்டக்களப்பு மாநகர மேயர் செழியன் பேரின்பநாயகம் முரசுக்கு அளித்த பிரத்தியோகப் பேட்டியின்போது தெரிவித்தார்.

"சிவில் நிர்வாகம் சிறப்பாக உள்ளது என்று கூறமுடியாவிட்டாலும், மக்கள் தமது அன்றாட அலுவல்களை நடத்தக்கூடிய நிலை இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை"

என்றும் அவர் தெரிவித்தார்.

மாநகர மேயராக பதவி ஏற்றுக்கொண்ட பின்னர் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி அவர் விளக்கிக் கூறும்போது,

"மேயர் பதவியை ஏற்றுக்கொண்டு பல வாரங்களாகிவிட்ட போதும்,எனது அலுவலகத் திற்கோ, அல்லது எனது இல்லத்திற்கோ இதுவரை தனியான தொலைபேசி வசதிகூட ஏற்படுத்தித் தரப்படவில்லை. இராணுவத் தொடர்பு அதிகாரியின் ஒப்புதல் வேண்டும் என்று தொலைத் தொடர்பு அதிகாரிகள் கூறுகிறார்கள்.

"நகர மேயர் என்பவர் சிவில் நிர்வாகத்தில் மிக முக்கிய இடத்தை வகிப்பவர்.

"ஆனால் அரசாங்க அதிகாரிகள் நடத்தும் கூட்டங்களுக்கு உரிய முறையில் அழைப்பு அனுப்பப்படுவதில்லை. கடைசி நேரத்தில் யாராவது ஒருவரை அனுப்பி கூட்டத்தில் வந்து கலந்து கொள்ளுமாறு கேட்கின்றனர்.

"சமீபத்தில் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் மட்டக்களப்புக்கு வந்திருந்தார். அதிகாரிகளையும் பாராளுமன்ற உறுப்பினர் களையும் அழைத்து ஒரு மாநாடு நடத்தினார். ஆனால் எனக்கு உரிய முறையில் அழைப்பு அனுப்பப்படவில்லை. இறுதி நேரத்தில் ஒரு பொலிஸ் அதிகாரியை தூதனுப்பி எனக்கு அழைப்பு விடுத்தார்கள்.

"கடந்த பத்தாண்டுகளாக மாநகர சபையில் ஒரு தேக்க நிலை இருந்து வருகிறது.

மக்களது வரிப்பணத்தில் கட்டப்பட்ட நகர மண்டபத்துக்கு பிரதிநிதிகளோ, பொது மக்களோ செல்ல முடியாத நிலை இருந்து வருகிறது. பாதுகாப்புப் படையினர் பாதுகாப்புக்காக அதனை தடைப்படுத்தி யுள்ளனர். இப்பொழுது சபை இயங்கும் இடம் பொருத்தமானதல்ல.

"நகர மண்டபத்தையும், வாடி வீட்டையும் திரும்பத் தருமாறு வற்புறுத்தி வருகிறோம்.

"கடந்த காலத்தில் பல இலட்ச ரூபா செலவில் வாங்கப்பட்ட கருவிகள் எங்கோ மறைந்துவிட்டன. அதனால் போதிய ஊழியர்கள் இருந்தும் கடமையாற்ற முடிய வில்லை" என்றும் மட்டக்களப்பு மேயர் ஆதங்கம் தெரிவித்தார்.



தற்போதைய அவரது அரசியல் சார்பு நிலை பற்றிக் கேட்டபோது, "நான் ஆரம்பத்தில் தமிழரசுக் கட்சியில் இணைந்து தொண் டாற்றியவன். சிங்கள சிறி அழிப்பு போராட் டத்தில் சிறை சென்றவன். ஆனால் இன்று எந்தவொரு அரசியல் கட்சியிலோ அல்லது இயக்கத்திலோ அங்கம் வகிப்பவனல்ல. ஆனால் நான் நகர மேயராவதற்கு இரண்டு இயக்கங்கள் காரணமாக இருந்துள்ளன. முஸ்லிம் காங்கிரசும் உதவியது. எனினும் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகள் நிறை வேறவும், நிரந்தர அமைதி ஏற்படவும் அனைவரோடும் இணைந்து செய்ற்படுவேன்.

"இன்றைய நிலையில் அரசியல்வாதி களால் மட்டும் அமைதியை ஏற்படுத்த முடியாது. சமயப் பெரியார்கள் சமாதான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். வணக்கத்துக் குரிய கென்னத் பெர்னாண்டோ பலமுறை யாழ் சென்று வந்துள்ளார். அவரையும் நான் சந்தித்து பேசியுள்ளேன். அவரது முயற்சி களுக்கு பௌத்த பீடாதிபதிகள் உட்பட சகல மதத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

"இன்றுள்ள நிலையில் அரசாங்கமோ இனவாதக் கட்சிகளோ சமாதானத்துக்கு வழிகாணப் போவதில்லை என்றே கருதுகிறேன்" என்று தெரிவித்தார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தை பிரிக்கும் முயற்சிக்கு எதிராகவும், தொடர்ந்தும் ஒரே நிர்வாக அலகாகவே வடக்கு-கிழக்கு மாகாணம் இருக்கவேண்டும் என்று வலியுறுத்தியும் மிக விரைவில் ஒரு பிரேரணையை மட்டக்களப்பு மாநகரசபையில் கொண்டு வரப்போவதாகவும் மேயர் செழியன் பேரின்பநாயகம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையில் அங்கம் வகிக்கும் ஐ.தே.கட்சி உறுப்பினர்கள் உட்பட அனைவரும் தமிழ் பேசும் மக்களது அரசியல் அபிலாசைகளுக்கு மாறாக நடந்துகொள்ள மாட்டார்கள் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார்.

## பிரேமாவைக் கொன்றவருக்கு ஜெயவேவா! பொது ஜன ஐக்கிய முன்னணியின் மேதின கோஷம்!!

(கொழும்பு நிருபர்)

மே தினத்தை முன்னிட்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியினர் மிக நீண்ட பிரமாண்டமான மேதின ஊர்வலத்தை கொழும்பில் நடத்தினார்கள்.

மேதின ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவை கண்டித்து கோஷங்களை எழுப்பியதோடு, பிரேமதாசா கொலைக்கு காரணமானவர் எனப்படும் 'பாபு'வை வாழ்த்தியும் கோஷங்கள் எழுப்பினார்கள்.

"பாபு நிரந்தரமாக அமரத்துவம் அடைந்துவிட்டார்." "தேசிய வீரர் பட்டியலில் பாபுவும் சேர்க்கப்பட்டுவிட்டார்." போன்ற கோஷங்கள் சிங்கள மொழியில் எழுப்பப்பட்டதுடன், 'பாபு'வை பாராட்டும் சுலோக அட்டைகள் சிலவற்றையும் காணக்கூடியதாக இருந்தது.

"மறைந்த அரசியல் தலைவர் ஒருவரை அவமதிப்பது சரியல்ல" என்று பார்வையாளர்கள் சிலர் அபிப்பிராயப்பட்டதையும் அவதானிக்க முடிந்தது.

எனினும், பொதுஜன ஐக்கிய முன்னணித் தலைவர்கள் எவரும் அவ்வாறான கோஷங்களையோ, சுலோக அட்டைகளையோ கண்டுகொள்ளாதது போல் நடந்து கொண்டனர்.

## பொது இடத்துக்கு உரிமை கோரும் பெண்மணி

### பிரச்சனையை தீர்க்க பொலிசாராலும் முடியவில்லை

(திருமலை நிருபர்)

ஜமாலியா வீடமைப்புத் திட்டத்தில் உள்ள வீடமைப்பு அபிவிருத்திச் சங்கத்துக்கு சொந்தமான கட்டடம் ஒன்றுக்குப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண்மணியொருவர் உரிமை கோருவதால் விவகாரம் இராணுவ முகாம்வரை சென்றுள்ளது.

1976ம் அண்டு ஆரம்பிக்கப்பட்ட இச் சுய வீடமைப்புத் திட்டத்திலுள்ள 75 குடும்பங்களில் 67 குடும்பங்கள் கையெழுத்திட்டு விண்ணப் பித்ததன் பேரில், பிரித்தானியர் காலக் கட்டடமொன்று வீடமைப்பு அதிகார சபையால் அப்பகுதி வீடமைப்பு அபிவிருத்திச் சங்கத்திடம் பொதுத் தேவைக்காகக் கையளிக்கப்பட்டது.

நூலகம், தமிழ்சிங்கள மொழிகளிலான பாலர் பாடசாலை, அரபுப் பாடசாலை என்பவை நடைபெறும் அக்கட்டடம் தும்புத் தொழில் நடத்தத் தன்னிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என அப் பெண்மணி கோரியதால் ஏற்பட்ட சர்ச்சை பொலிசாரின் கை மாறி இராணுவம் வரை சென்றுவிட்டது.

13 சிங்களக் குடும்பங்களில் எல்லோரும் சங்கத்துக்கு ஒத்துழைக்க இப் பெண்மணி தனித்து நிற்கும் காரணம் புரியவில்லை என முரசுக்குத் தெரிவித்த சங்கச் செயலாளர் இப் பெண்மணி பொதுக்கட்டடம் அமைந்த காணியில் இரண்டு பேர்ச் அளவைப் பிடித்து தன் காணியுடன் சேர்த்து வேலி போட்டுள்ள தாகவும் கூறினார்.

## தமிழ் கட்சிகள் திருமலையில் தரிப்பு! ஏட்டிக்குப் போட்டியான பிரசாரங்கள்!!

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னர் தமிழ் அரசியல் கட்சிகள் திருகோணமலையில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணியும் நீண்டகாலத்திற்கு பின்னர் தனது அரசியல் நடவடிக்கைக்கு ஆரம்ப விழாவை திருகோணமலை நகரில் நடத்தியது.

டெலோ அமைப்பும் தனது கட்சி மாநாட்டை திருகோணமலையில் நடத்தி யிருக்கிறது. ஏட்டிக்குப் போட்டியான பிரசாரங்களும் நடைபெற்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கில் "அமிர் கொலைக்கு காரணமானவர்களை நாம் கண்டித்தோம். கண்டித்துக்கொண்டே இருக்கிறோம்" என்று முன்னாள் கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு.ஆனந்த சங்கரி கூறினார்.

உடனே அன்றிரவே டெலோவின் பொதுக் கூட்டத்தில் "கூட்டணியினர் பொய் சொல்கிறார்கள். அமிர் கொலைக்கு காரணமானவர்களை கூட்டணியினர் இதுவரை கண்டித்ததே கிடையாது" என்று பதில் சொல்லப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம், "நாங்கள் இரத்தம் சிந்திப் போராடினோம். கூட்டணியினர் இப்போது வந்து உரிமை கொண்டாடப் பார்க்கிறார்கள்." என்று கோபப்பட்டுக் கொண்டார்.

மே தினத்தன்று புளொட் அமைப்பினர் திருகோணமலையில் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள். மே 2ம் திகதி இசை நிகழ்ச்சியோடு பொதுக் கூட்டமும் நடத்தினார்கள்.

ஈ.பி.டி.பி.யினர் மேதினத்தை முன்னிட்டு நகரெங்கும் சுவரொட்டிகளை ஒட்டி யிருந்தனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப்.திருகோணமலையில் அலுவலகம் ஒன்றை திறக்கும் முயற்சியில் ஈடுபட்டது. பின்னர் வேறு ஒரு தமிழ் அமைப்பு கிளப்பிய பிரச்சனையால் அந்த முயற்சி தற்காலிகமாக கைவிடப்பட்டது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் திருகோணமலையில் தமிழ் கட்சிகள் தமக்கிடையேயான பலப்பரீட்சையில் இறங்கக்கூடும் என்று தெரிகிறது.

அனைத்தையும் அமைதியாக அவதானித்த படி உள்ளார்கள் திருகோணமலை நகர மக்கள். ஏட்டிக்குப் போட்டிகளில் அவர்களுக்கு ஆர்வம் இல்லை.

## மறக்கப்பட்ட தந்தை? கவனிக்கப்படாத நினைவுத் தூபி



யாழ்ப்பாணத்தில் புலிகள்-அமைப்பினர் தமது பலியான உறுப்பினர்களுக்கு நினைவுத் தூபிகளை நிறுவி வருகின்றனர். அந்த நினைவுத் தூபிகள் பராமரிக்கப்பட்டும் வருகின்றன.

ஆனால் யாழ்ப்பாண நகரில் நிறுவப் பட்டுள்ள தந்தை செல்வநாயகத்தின் நினைவுத் தூபி மட்டும் கவனிப்பாரற்று காணப்படுகிறது.

கடந்த மாதம் 26ம் திகதி தந்தை செல்வநாயகத்தின் நினைவு தினத்தை முன்னிட்டு நினைவுத் தூபியுள்ள பகுதிகளில் நிறைந்து கிடந்த புல் பூண்டுகள், குப்பைகள் என்பன அகற்றப்பட்டன.

தந்தை செல்வா நினைவுக் குழுவினரால் நினைவுத் தூபியில் அஞ்சலி நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது. அந்த அஞ்சலி நிகழ்ச்சியில் புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகர்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை.

தந்தை செல்வா நினைவு தினத்திற்கு புலிகள் அமைப்பினரின் பத்திரிகைகளிலோ, அல்லது வானொலியிலோ முக்கியத்துவம் எதுவும் வழங்கப்படவும் இல்லை.

## மன்னாரில் கல்வி நிலை மோசம்!

மன்னார் மாவட்டத்தில் கல்வி நிலை மிக மோசமடைந்துள்ளது.

கா.பொ.த.சாதாரண, கா.பொ.த உயர்தர பரீட்சைகளில் மன்னார் மாணவர்களின் பெறுபேறுகள் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடும்போது வீழ்ச்சியடைந்துள்ளன.

மன்னார் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் 20க்கு மேற்பட்டவை மூடப்பட்ட நிலையில் உள்ளன.

தற்போது இயங்கி வரும் பாடசாலைகளிலும் ஆசிரியர் பற்றாக்குறை, தளபாட, உபகரண பற்றாக்குறைகள் என்பவை நிலவுகின்றன.

மாணவர்கள் வரவும் திருப்திகரமாக இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் கடந்த 27 வருடங்களாக மாந்திரீகத் துறையில் உண்மையான, நிலையான சேவையை ஒட்டியே தற்பொழுது எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட தனியார்துறையாக (PVT. LTD) உருவாகியுள்ளது. இதன் சொத்து அனைத்துமே சிறீ துர்க்கா அம்மனுக்கே.

இதைவிட உண்மையை அறிய நேரில் வாருங்கள்.
உங்கள் குறை என்ன?
வாழ்வில் நிந்திப்பா?
வறுமையில் தவிப்பா?
இஷ்ட தேவவைகளில் குறையா?
இஷ்டப்பட்டவனையோ,
இஷ்டப்பட்டவளையோ
தீர்க்கமாகவே அடைந்து தீர வேண்டுமா? இன்னலுக்குப் பின் இன்னலாக வரும் தறுவாயில் எதிர் நீச்சலுக்கு ஏணிப்படியாக பற்பல உற்சாடனங்கள் உண்டு.
இன்னும் வசியத் தொப்பி, தீர்க்க முடியாது என முடிவெடுக்கப்பட்ட ஆஸ்துமா நோய், தீராத நோய்கள் அனைத்துக்கும் அம்மனிடம் வாருங்கள்.



கொழும்பு கொட்டாஞ்சேனை சிறி முத்துமாரி அம்மன் கோவில் அருகிலும், பிக்கரிங்ஸ் வீதி ஊடாகவும், சிறி குணானந்த மாவத்தை உபதபால் காரியாலயத்தின் எதிரிலும் அமைந்துள்ள இடத்தில் மாதந்தோறும் 20முதல் 31 வரை நிச்சயம் சேவையில் இருப்பேன். இத்தினங்களில் பூஜைகள், ஆராதனைகள், அன்னையின் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதங்கள் பெறலாம். அதுமட்டுமல்ல. எமது பிரிவில் கைரேகை நிபுணத்துவம், வாழ்க்கைச் சுவடி சாஸ்திரம், ஜாதகக் குறிப்பு, எண் ஞானக் குறிப்பு, இனியும் வேறு என்ன என்பதற்கு நேரில் வரவும்.

***வறியவர் எனக்கண்டால் எமது ஸ்தாபனத்தில் தனி இடம் உண்டு.***

***தலைமைப்பீடம்***

P.K.சாமி JDGAN (மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: *052-2508, 052-3093*

**கொழும்பில்-** வினோத் இன் (VINNODH INN)
இல: 33, 3ம் மாடி
சிறி குணானந்த மாவத்தை
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: *078-71592, 078-71243*

**வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.**
**FAX: 0094 2508, 0094 3093**

*நுவரெலியா மாவட்ட மக்களின் நலனைக்கருதி*
P.K. Samy Associates (PVT) Ltd *ஸ்தாபனத்தால்*
*அறிமுகப்படுத்தும் புதிய தொலைத்தொடர்புச் சேவை*
**இல: 21, பஸ்தரிப்பு நிலையம்**
**நுவரெலியா.**
*நினைத்த நேரத்தில் நினைத்த இடத்தில் உலகின் எப்பாகமும் உள்ளூர்களெங்கும் தொடர்புகொள்ள வேண்டுமா?*
*இனிமேல் கவலை வேண்டாம். எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.*
**தொலைபேசி: 052-2508, 052-3093**

### ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்த தினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதி களையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

**ஞான சுந்தர வைத்தியசாலை**
*187, செட்டியார் தெரு,*
*கொழும்பு 11,*
*போன்: 421398*

**கண்டியில்**
**A.H.M.நஸீர்** B.Com. (SP) Hon's
*ஆசிரியரின்*
**COM & FIN - 94**
முழுநாள் கருத்தரங்கு வகுப்பு
9.5.94 திங்கள் 8.45–3.45
**தொழிற்சங்கம்/தொழிலாளர் நலன் & வரிகள்**
முழுநாளுக்குமான கட்டணம் 50/- மட்டும் (TUTE இலவசம்)
**NCI** TUTORIAL COLLEGE
127, KOTUGODELLE VEEDIYA, KANDY.

### முகவர்கள் தேவை

காலி, இந்துருவ, கொஸ்கொடை, சுகங்குல்ல, பலப்பிட்டி, அம்பலாங்கொட, ஹிக்கடுவ, தொடந்துவ, பென்தொட்ட, தெனியாய, நெலுவ, சீதேலிய, மிரிஸ்ஸ, அகங்கம, கம்புறுகமுவ, மாத்தறை, கந்தர, தங்காலை, அம்பாந்தோட்டை, எம்பிலிப்பிட்டிய, எகலியகொடை, அவிசாவளை, ஹஸ்வெல்ல, மீப்பே.

மேற்காணும் ஊர்களில் தினமுரசு வாரமலர் விற்பனை செய்வதற்கு முகவர்கள் தேவைப்படுகின்றார்கள். நியாயமான விற்பனைத் தரகு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு—
விநியோக மேலாளர்
இல.88/14, சோமாதேவி பிளேஸ்,
கிருலப்பனை, கொழும்பு-05.

CIRCULATION MANAGER
NO: 88/14, SOMADEVI PLACE,
KIRILAPONE, COLOMBO-5.
PHONE: 820265


## நல்ல திரைப்படங்கள் கண்ணில் படவில்லையா? தொலைக்காட்சி தமிழ் பகுதி தூங்குகிறதா?

ரூபவாஹினியில் அத்தி பூத்தாற்போல மாதமொருமுறை தமிழ்த் திரைப்படம் காண்பிக்கப்படுகிறது. எனினும் ரூபவாஹினி தமிழ் இரசிகர்களை ஏனோதானோ என்று நினைத்துள்ளது போலும். 16.04.94 காண்பிக்கப்பட்ட தமிழ்த் திரைப்படத்தைப் பார்க்க ஆவலுடன் கூடியிருந்த நமக்கு ஏமாற்றமே காத்திருந்தது. காரணம் அன்றைய தினம் காண்பிக்கப்பட்ட 'சலங்கை ஒலி' திரைப்படம் மூன்று மாதங்களுக்கு முன்னர் ரூபவாஹினியில் காண்பிக்கப்பட்டதாகும்.

எத்தனையோ நல்ல பல தமிழ்த் திரைப்படங்கள் இருக்கும்போது ஏற்கனவே காண்பிக்கப்பட்ட படங்களைத்தானா திரும்பத் திரும்ப இடம்பெறச் செய்ய வேண்டும்? மேலும் ஆங்கிலத் திரைப்படங்கள் மாதம் எண்முறையும், சிங்களத் திரைப்படங்கள் அவ்வப்போதும் காண்பிக்கப்படுகின்றன. இருந்தும், மாதமொரு முறை காண்பிக்கப்படும் தமிழ்த் திரைப்படங்களை நல்லவையாகத் தெரிவு செய்தாலென்ன?

தமிழ் நிகழ்ச்சிகள்தான் ரூபவாஹினியில் பஞ்சம். என்றாலும் மாலை 6.30 தமிழ்ச் செய்தியறிக்கைக்குப் பின் இடம்பெறும் CNN செய்தியின் சிங்கள மொழியாக்கம் உடனே தரப்படுகிறது. ஏன் அதைத் தமிழிலும் மொழிபெயர்த்துத் தந்தாலென்ன? ரூபவாஹினி தமிழ் நிகழ்ச்சிப் பிரிவு இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டால் தமிழ் இரசிகர்கள் ரூபவாஹினிமீது வெறுப்படையமாட்டார்கள்.

**செல்வி.ஏ.எச்.வசந்தி-மட்டக்களப்பு.**

### இராஜதந்திரி வருத்தம்

**கடந்த தினமுரசுசில் அரசியல் அலசல் பகுதியில், யாழ் பல்கலைக்கழக வேந்தர் நடராஜா என்பதற்குப் பதிலாக துணைவேந்தர் நடராஜா என்று தவறுதலாக இடம் பெற்றுவிட்டது.**

**தவறுக்கு வருந்துகிறேன்.**

**அன்புடன்**
**-இராஜதந்திரி-**

## அழிந்துபோன வேளாண்மை!

மூதூர் பிரதேசத்தில் அதிகளவு பயிர்ச்செய்கை நிலத்தினைக் கொண்ட பிரதேசமாக விளங்குவது பள்ளிக்குடியிருப்பு ஆகும். இங்கு ஆண்டுதோறும் 600 ஏக்கர் நிலம் நெற்செய்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. இம்முறை தொடர்ந்து பெய்த கடும் மழை காரணமாக சுமார் 500 ஏக்கர் வேளாண்மை அழிந்துவிட்டது. மாரிகாலத்தில் வெள்ளம் அழிப்பதும், கோடை காலத்தில் நீர் இல்லாது பயிர்கள் அழிவதும் இப்பகுதி மக்களின் வறுமைக்கு முக்கிய காரணமாகும். வெள்ள அழிவுப் பணம் கிடைக்கும் என பல விண்ணப்பங்கள் அனுப்பியும் அதற்கான நடவடிக்கை எதுவுமே மேற்கொள்ளப்படவில்லை. எனவே இப்பகுதியில் மீண்டும் பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**க.ரவி-பள்ளிக்குடியிருப்பு.**

## பாதையின் பரிதாப கோலம்

கண்டி மாநகருக்கருகாமையில் அமைந்திருக்கும் கட்டுகஸ்தோட்டை நகரிலிருந்து இனிகலை வரையிலான பிரதான பாதை மிகவும் பரிதாபமாக காட்சியளிக்கிறது.

சமீபத்தில் ஏற்பட்ட பெரு மழையைத் தொடர்ந்து இப்பாதை பள்ளமும், படுகுழிகளுமாகவுள்ளது. இப்பாதையால் வாகனங்களோ துவிச்சக்கர வண்டிகளோ போக முடியாத நிலையினால், இப்பாதையால் சேவையிலீடுபட்டிருந்த பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

ஆகவே இப்பாதையை உடனடியாகத் திருத்தியமைத்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இனிகலை மக்கள் 'தினமுரசு' வாயிலாக கேட்டுக் கொள்கின்றார்கள்.

**இனிகலை முஜீப்-கண்டி.**

## நுளம்புத் தொல்லை

புத்தளம் மாவட்டத்தில் பெய்த கடும் மழையால் சமீரகம, பெருக்குவட்டான் பகுதிகளில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இப்பகுதியில் உள்ள முகாம்களில் வாழும் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதனால் முகாம்களில் வாழும் மக்கள் பயங்கர நோய்களை எதிர்கொள்ள வேண்டி வரும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

எனவே இப் பயங்கர நோய்களிலிருந்து இவர்களைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து இப்பகுதி முகாம்களுக்கு மலேரியாத் தடுப்பு மருந்து தெளித்து இவ் ஆபத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பார்களா என மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

**ஜ.றஸின்-முகாம் 'பி'-முந்தல்.**

## திருத்தப்படாத பாதை

வரலாற்று சிறப்பு மிக்க அனுராதபுரம் நகரில் இருந்து 12 மைல் தூரத்தில் உள்ள நாச்சியாதுவ என்ற முஸ்லிம் கிராமத்திற்கு பிரதான பாதையில் செல்வதற்கு இரண்டு மணித்தியாலங்கள் செலவிட வேண்டி உள்ளது. காரணம் இக்கிராமத்திற்கு செல்லும் பிரதான போக்குவரத்துப் பாதை பள்ளமும், குழியுமாக இருக்கின்றது.

இதனால் ஊர்மக்கள் போக்குவரத்தின் பொழுது பல சிரமங்களுக்கு உள்ளாகின்றனர். அண்மையில் பெய்த பெரு மழையினால் பாதை சேறும் சகதியுமாக உள்ளது. இதைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கண்டிப்பாக கவனம் எடுக்குமாறு ஊர்மக்கள் சார்பாக கேட்டுக்கொள்கிறேன்.

**அபூபௌமி-அனுராதபுரம்.**

# புகார் பெட்டி

## கப்பல் டிக்கட் பெறுவதில் பலத்த சிரமம் சிரமம் போக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

தற்போது கற்பிட்டியிலிருந்து கப்பலில் மன்னார் செல்லும் பயணிகள் பயணச் சீட்டுப் பெறுவதில் பலத்த சிரமத்திற்குள்ளாவதாக புகார் தெரிவிக்கப்படுகின்றது.

திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் மட்டுமே பயணிகளை ஏற்றிக்கொண்டு மன்னார் செல்லும் கப்பலுக்காக நூற்றுக்கணக்கான பயணிகள் கற்பிட்டியில் காத்து நிற்கின்றனர். அதிகாலை 3மணி முதல் வரிசையில் நிற்கும் பயணிகளுக்கு பிற்பகல் 3 மணிக்குப் பின்பே டிக்கட் வழங்கப்படுகின்றது. இதிலும் பல ஊழல்கள் இடம் பெறுவதாக அறிவிக்கப்படுகின்றது.

இக்கப்பலில் சுமார் 60பேர் மட்டுமே செல்ல முடியும். ஆனால் இரு நூறுக்கும் மேற்பட்டவர்கள் டிக்கட்டுக்காக காத்து நின்று ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது. மன்னாரிலிருந்து கற்பிட்டிக்கு வருபவர்களுக்கு எதுவித சிரமமுமில்லை. ஏனெனில் அங்கு ஒரு ஒழுங்கு முறை வகுக்கப்பட்டு அதன் பிரகாரம் டிக்கட் வழங்கப்படுகிறது.

கற்பிட்டியிலும் இவ்வாறான ஒழுங்கு முறை வகுக்கப்பட்டு அதன்படி டிக்கட் வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டால் 12 மணித்தியாலங்கள் காத்து நின்று ஏமாறும் நிலை ஏற்படாது.

அத்துடன் இங்கு சேவையிலீடுபடும் கப்பல் சிலவேளைகளில் செல்வதில்லை. பயணிகளின் தொகைக்கேற்ப கப்பல் வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. ஆயிரக்கணக்கான பயணிகள் தினமும் இப்போக்குவரத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். கப்பல் சேவை அதிகரிக்கப்பட வேண்டிய அவசியம் தற்போது உணரப்பட்டுள்ளதால் இதை சம்பந்தப்பட்டவர்கள் கவனித்து நடிவடிக்கை எடுக்க வேண்டும்.

**மன்னார் நிருபர்**

## முரசின் தவறு

கடந்த ஏப்ரல் 3-9,1994ந் திகதிய தினமுரசு வாரமலரில் 3ம் பக்கத்தில் "கிழக்கிலங்கையில் முத்திரை பதிக்கும் கல்லூரி" எனும் தலைப்பில் வெளியான செய்தியில் தவறான தகவல் ஒன்று பிரசுரிக்கப்பட்டுள்ளதை கவனத்திற்கு கொண்டு வருகின்றேன். அதாவது இச் செய்தியில் கடைசிப் பந்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருந்தது: "1992ல் தனது 125வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடிய இந்நிறுவனம் முத்திரை வெளியிடப்படும் பெருமையைப் பெற்ற "கிழக்கிலங்கையின் முதலாவது கல்வி ஸ்தாபனம் என்ற சிறப்பை பெறுகிறது." இவ் வசனத்தில் "கிழக்கிலங்கையின் முத்திரை வெளியிடப்படும் பெருமையைப் பெற்ற முதலாவது கல்வி ஸ்தாபனம், தி/ புனித சூசையப்பர் கல்லூரி" என தெரிவிக்கப்படுகின்றது. இத்தகவல் தவறானது. அதாவது, கிழக்




கிலங்கையில் இதற்கு முன்னர் முத்திரை வெளியிடப்பட்ட கல்லூரி ஒன்று உள்ளது. அக்கல்லூரியின் பெயர் மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி ஆகும். இக்கல்லூரியே இலங்கையில் பழமையான ஆண்கள் ஆங்கிலக் கல்லூரி என்ற பெருமைக்குரியது. இதன் 175வது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 1987ம் ஆண்டு முத்திரை ஒன்று வெளியிடப்பட்டது.

**சோ.ஜெககோசரன்-தன்னாமுனை.**

## புதிய சபை கவனிக்குமா?

தம்பலகாமம் பிரதேச சபைக்கு உட்பட்ட தம்பலகாமம் கடந்த கால வன்செயல்களினால் பொலிவிழந்து மக்கள் அகதிகளாகி தற்போது மீளக் குடியேறியும் ஏறக்குறைய மூன்று வருடங்களாகின்றன.

ஆனால் இதுவரையும் துண்டிக்கப்பட்ட மின்சார இணைப்புகள் சரிபார்த்துப் பாவனையாளர்களுக்கு வழங்கப்படவில்லை. மீளக்குடியமர்ந்த பகுதிகளான பட்டிமேடு, கோயிலடி, குஞ்சடப்பன்திடல், நாயன்மார்திடல் ஐயனார்திடல், நடுப்பிரப்பன்திடல், புதுக்குடியிருப்பு பகுதி மக்கள் மின்சாரமின்றி மிகவும் கஷ்டப்படுகின்றனர். இதுவரை காலமும் பதவியில் இருந்த தம்பலகாமம் பிரதேச சபைத் தலைவர் உட்பட உறுப்பினர்கள் தத்தமது பகுதி முன்னேற்றத்திலேயே கவனமாக இருந்தார்களே ஒழிய தம்பலகாமம் கிராமத்தின் வீதி புனரமைப்பு மற்றும் மின்சாரம் போன்ற முக்கிய தேவைகளைக்கூட கவனிக்கவில்லை. இப்பகுதி மக்களையும் நினைத்தும் பார்க்கவில்லை. இது இப்பகுதி மக்களை மிகவும் வேதனைக்குள்ளாக்குகின்றது.

ஆகவே தற்போது புதிதாகப் பதவியேற்றுள்ள புதிய பிரதேச சபையினர் இப்பகுதி மக்களின்மீது அக்கறை கொண்டு இப்பகுதியின் முன்னேற்றத்திற்கு உதவி புரிவார்கள் என்றும் வீதிகளைப் புனரமைத்து மின்சார இணைப்புப் பெற உதவி புரிவார்கள் என்ற நம்பிக்கையுடன் மக்கள் எதிர்பார்த்துக் காத்து நிற்கின்றனர்.

**சு.பாஸ்கரலிங்கம்-தம்பலகாமம்.**

## பள்ளிவாசல் கட்ட உதவுங்கள்



மேலே காணப்படுவது 'இஹலஹல்மில்லாவ' எனும் கிராமத்தில் அமைந்துள்ள பள்ளிவாசலின் தோற்றம். சுமார் 15 வருடங்களாக மேற்படி தோற்றத்திலேயே பள்ளிவாசல் காணக்கிடக்கிறது. வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள இவ்வூர் மக்களின் சின்னஞ்சிறிய உதவிகளினால் அண்மையில்தான் இதற்கு ஓட்டினால் வேயப்பட்ட ஒரு கூரையைக் காண முடிகிறது.

இந்தப் பள்ளிவாசல் கட்டுமானப் பணிக்கான முயற்சிகளை பரிபாலன சபையினர் இப்பொழுது ஆரம்பித்துள்ளனர். எனவே இப்புனித பணியை நிறைவு செய்யவேண்டி தங்களாலான உதவிகளை பணமாகவோ, பொருளாகவோ தனவந்தர்களும், பரோபகாரிகளும் கொடுத்துதவலாம்.

அப்படி அனுப்ப விரும்புபவர்கள் 'கஹடகஸ்திகிலிய' மக்கள் வங்கியில் பள்ளிவாசலுக்கான கணக்கு இலக்கத்துக்கோ (க.இல 28465) அல்லது பள்ளிவாசலின் (தலைவர், மஸ்ஜிதுல் பலாஹ், இஹலஹல்மில்லாவ, கஹடகஸ்திகிலிய எனும்) முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

**ஹரீரா அனஸ்-அக்குறணை**

நாரதர்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தென்னாபிரிக்காவின் திருப்பம்! இங்கும் ஏற்படுத்துமா மாற்றம்?

தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கலுக்கு எதிராக நடந்த போராட்டத்திற்கு வயது அதிகம். இழப்புக்களும் எக்கச்சக்கம்.

ஆனாலும், வெள்ளையினம் தனது ஆதிக்கத்தை சமரசத் தீர்வாக விட்டுக்கொடுத்தது பெரிய ஆச்சரியம்தான்.

பெரும்பான்மை கறுப்பின மக்களை சிறுபான்மை வெள்ளையர் இத்தனை காலம் அடக்கியும், ஒடுக்கியும் கட்டிப்போட்டும் வைத்திருந்தனர்.

நம்நாட்டிலோ அதிகாரத்தை பகிர்ந்து கொடுப்பதே ஒரு பெரும் பிரச்சனையாக இருந்து வருகிறது.

மாகாண சபைகள் என்னும் புதிய வடிவத்தை அறிமுகப்படுத்திவிட்டு, அதிகாரத்தை மட்டும் பகிர்ந்து கொடுக்காமல் இருந்து வருகிறார்கள்.

ஆனால், தென்னாபிரிக்காவில் தனது முழு அதிகாரத்தையும் வெள்ளையினம் விட்டுக்கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

ஜனாதிபதி டி.கிளார்க் துணிச்சலாக மேற்கொண்ட அரசியல் முடிவு - நீண்ட நெடுங்கால அநியாயத்துக்கு, இன ஒதுக்கலுக்கு முடிவு' கட்டியது.

அங்கே சிறுபான்மை பெரும்பான்மையை ஒடுக்கியது.

இங்கே பெரும்பான்மை சிறுபான்மையை ஒடுக்கி வைத்திருக்கிறது.

பெரும்பான்மை இனமாக இருந்து கொண்டே விட்டுக்கொடுக்கப் பயப்படுகிறார்கள்.

மத்திய ஆட்சி அதிகாரத்தை கையில் வைத்துக்கொண்டே ஏனைய அதிகாரங்களை பகிர்ந்து கொடுக்கப் பயப்படுகிறார்கள்.

ஆனால் பல்லாண்டுகளாக ஆட்சியில் இருந்து பெரும்பான்மையினரை படாதபாடு படுத்திய சிறுபான்மை இனம் முழு அதிகாரத்தையும் கைமாற்றுகிறது.

முன்னர் நடந்த கொடுமைகளுக்கு எல்லாம் பழி தீர்ப்பார்கள்.......

அவர்களோ பெரும்பான்மை, நாமோ சிறுபான்மை. அவர்களிடம் அதிகாரம் போனால் எம்மை இருந்த இடம் தெரியாமல் நசுக்கி விடுவார்களே................

என்றெல்லாம் பயந்து ஒப்பாரி வைக்காமல் கறுப்பின பெரும்பான்மையிடம் ஆட்சி அதிகாரத்தை கொடுக்க வெள்ளையின ஜனாதிபதியே முடிவு செய்தார்.

ஆனால், தமிழ் பேசும் மக்கள் கேட்பதையெல்லாம் கொடுத்தால் பெரும்பான்மை இனம் முழங்காலில் நிற்க வேண்டி வரும் என்று இங்கே பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜனாதிபதியோ இனப்பிரச்சனையே இங்கே கிடையாது என்று தென் மாகாணசபைத் தேர்தல் வரை பேசிக்கொண்டிருந்தார்.

அங்கே; இன ஒதுக்கலை முடிவுக்கு கொண்டுவர தேர்தல் நடத்த ஜனாதிபதி டி..கிளார்க் முடிவு செய்தார்.

இங்கே, தேர்தல்களில் வெற்றிபெறுவதற்காக இனவாதம் பேசப்படுகிறது.

இன்று-நேற்றல்ல, கடந்த பல ஆண்டுகளாக அதிகாரத்திற்கு வர விரும்பிய கட்சிகள் இனவாதம் பேசியபடிதான் பதவிக்கு வந்தன.

நியாயமாக கிடைக்க வேண்டிய- நியாயமாக தனக்குச் சேரவேண்டிய உரிமைகளை கேட்கும் ஒரு சிறுபான்மை இனத்திடம் இங்கே பெரும்பான்மை இனம் பயப்படத் தேவையில்லை.

ஆனால் பயம்கொள்ள வைக்குமளவுக்கு இனவாதம் பேசப்பட்டது.

இங்கே 'மெயின் சுவிட்'சை கையில் வைத்துக்கொண்டே பரவலாக மின்சாரம் கொடுக்க தயங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

மெயின் சுவிட்ச் வேண்டுமென்று சிறுபான்மை இனம் கேட்கவும் இல்லை. 'வெளிச்சத்தை பரவலாக்குங்கள்-

அந்த வெளிச்சத்தில் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு ஒற்றுமையாக இருக்கலாம்' என்றுதான் கேட்கிறார்கள்.

ஐயோ வெளிச்சம் பரவலாகினால் எல்லாம் போய்விடும் என்று இனவாதிகள் சிலர் துள்ளுகிறார்கள்.

திருடர்களும், வழிப்பறிக்காரர்களும்தான் வெளிச்சத்தைக் கண்டு பயப்பட வேண்டும். இருட்டு இருந்தால்தான் அவர்களுக்கு தொழில் நடத்த வசதியாக இருக்கும். தாங்கள் பறித்து வைத்திருப்பதும், பறித்துக்கொள்வதும் யார் கண்ணிலும் படாமல் இருக்க வேண்டுமே என்ற கவலை அவர்களுக்கு.

அதேபோலத்தான் அதிகாரப் பரவலாக்கம் என்ற வெளிச்சத்தை பரவலாக்க விரும்புகிறார்கள் இல்லை.

அந்த வெளிச்சம் பரவினால் தாங்கள் நியாய விரோதமாக பறித்து வைத்திருக்கும் உரிமைகளை கொடுக்க வேண்டி வருமே என்று பயப்படுகிறார்கள்.

ஆனால் தென்னாபிரிக்காவில் மெயின் சுவிட்சைக்கூட வெள்ளை ஆதிக்கம் விட்டுக் கொடுத்துவிட்டது.

விட்டுக்கொடுத்தது என்பதைவிட நியாயமாக யாரிடம் அது இருக்க வேண்டுமோ அவர்களிடம் கொடுத்திருக்கிறது.

ஆனால்-அது சுலபமாக நடக்கவில்லை. வெள்ளையின இனவாதிகள் கொதித்தார்கள்.

தேர்தல் நடத்த விட்டோமா பார் என்று கொந்தளித்தார்கள்.

வன்முறைகளில் பரவலாக ஈடுபட்டார்கள். கறுப்பின மக்களின் பகுதிகளுக்குள் புகுந்து கண்மூடித்தனமாக சுட்டுத் தள்ளினார்கள்.

நீண்ட கால பிரச்சனை ஒன்றுக்கு தீர்வு காணும்போது எதிர்ப்புக்கள் ஏற்படாமல் போகாது.


அதுவும், அதிகாரம் முழுவதையும் ஒரு இனம் விட்டுக்கொடுப்பது என்பது சாதாரண விசயமல்ல.

அனுபவித்தவர்கள், ருசி கண்டவர்கள், அதிகாரச் சுவை கண்டவர்கள், உடனே அதனைத் தூக்கிக் கொடு என்றால் துள்ளத்தான் செய்வார்கள். துடித்தெழத்தான் செய்வார்கள்.

சர்வ கட்சி மாநாடு, சகல கட்சிகளும் ஏற்கக்கூடிய தீர்வு, தெரிவுக்குழு என்றெல்லாம் ஜனாதிபதி டி..கிளார்க்கும் காலம் கடத்தியிருக்க முடியும்.

ஒன்றுக்கு பத்து கட்சிகள் தோன்றி புதிய கருத்துக்களை சொல்ல, அவற்றை சாக்காக வைத்தே காலத்தை இழுத்தடித்து சென்றிருக்கலாம்.

தென்னாபிரிக்க தேசியக் காங்கிரசுக்கும், கறுப்பின ஆதிக்குடிகளை பிரதிநிதித்துவம் செய்யும் 'இங்கத்தா' அமைப்புக்கும் இடையே முரண்பாடுகள் இருக்கின்றன. மோதல்கள் இருக்கின்றன.








அவற்றை காரணம் காட்டி, முதலில் கறுப்பின மக்களுக்குள் பேசி ஒரு முடிவு செய்துவிட்டு வாருங்கள் என்று டி.கிளார்க் கூறியிருக்க முடியும்.

தமிழ்-முஸ்லிம் மக்களுக்குள் உள்ள முரண்பாடுகளை இங்கே பயன்படுத்துவது போல, முதலில் உங்களுக்குள் ஒரு முடிவுக்கு வாருங்கள் என்று கூறப்பட்டது போல அங்கும் டி..கிளார்க் கூறியிருக்க முடியும்.

ஆனால், அப்படிச் செய்யவில்லை. துணிச்சலான அரசியல் தீர்வினை காண்பதற்கு முன்வந்தார்.

அதனால்தான், தேர்தல் பிரசாரத்தின் ஒரு கட்டத்தில், ஜனாதிபதி டி.கிளார்க்கைப் பார்த்து கறுப்பின மக்கள் தலைவர் நெல்சன் மண்டேலா பின்வருமாறு கூறினார்:

"உங்களோடு போட்டியிடுவதையிட்டு நான் கவலையடைகிறேன். உங்கள் முன்னோர்கள் உங்களைப் போல நடந்து கொண்டிருந்தால், இத் தேர்தலில் நீங்கள்தான் ஜனாதிபதியாக வந்திருப்பீர்கள்."

நிச்சயமாக டி.கிளார்க் பாராட்டுக்குரியவர் தான். நெல்சன் மண்டேலா கூறியதை இங்கும் நாம் தென்னிலங்கைத் தலைவர்களை நோக்கிக் கூறமுடியும்.

தந்தை செல்வாவோடு செய்துகொண்ட ஒப்பந்தங்களை கிழித்து குப்பைத் தொட்டிக்குள் போடாமல் இருந்திருந்தால், இன்று இனப்பிரச்சனை இல்லையென்று ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா அவர்கள் பேசியது ஒரு பிரச்சனையாகியிருக்காது.

இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. காலத்தை இழுத்தடிப்பது-

தீர்வை எடுத்து மேசையில் வைத்தால் ஏனைய கட்சிகள் அடுத்த தேர்தலில் அதனை தமக்கு துருப்புச் சீட்டாக்கி எம்மை கவிழ்த்து விடுவார்களோ என்று பயப்படுவது-

ஏட்டிக்குப் போட்டியான கட்சி முரண்பாடுகளை இனப் பிரச்சனைக்குள் கொண்டு வருவது-

என்பன போன்ற அணுகுமுறைகளை கைவிட்டால்- அரசியல் துணிச்சலோடு செயற்பட முன்வந்தால்- தென்னாபிரிக்கா ஜனாதிபதி டி.கிளார்க் கறுப்பின மக்களிடம் பெற்றுள்ள அபிமானத்தைவிடவும்-

மிக அதிகமான அபிமானத்தை தென்னிலங்கைத் தலைவர்கள் தமிழ் மக்களிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

அமரர் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரான பின்னர் சாமிஜி என்பவருக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்:

"ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தமிழ் மக்களது பிரச்சனைகளை நியாயமாக தீர்த்து வைத்தால், தமிழ் மக்களால் என்றும் நன்றியுடன் நினைவுகூரப்படுவார்."

இன்று அமிர் இல்லை. ஜே.ஆரும் பதவியில் இல்லை.

ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கா பதவியில் இருக்கிறார்.

திருமதி சந்திரிக்கா இளம் தலைமுறையின் மாற்றமுறும் சிந்தனைகளை பிரதிபலிப்பவர் என்று நம்பப்படுகிறார்.

இவர்களில் யார் தமிழ் மக்களது அபிமானத்தை பெறப்போகிறார்கள்? எப்போதும் நினைவு கூரப்படும் அளவுக்கு நியாயமான தீர்வுக்கு துணிந்து முன்வரப் போவது யார்? ■

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு இனப் பிரச்சனை விடயத்தில் அப்படி ஒன்றும் பெரிய தாராளமனது கிடையாது. வழக்கம் மாதிரி பேச்சோடு சரி என்பதை பாராளுமன்றத்தில் உறுதிப்படுத்தி விட்டார்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணம் என்று சட்டத்திருத்தம் ஒன்றில் குறிப்பிடப்பட்டு இருந்ததைப் பார்த்து, சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கொதித்துப் பேனார்கள்.

உப சபாநாயகர் திரு.காமினி பொன்சேகா அவர்களை சமாதானப்படுத்த பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

சுதந்திரக் கட்சியின் வளர்ந்து வரும் தலைவி திருமதி சந்திரிக்காவை சந்திக்கும் தமிழ் கட்சிகள் வடக்கு-கிழக்கு இணைப்பு விசயத்தில் அவரது கருத்தையும் கேட்டுச் சொன்னால் நன்றாக இருக்கும். ஏனென்றால் சட்டியில் இருந்து குதித்து நெருப்புக்குள் விழுந்துவிடக்கூடாது பாருங்கள். அதற்குத்தான்! ■

## பிரேமாவின் வெற்றிடத்தை நிரப்புவாரா ஹேமா?

திருமதி ஹேமா பிரேமதாசாவை சந்திப்பதற்கே ஆளும்கட்சி பிரமுகர்கள் பயந்து கொண்டிருந்தது பழைய கதை.

மறைந்த ஜனாதிபதி உயிரோடு இருந்த வரை, அவரது குடும்பத்திற்கும் வேண்டப் பட்டவர்களாக நடந்து கொண்ட பலர்கூட, அவர் மறைந்த பின்னர் திருமதி ஹேமாவை எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

அதிகாரத்தில் இருப்பவர்களை பகைத்துக்கொள்ள விரும்பாதவர்கள் பிரேமதாசா குடும்பத்தினரை பார்த்து புன்னகைக்கவே தயங்கியதுதான் உண்மை.

திருமதி ஹேமா அரசியலில் ஈடுபடக்கூடும் என்று ஆரம்பத்தில் பரபரப்பாக எதிர்பார்க்கப் பட்ட போதும் பின்னர் அந்த விவகாரம் அடங்கிப் போயிருந்தது.

இந்தியாவில் ராஜீவ் மறைவுக்குப் பின்னரும் அவரது மனைவி திருமதி சோனியாவுக்கு காங்கிரஸ் கட்சிக்குள் செல்வாக்கு இருக்கிறது.

பிரதமர் நரசிம்மராவ்கூட மரியாதையோடும் சிறிது பயத்தோடும்தான் சோனியாவைப் பார்க்கிறார்.

ஆனால், திருமதி ஹேமாவைக் கண்டு ஆளும் கட்சித் தலைமை பயப்படவில்லை.

மாறாக, உரிய மரியாதைகூட அவருக்கு கொடுக்கப்படவில்லை என்று ஒரு வருத்தம் பிரேமா ஆதரவாளர்களிடையே நிலவியது.

திருமதி ஹேமாவை அரசியலுக்கு வரவிடக்கூடாது என்ற நோக்கம் ஆரம்பத்தில் ஆளும்கட்சி வட்டார முக்கியஸ்தர் சிலரிடம் இருந்திருக்கலாம் என்றே தெரிந்தது.

ஆனால், தென் மாகாணத் தேர்தல் மீண்டும் பிரேமதாசாவின் பெயர் சொல்ல வேண்டிய தேவையை உணர்த்திவிட்டது.

தென் மாகாண சபைத் தேர்தல் தோல்வி இல்லாவிட்டால் மறைந்த ஜனாதிபதியின் நினைவு தினத்திற்கு இத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்குமா என்பது சந்தேகம்தான்.

சிறிது காலம் பிரேமாவின் பெயரைக்கூட மறந்தது போல் இருந்தார்கள். இப்போது ஆளும் கட்சி தலைவர்கள் வாய்திறந்தாலும் சரி, தொலைக்காட்சி, வானொலியை திறந்தாலும் சரி பிரேமா பற்றித்தான் பேசப்படுகிறது.

எனவே, திருமதி ஹேமா பிரேமதாசாவும் மிண்டும் முக்கியமானவராகிவிட்டார்.

அவர் உள்ளே வந்தால் தமக்கு இருக்கும் 'இமேஜ்' போய்விடும் என்று சிலர் முதலில் நினைத்திருக்கலாம்.

இப்போது ஆட்சிக்கே சவால் வந்துவிட்ட நிலையில் திருமதி ஹேமா அவசியப்படுவதால் அவர்கள் மௌனமாகிவிட்டார்கள்.

சேவா வனிதா சங்கம் மூலம் தனக்கென்று ஒரு செல்வாக்கை வளர்த்தவர் திருமதி ஹேமா.

ஏழைகள் மீது இயல்பாகவே இரக்கம் உள்ளவர் என்று அறியப்பட்டவர். சேவா வனிதா சங்கம் மூலம் அவர்களோடு தொடர்பு கொண்டவர். உதவிகளும் செய்து கொடுத்திருக்கிறார்.

ஆனால், மறைந்த ஜனாதிபதி பிரேமதாசாவின் அரசியல் அனுபவம், அரசியல் சாதுரியம் என்பவற்றை திருமதி ஹேமா சுலபமாக பெற்றுக்கொள்ள முடியும் என்று நினைக்க முடியவில்லை.

பிரேமதாசாவின் வெற்றிடத்தை நிரப்பக்கூடிய வேறு அரசியல் தலைவர்கள் ஆளும் கட்சியில் இல்லை என்ற நிலையில், திருமதி ஹேமா உடனடியாக இல்லாவிட்டாலும், எதிர்காலத்தில் ஒரு தனியிடத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

அதற்காக அவர் கடினமாகவும், சளைக்காமலும், தாக்குப் பிடித்தும் உழைக்க வேண்டியிருக்கும். ■

## அதிரடி அய்யாத்துரை



கொழும்பிலை இருக்கும் தனித்துவ தமிழ் அரசியல்வாதியை வழக்கு விசயமாச் சந்திக்க ஒருத்தர் விரும்பினவராம். தொலைபேசியிலை வீட்டுக்கு வரும் குறிப்பு கேட்க, அரசியல்வாத சட்டத்தரணி வீட்டுக் குறிப்பை விளக்கமாகச் சொன்னவராம். அதிலை என்ன விசேஷம் எண்டு கேட்பியள். சொன்ன குறிப்பிலை முக்கியமானது என்ன தெரியுமோ? உயரமான மதில், "ரெண்டு எழுத்தார்கூட பாய்ஞ்சு வரேலாது" எண்டார் பாருங்கோ. அதுதான் விசேஷம்! பொன்னான பாதுகாப்பிலை கண்ணான கவனம்.

பிரான்ஸ் தூதுவர் திருவான மலைக்குப் பேனவராம். உடனை அவரைச் சந்திச்ச தமிழ் இயக்கம் ஒண்டு, தங்கடை பொது நோக்கம் பேப்பரிலை வரவேண்டும் எண்ட ஆசையிலை (கோவப்படும் எண்டா பொது நோக்கத்திலை) பிரான்ஸிலை இருந்து ஒருத்தரையும் திருப்பி அனுப்ப வேண்டாம் என்டவையாம். தூதர் திகைச்சுப்போனாராம். அப்படி ஒரு நோக்கமும் இல்லாத நாடுகளையும் இவை தூண்டிவிடுவினம் போலை கிடக்குது.

"அதிரடி தெரியுமோ அய்யாத்துரைக்கு" எண்டு ஒரு கந்தல் வாய்ப்பந்தல் அரசியல் வாதி கேட்டவராம். எனக்கென்ன பாருங்கோ தெரியும். முந்தியும் உப்பிடி முழங்கிப்போட்டு இந்தியாவுக்கு பிடறியிலை கால்பட ஓடக் காரணமான அதிரடி விசயம் அந்த அரசியல்வாதிக்குத்தானே தெரியும். விபத்தாலை பிரதிநிதியாகிறவையெல்லாம் பெரிய மனுசராக முடியாது எண்ட விசயம் அவர் வாய் திறக்கேக்கைதானே தெரியுது.

தன்னைச் சந்திக்க வாற ஆட்களை செக் பண்ண வேண்டாம் எண்டு-மட்டக்களப்பு நகர முதல் பிரஜை சொல்லிப்போட்டாராம். தனக்கு யாரும் தீங்கு செய்ய மாட்டினம் எண்டு உறுதியான நம்பிக்கையாம்.

வெளிநாட்டு பத்திரிகை ஆசிரியர்களை வரவழைக்கிறது. கூட்டம் நடத்தி கையோடை தங்களைப் பற்றியும் அவை மூலம் நாலு வார்த்தை பேச வைக்கிறது. தமிழ் நாட்டிலை பட்டம் வாங்குகிற ஒரு வேலையே இல்லை. டாக்டர் பட்டம்கூட வாங்கலாம். அங்கை வாங்கும் பட்டத்தை கொண்டுவந்து இஞ்சை படம்போட வைச்சு தங்கடை முதுகிலை தாங்களே தட்டுறது எண்டு பலரக எழுத்தாளர்கள் உருவாகிக்கொண்டிருக்கினம். ஒரு எழுத்தாளர் தன்னைப்பற்றி வாற செய்திகள், படங்கள் எண்டு கொண்டுவந்து நீட்டிக் கொடுமைப்படுத்துறாராம். ஒரு தினப் பத்திரிகை ஆசிரியர் அரைகுறையாகத்தான் சொன்னவர்.

கொழும்பிலை உள்ளையிருந்தவர் ஒருத்தர் சொன்ன சோகக் கதையைக் கேட்டா கட்டாயம் கண்ணிலை ஒரு துளி வரும். மாட்டுப்படேக்கை 'செல்ரல் போன்' வைச்சிருந்தவராம். உள்ளை போகேக்கை கொடுத்திட்டுத்தானே போகவேணும். வெளியிலை விடேக்கை "செல்ரல் போனையும்" கொடுத்திவிட்டவையாம். சமீபத்திலை போன் பில் வந்திருக்குது. பார்த்தவர் மயங்கி விழாத குறை. எக்கச் சக்கம். 'உன்ரை போனோ, என்ரை போனோ -அடி -தெரிஞ்ச நம்பர் இருக்கிற இடம் எல்லாம் அடி' எண்டு வெளுத்து வாங்கியிருக்கினம்.

அதிகாரத்திலை இரண்டாம் இடத்திலை இருக்கிறவர் சத்தம் போடாமை இருக்கிறார். அவருக்கு ஆதரவு கொடுக்க நினைச்ச ஆட்கள்தான் இப்ப முழிக்கினம் எண்டு பசும் வட்டாரத்திலை சிலர் முணுமுணுக்கினமாம்.

சித்தர் பாடல்கள் படிக்க புத்தி தெளியும் பாருங்கோ. ஆனால் அதிலை ஒரு பிரச்சனை. நேரடியான அர்த்தத்திலை பொருள் விளங்கக்கூடாது.

"தாவாரம் இல்லை தனக்கொரு வீடில்லை
தேவாரம் ஏதுக்கடி-குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி"

இதுக்கு என்ன அர்த்தம்? வீடும், தாவாரமும் இல்லாதவன் நடுரோட்டிலை நிண்டு தேவாரம் பாடி என்ன பயன் எண்டமாதிரி அர்த்தமோ? அதுதான் இல்லை. தார வாரம் எண்டால் தா என்பது துன்பம், வாரம் என்பது பங்கு. மற்றவை படும் கஷ்ட நஷ்டத்திலை பங்கு கொள்ளாத ஆட்கள் தேவாரம் பாடினால் என்ன? பாடாமல் விட்டால் என்ன? எண்டதுதான் அர்த்தம். உட் பொருள் விளங்காட்டி விபரீதம்தான் பாருங்கோ. ■



# தொடரும் கொலைகள்! மலைபோல் குவியும் பிணங்கள்!! சமீபகால வரலாற்றில் மிக அதிக சாவுகள்!!

இரத்த ஆறு ஓடுகிறது என்று வன்முறை இடம் பெறும் இடங்களை வர்ணிப்பார்கள். ஆனால் மத்திய ஆபிரிக்காவிலுள்ள குட்டி நாடான ருவாண்டாவில் இரத்த எரிமலை வெடித்து பீறிட்டுப் பாய்கிறது.

அந்நாட்டின் தலை நகரான கிகாலியில் தெருக்களில் மலை மலையாக மனித சடலங்கள் கிடக்கின்றன. ஆண்கள் பெண்கள், வயதானவர்கள், குழந்தைகள் என்று திரும்பிய பக்கமெல்லாம் காணப்படும் பிணக்குவியல்களின் வாடை அந்நகரத்தின் காற்று மண்டலத்தை நிரப்பி விட்டது.

ஏப்ரல் மாத நடுப்பகுதியில் திடீரென வெடித்த வன்முறைப் புயல் பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பலி வாங்கிவிட்டது. வீதிகளில் மட்டுமல்ல, வீடுகளுக்குள்ளே ஒதுங்கியிருந்தவர்களும் படு பயங்கரமாக கொலை செய்யப்பட்டு வருகின்றனர். அமைதி காப்பதற்காக அங்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ள ஐ.நா.அமைதிப் படையினரும் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளது.

ருவாண்டா நாட்டில் வாழும் இரு இனத்தவர்களுக்கிடையிலான அதிகார வெறியே இந்த இரத்த வெள்ளத்துக்குக் காரணமாகும். ஹுட்டு மற்றும் டட்சி என்ற இரு இன மக்கள் இங்கு வாழ்கின்றனர். ருவாண்டாவின் ஜனாதிபதி ஜுவேனல் ஹபியாரிமன என்பவரும் புருண்டி-நாட்டின் ஜனாதிபதி சைபிரியன் தரயாமிரா என்பவரும் பயணம் செய்த விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகி இருவரும் கொல்லப்பட்டதை அடுத்தே வன்முறை வெடித்தது. இந்த விபத்தைப் பற்றிய விசாரணைகளை மேற்கொண்ட பெல்ஜியம் நாட்டு இராணுவக் குழு, ருவாண்டாவின் இராணுவத்தினர் ஏவிய ஏவுகணை ஒன்றே இந்த விமான விபத்துக்குக் காரணம் என்று கூறியது. இந்த இருநாட்டு ஜனாதிபதிகளும் ஹுட்டு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ருவாண்டாவின் இராணுவத்தில் டட்சி இனத்தவர்களையும் சேர்ப்பதற்கான திட்டத்தினை ஜனாதிபதி ஜுவேனல் நடைமுறைப்படுத்தத் தீர்மானித்தமையினாலேயே ஹுட்டு இனத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்ட இராணுவத்தினர் கொதிப்படைந்தனர். இதனால் ஜனாதிபதியைக் கொன்றொழிக்க முன் வந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் சொந்தக் காவல்படையில் 600 பேர் உள்ளனர். இவர்கள் அனைவருமே ஹுட்டு இனத்தவர்கள். ஜனாதிபதியின் மரணத்தைத் தொடர்ந்து டட்சி இனத்தவர்களை கொன்றொழிக்கும் கைங்கர்யத்தை இதே படையினர் தொடக்கி வைத்தனர். இது பெரும் வெறியாக மாறி பல்லாயிரக் கணக்கான உயிர்களைப் பறித்து விட்டது. இலட்சக் கணக்கான மக்கள் உண்ண உணவின்றியும் காயங்களுக்கும் நோய்களுக்கும் மருந்தின்றியும் மடியும் கோர நிலைக்குள்ளாகியிருக்கின்றனர்.

அமைதிகாக்கும் பணியினை மேற்கொள்ள அங்கு சென்ற ஐ.நா.படையினர் கீகாலியிலுள்ள அயல் நாட்டுத் தூதரக அதிகாரிகளையும் அங்குள்ள பிற நாட்டவர்களையும் பத்திரமாக வெளியேற்றும் பணியினை முதலில் முடித்தனர். மேற்கொண்டு ஓரளவு கடுமையான நடவடிக்கை எடுக்க முடியாத கட்டுப்பட்ட நிலையில் அமைதிகாக்கும் படையினர் இருப்பதாக செய்தியாளர்கள் கூறுகின்றனர்.

குடித்து வெறித்து, கம்பு தடி, கத்தி, கோடரிகளுடன், தெருவில் காண்போரையெல்லாம் அடித்துக் குதறும் கும்பல்கள் அதிகரித்து விட்டதாகவும் இவர்கள் கடைகள், வீடுகள் அனைத்தையும் உடைத்து அகப்பட்ட பொருட்களை அபகரிப்பதாகவும் கூறப்படுகிறது. நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது-இன்றுள்ள நிலையில் சாத்தியப்படாது என்றே அவதானிகள் கூறுகின்றனர்.



# தற்கொலைப் போராளியின் இறுதிக் கடிதம்!

## “எனக்காக அழ வேண்டாம்.... பிரார்த்தியுங்கள்.”

“நான் உயிர் துறந்தமைக்காக என் பெற்றோரோ சகோதரர்களோ நண்பர்களோ உறவினரோ அழவேண்டாம். எமது கோரிக்கைகள் நிறைவேற வேண்டும் என்று பிரார்த்தனை செய்யுங்கள். பிரார்த்தனை தான் பிரதானமானது.”

இவ்வாறு கையால் எழுதப்பட்ட கடிதம் ஒன்று பாலஸ்தீனப் பிரதேசத்தில் இஸ்ரேலியர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாபாட் என்ற ஊரின் மத்தியிலுள்ள பள்ளிவாசலில் கண்டெடுக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இதே ஊரைச் சேர்ந்த 22 வயதான இளைஞன் அம்மார் அமார்னே என்பவனுடைய உயிர்த்தியாகத்தை மெச்சியும் வாழ்த்தியும் துண்டுப்பிரசுரங்கள் அந்தப் பிரதேசமெங்கும் வினியோகிக்கப்பட்டன. இந்தத் துண்டுப் பிரசுரத்தை மேற்குக் கரை நகரான ஜென்னின் என்ற இடத்தைச் சேர்ந்த ‘ஹமாஸ் இஸ். எல்-டீன் அல்-கசம்’ என்ற இஸ்லாமியத் தீவிரவாத இயக்கம் வெளியிட்டிருந்தது.

அன்றைய தினம் மாலையிலேயே அம்மாரின் இல்லத்தை நோக்கி சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த 10,000 பேர் வரை மொய்த்துக் கொண்டனர். “ஏதோ யாத்திரையினை மேற்கொண்டு பயணம் செய்பவர்களைப் போன்ற உணர்வுடன் அவர்கள் காணப்பட்டனர்.” என்று செய்தியாளர்கள் வர்ணித்துள்ளனர்.

ஏப்ரல் 13ம் திகதி புதன்கிழமையன்று காலை மத்திய இஸ்ரேலிலுள்ள ஹரேடா நகரின் மத்தியில் ஏராளமான பயணிகளுடன் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றினுள் குண்டொன்று வெடித்தது. ஐவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். 30 பேர் படுகாயமடைந்தனர். ‘ஹமாஸ்’ இயக்கத்தினரின் துண்டுப் பிரசுரமும், அம்மார் தன் கைபட எழுதி பள்ளிவாசலில் வைத்திருந்த கடிதமுமே, இந்தக் குண்டுவெடிப்பின் சூத்திரதாரி அம்மாரே என்பதை வெளிப்படுத்திய ஆதாரங்களாக இருந்தன.



“பாலஸ்தீனர்கள் இஸ்ரேலியர்களிடம் நெருங்கிப் பழக வேண்டாம். குடியிருப்புக்களுக்கு அருகே செல்லவும் வேண்டாம். தாக்குதல்கள் தொடரப் போகின்றன.”

இந்தச் செயலுக்கு அம்மார் காரணமாக இருந்தான் என்பதை அவனுடைய பெற்றாரோ அவனை நன்கு தெரிந்தவர்களோ எளிதில் நம்பவில்லை. அப்பாவி போல் தனது விவசாயக் கடமைகளில் மட்டுமே இதுவரை அவன் காலம் கழித்து வந்துள்ளான். எந்த இயக்கத்தையும் சாராதவன் போல் நடந்து வந்துள்ளான். எந்த ஒரு காலகட்டத்திலும் பொலிசாரின் சந்தேகக் கண் அம்மார் மீது விழுந்ததேயில்லை. “அப்பாவி போல் தானும் தன் பாடும் என்று திரிந்த இவனா இதனைச் செய்தான்” என்று இவனைத் தெரிந்தவர்கள் அனைவரும் கூறிக்கொள்ளுகின்றனர்.

ஜெரூசலத்திலிருந்து ஹமாஸ் இயக்கம் மற்றுமொரு அறிக்கையை விடுத்துள்ளது. “இதேபோன்று பல சம்பவங்கள் தொடரவிருப்பதால், பாலஸ்தீனர்கள் இஸ்ரேலியர்களின் அருகில் நெருங்கிப் பழகுவதையோ இஸ்ரேலியர்களின் குடியிருப்புகளுக்கு அருகில் செல்வதையோ உடனடியாக விட்டுவிட வேண்டும்” என்று அந்த அறிக்கையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலிய அரசாங்கம் இந்தப் புதிய தலையிடியை எவ்வாறு ஒழிப்பது என்று தெரியாமல் தடுமாறுகிறது. ஹமாஸ் இயக்கத்தை பூண்டோடு ஒழித்துவிட வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டுள்ளது. பிரதமர் இற்ஸாக் ராபின் ஜோர்டான் நாட்டின் மீது தனது கண்டனக் கணைகளைத் தொடுத்திருக்கிறார். “ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்களை, இஸ்ரேல் மீது மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு இடங்களுக்கும் வன்முறையிலீடுபடும்படி ஜோர்தான் தூண்டிவிடுகிறது” என்று குரல் கொடுத்துள்ளார்.

தற்கொலைத் தாக்குதல்கள் இஸ்ரேலிய அரசுக்கு சவாலாக மாறியுள்ளன. இஸ்ரேலிய-பாலஸ்தீன பேச்சுக்களுக்கும் தற்கொலைத் தாக்குதல்களும் அதன் விளைவுகளும் தலையிடி கொடுப்பனவாகக இருக்கின்றன.

# பழிவாங்கும் படலத்தில் ‘ஹமாஸ்’ இயக்கம்

## தேடுதல் வேட்டையில் இஸ்ரேலிய படையினர்!

## கைது 400– ஆயுதங்களும் மீட்பு

கடந்த பெப்ரவரி 25ம் திகதி ஹெப்ரான் நகர பள்ளிவாசலில் இஸ்ரேலிய ஆயுதம் ஏந்திகள் கண்ணை மூடிக்கொண்டு சுட்டுத் தள்ளினார்கள்.

29 பாலஸ்தீனர்கள் படுகொலையானார்கள். பள்ளிவாசல் படுகொலைக்கு பாலஸ்தீன அமைப்புக்கள் பழிவாங்கியே தீரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. முரசும் பழிவாங்கல் இடம்பெறும் என்றே கருத்து வெளியிட்டிருந்தது.

எதிர்பார்க்கப்பட்டது போலவே கடந்த ஏப்ரல் 13ம் திகதி இஸ்ரேலியர்கள் பயணம் செய்த பஸ் வண்டி ஒன்று சிதறியது. அம்மார் என்னும் தற்கொலைப் படையாளி பஸ்மீது மோதினார். வன்முறை வெடித்தது. ஏப்ரல் 13 அன்று 13 இஸ்ரேலியர்கள் மடிந்து போனார்கள்.

அம்மார் என்னும் அந்த தற்கொலைப் படைவீரர் ‘ஹமாஸ்’ எனப்படும் இயக்கத்தைச் சேர்ந்தவர்.

இஸ்ரேலிய-பலஸ்தீன பேச்சு வார்த்தைகளை ஹமாஸ் இயக்கம் விரும்பவில்லை.

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் ‘ஹமாஸ்’ இயக்கம் வன்முறை நடவடிக்கைகளை தீவிரமாக்கி வருகிறது.

ஹெப்ரான் படுகொலை ‘ஹமாஸ்’ இயக்கத்தின் பேச்சுவார்த்தைக்கு எதிரான நிலைப்பாட்டை நியாயப்படுத்தியது போல் அமைந்தது.

பழிக்குப் பழி தீர்க்கும் நடவடிக்கைகளில் ஏப்ரல் மாதம் மட்டும் திகதி இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுவிட்டனர்.

அதனால் சீற்றம் கொண்ட இஸ்ரேலிய படைகள் சல்லடைபோட்டு தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டன.

“அமைதிக்கு பங்கம் விளைவிப்போரை அனுமதிக்கப் போவதில்லை. விட்டு வைக்கவும் மாட்டோம்” என்று இஸ்ரேலிய பிரதமர் இற்ஸாக் ராபின் பாராளு மன்றத்தில் பேசும்போது எச்சரித்திருக்கிறார்.

தேடுதல் வேட்டையில் 400 பேர் தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார். பெருந்தொகையான ஆயுதங்களும் காப்பாற்றப்பட்டன.

1992ல் இஸ்ரேல் லெபனானுக்கு நாடு கடத்திய 415 இஸ்லாமிய தீவிரவாதிகளை படிப்படியாக நாடு திரும்ப இஸ்ரேல் அனுமதித்துள்ளது.

அதே சமயத்தில் புதிதாக 400 பேரை பிடித்து சிறையில் போட்டிருக்கிறது.

### நண்பர்களைத் தேடுவது எப்படி? சுவீடன் சஞ்சிகை சொல்கிறது இப்படி!

நண்பர்களைத் தேடி அடைய விரும்புபவர்கள் நேரடியான (கண்)பார்வையைத் தவிர்த்துக்கொள்வது அவசியம் என்று உளவியல் சஞ்சிகை ஒன்று தெரிவித்துள்ளது. ஒருவருடைய கண்களைப் பார்ப்பதன்மூலம் உளவியல் ரீதியான பாதிப்பு அதிகரிக்கிறது. சிலருடைய கண்களை நேரடியாகப் பார்க்கும் போது ஒருவகையான அச்சம் தோன்றும். ஆகவே வெளித் தோற்றத்தை மட்டும் அடிப்படையாக வைத்து நண்பர்களைத் தேடுவதை விடுத்து ஒருவருடைய அகத் தோற்றத்தை அவதானித்தே நட்புக் கொள்வது உசிதமானது.

சுவீடனிலிருந்து வெளியாகும் ‘மென்ரல் நோட்ஸ்’ (மனக் குறிப்புகள்) என்ற சஞ்சிகை இக் கருத்தினை வெளியிட்டிருக்கிறது.



நாடுகடத்தப்பட்ட தனது மகன் திரும்பிவருவதை துப்பாக்கி வேட்டுகள் தீர்த்து வரவேற்கும் பாலஸ்தீன தாய் ஒருவர்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

அலசுவது – இராஜதந்திரி

# தமிழ்– முஸ்லிம் பிளவை எதிர்பார்க்கும் 'பேரினவாத வல்லூறு'!

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு.எம்.எச்.எம்.அஷ்ரப் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பகிரங்க கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

இக்கடிதம், வடக்கு-கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் நிலையைத் தெளிவு படுத்துவதாகவும், கூடவே தமிழீழ விடுதலைப் புலிகள் வடக்கு-கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம் சமூகத்தவர் குறித்து கொண்டுள்ள நிலைப்பாடு மிகத் தவறானது என்பதை எடுத்துரைப்பதாகவும் இருக்கக் காணப்படுகின்றது.

1990ம் ஆண்டு இலங்கை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததையடுத்து கிழக்கிலங்கையில் அரச படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல்கள் வெடித்தன.

இதனையடுத்து இம்மோதல் வடக்கிலும் விரிவு பெற்று இன்றுவரை ஒரு தொடர் கதையாக இருந்து வருகின்றது.

யாழ்குடாநாட்டில் 'இரண்டாவது ஈழப்போர்' வெடித்ததையடுத்து அங்கிருந்தும் முஸ்லிம் சமூகத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து கிழக்கில் முஸ்லிம் சமூகத்தவருக்கெதிராக அசம்பாவிதங்கள் பல இடம்பெற்றிருந்தன. இந்த அசம்பாவிதங்களில் காத்தான்குடிப் பள்ளிவாசலில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவம், மற்றும் பொலன்னறுவைப் பகுதியை அண்டிய அழிஞ்சிப்பொத்தன, பள்ளித்திடல் கிராமங்களில் அப்பாவி முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தமை போன்ற சம்பவங்கள் மனிதாபிமானமற்ற மோசமான நடவடிக்கைகளாக விளங்கியிருந்தன.

கிழக்கில் முஸ்லிம் கிராமங்களில் இடம்பெற்ற படுகொலைகளுக்குப் பதிலடி கொடுப்பது போல அயல் கிராமங்களில் தமிழ் பொதுமக்களும் கொல்லப்பட்டிருந்தனர்.

இக்கொலைச் சம்பவங்கள் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தின்போது வட இந்தியாவில் இடம்பெற்ற இந்து-முஸ்லிம் கலகங்களையே ஞாபகப்படுத்துவனவாக இருக்கக் காணப்பட்டன.

இந்தியாவில் மகாத்மா காந்தி தலைமையில் சாத்வீகமான முறையில் சுதந்திரப் போராட்டம் இடம்பெற்றிருந்த வேளை, வட இந்தியாவில் தோன்றிய இந்து-முஸ்லிம் கலகங்கள் இந்தியரிடையேயான ஒற்றுமைக்குக் குந்தகம் விளைவிப்பதாக இருக்கக் காணப்பட்டன.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்த இனக் கலவரங்களை வேடிக்கை பார்த்தனர். அத்துடன் தமக்கெதிராகப் போராட்டம் நடத்தியவர்களிடையே ஏற்பட்ட பிளவுகளை தமது பிரித்தாளும் தந்திரத்தை வலுப்படுத்த நன்கு பயன்படுத்தலாயினர்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பொறுத்தவரை தமிழ், முஸ்லிம் சமூகத்தவர்கள் இப்பிரதேசங்களில் பாரம்பரிய



குடிமக்களாவர். முஸ்லிம்கள் மதத்தினாலேயே வேறுபட்டுள்ளார்களே தவிர மொழியால் அவர்கள் தமிழர்களாகவே இருக்கக் காணப்படுகின்றனர்.

இலங்கையில் இரண்டாவது சிறுபான்மை சமூகமாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பதுடன், அம் மொழியில் வியத்தகு புலமை கொண்டவர்களாகவும் காணப்படுகின்றார்கள்.

பள்ளிவாசல்களில் முஸ்லிம் சமயத் தலைவர்கள் தமிழில் வழங்குகின்ற பிரசங்கங்கள் முதற்கொண்டு, முஸ்லிம் எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியோரின் தமிழ் மொழி சார்ந்த பங்களிப்பு அபரிமிதமானதாகவே இருக்கக் காணப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கையில் இன்று 'கொடிய அரசியல்' காரணமாக முஸ்லிம், தமிழ் சமூகத்தவரிடையே வேறுபாடுகள் தோன்றியிருந்தாலும், தமிழ் மொழியின் மகத்துவத்தைப் பேணுவதில் முஸ்லிம்கள், தமிழர்களுக்கு எவ்வகையிலும் சளைத்திராதவர்களாகவே இருக்கின்றனர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அண்மையில் கிழக்கிலங்கையில் இடம்பெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் குறிப்பிடத்தக்களவு வெற்றியைப் பெற்றிருந்தது. இவ்வெற்றியின் மூலம் திரு.அஷ்ரப் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கிலங்கையில் இன்று ஒரு பலம் மிக்க அரசியல் கட்சியாக விளங்குவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

திரு.அஷ்ரப் தமது கட்சியின் பலத்தை நிரூபிப்பது போல சில வாரங்களுக்கு முன்னர் தமது கட்சியின் வருடாந்த மகாநாட்டையும் கல்முனையில் கோலாகலமான முறையில் நடத்தியிருந்தார்.

இம்மகாநாட்டுக்கு மேல்மாகாண சபை முதலமைச்சர் திருமதி.சந்திரிக்கா குமாரணதுங்கா பண்டாரநாயக்கா, தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள், மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு.தொண்டமான், மற்றும் ஏனைய தமிழ் கட்சிகளின் பிரமுகர்களையும் வரவழைத்து தமது செல்வாக்கினை திரு.அஷ்ரப் நிரூபித்திருந்தார்.

இவ்வாறு கிழக்கிலங்கையில் தமது கரம் வலுப்பெற்றிருக்கின்ற நிலையிலேயே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனுக்கு முஸ்லிம்கள் குறித்து அவர் கொண்டுள்ள நிலைப்பாடு தவறென்பதை சுட்டிக்காட்டி திரு.அஷ்ரப் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

திரு.அஷ்ரப் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ரீதியாக அன்றி, பிரதேச ரீதியாகப் பலம் பெற்றிருப்பதையே கிழக்கிலங்கையில் அக்கட்சியின் அண்மைக் கால வெற்றிகள் புலப்படுத்துகின்றன.

கடந்த ஆண்டில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் தென்னிலங்கையின் பல பாகங்களிலும் வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் தேசியக் கட்சிகளையே பெரிதும் ஆதரித்திருந்தனர். அச்சமயம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தென்னிலங்கையில் படு தோல்வியையே தழுவியிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இன்று கிழக்கிலங்கையில் குறிப்பிடத்தக்களவு செல்வாக்குப் பெற்றிருப்பதற்கு, ஆளுங் கட்சியினரின் பேரினவாதக் கருத்துக்கள்,

## ● தீவிரவாத புலிகளை கடுமையாக விமர்சிக்கும் அஷ்ரப், மிதவாத தமிழ்க்கட்சிகளுடன் உறுதியற்ற தளம்பலான போக்கு!

மற்றும் கடந்த வருடங்களில் வடக்கிலும், கிழக்கிலும் அவர்கள் முகங்கொடுத்த துயரகரமான அனுபவங்களே முக்கிய காரணங்களாக இருக்கின்றன.

வடக்கிலிருந்து முஸ்லிம் சமூகத்தவர் வெளியேற்றப்பட்டமையும், கிழக்கில் முஸ்லிம்களுக்கெதிராக இடம்பெற்ற வன்முறைகளுமே முஸ்லிம்கள் தமது சுய பாதுகாப்பு, மற்றும் சுய கௌரவம் ஆகியன குறித்து சிந்திக்கும் சூழ்நிலைகளை ஏற்படுத்தியிருந்தன.

வடக்கு-கிழக்கின் அரசியல் வரலாற்றை நோக்கும்போது முஸ்லிம்கள் தேசியக் கட்சிகளை ஆதரித்து வந்த அதே சமயம், தமிழ்க் கட்சிகளுக்கும் கணிசமான அளவு ஆதரவை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ● வடக்கு-கிழக்குப் பிரச்னையை தேசிய ரீதியாக அணுகமுயலும் அமைச்சர் ஹமீத், சபாநாயகர் மொஹமட்


வடக்கு-கிழக்கு வாழ் முஸ்லிம்களின் சமூக, பொருளாதார வாழ்க்கைமுறை பெரும்பாலும் வர்த்தகம், விவசாயம் என்பன சார்ந்ததாகவே இருக்கக் காணப்படுகின்றது.

வடக்கு-கிழக்கில் ஜனநாயக ரீதியாக தமிழ்க் கட்சிகள் இயங்கிய காலத்தில் முஸ்லிம்கள் வேறுபடுத்தப்பட்டு நோக்கப்படவில்லை. இன்றைய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்கூட தமிழ் அரசியல் கட்சிகளுடனேயே ஆரம்பத்தில் இணைந்திருந்தார். தாம் தமிழ் அரசியல் பிரமுகர்களின் வழிகாட்டல்களின் கீழேயே அரசியல் அனுபவம் பெற்றதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் இணைப்பு, மற்றும் அப்பிரதேச தனித்துவம் குறித்த கோரிக்கைகள் என்பன தமிழ்-முஸ்லிம் இனத்தவர்களை முதன்மைப்படுத்தியதாகவே முன்வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்களின் போராட்டம் தீவிரவாதமாக மாறி, ஆயுதப் போராட்டமாக வடிவெடுத்ததையடுத்தே வடக்கு கிழக்குப் பிரதேச தமிழ்பேசும் இனத்தவர்கள் சார்ந்த கோரிக்கைகள் தொடர்பில் முஸ்லிம் சமூகத்தவர்கள் பெரும்பாலும் மிதவாதத்தையே கடைப்பிடித்திருந்தனர்.

இதேவேளை ஆயுதப் போராட்டத்தில் இறங்கியிருந்த பல்வேறு தமிழ்க்குழுக்கள் தம்மிடையேயான நிலைப்பாடுகள் குறித்தே



சந்தேகக் கண்ணுடனும், விரோதமனப் பான்மையுடனும் நடந்து கொண்டன.

கூடவே மிதவாதப் போக்கைக் கொண்டிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ் காங்கிரஸ் போன்ற அரசியல் கட்சிகளுடனும் தமது உறவுகளை மிக எட்டத்திலேயே தமிழ்குழுக்கள் வைத்துக் கொண்டிருந்தன.

இந்நிலையில் வடக்கு-கிழக்கு விவகாரம் குறித்த ஆயுதப் போராட்டத்தில் அக்கறை காட்டாது மிதவாதப் போக்கைக் கடைப்பிடித்த முஸ்லிம் சமூகம்மீதும் தீவிர ஆயுதப் போராட்டக் குழுவான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அதிருப்தி கொண்டிருந்த துடன் வடக்கே முஸ்லிம்களை முற்றிலுமாக அப்புறப்படுத்துவதிலும் அவ்வியக்கம் தீவிரம் காட்டியிருந்தது.

இன்றைய வடக்கு-கிழக்குப் பிரதேச அரசியலை மையமாக வைத்து முஸ்லிம்கள் குறித்த புலிகளின் நிலைப்பாடு மிகத் தவறானது என்று திரு. பிரபாகரனுக்கான கடிதத்தில் திரு.அஷ்ரப் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் மட்டுமல்ல, வடக்கு-கிழக்கில் உள்ள பல்வேறு தமிழ் அமைப்புகள்கூட புலிகளின் நிலைப்பாட்டைக் கண்டிப்பனவாகக் காணப்படுவதுடன், வடக்கு-கிழக்கில் பூரண பாதுகாப்புடன் நடமாட முடியாதவையாகவும் அத்தமிழ் அமைப்புகள் காணப்படுகின்றன.

இது தவிர தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், தமிழ் அமைப்புகளுக்குமிடையில் ஏற்பட்ட மோதல்கள்கூட பல நூற்றுக் கணக்கானவர்களைப் பலியெடுத்ததாகவே இருக்கக் காணப்படுகின்றது.

எனவே தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டமானது முஸ்லிம் சமூகத்தவரை மட்டும் பாதிக்கவில்லை. வடக்கு-கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தமிழ் அரசியல் கட்சிகளையும், புலிகள் இயக்கத்துடன் ஏக காலத்தில் தோன்றிய எனைய தமிழ் அமைப்புக்களையும், அவற்றின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் ஆகியோரையும் பெரிதும் பாதித்ததாகவே புலிகளின் நிலைப்பாடு காணப்படுகின்றது.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் பாதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகள், மற்றும் தமிழ் அமைப்புக்கள் என்பன புலிகளை கடுமையாக விமர்சிப்பதையே குறியாகக் கொண்டுள்ளன. அத்துடன் அவை தமது அரசியல் நடவடிக்கைகளுடன் தமது பாதுகாப்புக் கருதியும், தாம் நடமாடித் திரியும் பகுதிகளில் புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் வகையிலும் தத்தமக்கென இராணுவப் பிரிவுகளையும் கொண்டுள்ளன.

கூடவே அரச படைகளுடன் இணைந்து புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளிலும் தமிழ் அமைப்புகள் குதித்துள்ளன.

ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு.எம்.எச்.எம்.அஷ்ரப், முஸ்லிம் சமூகத்தவர் தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டை கடுமையாக விமர்சித்து வருபவராயினும், திரு.பிரபாகரனின் தவறுகளைச் சுட்டிக்காட்டி நேரடியாக அவருக்கு திரு.அஷ்ரப் பகிரங்க கடிதமொன்றை எழுதியுள்ளமை, ஒரு துணிச்சலான நடவடிக்கையாகக் காணப்படுவதுடன், புலிகளுடன் பகைமை கொண்டுள்ள ஏனைய தமிழ் அரசியல் கட்சிகள் இதுவரை செய்திராத ஒரு நடவடிக்கையாகவும் இக்கடிதத் தொடர்பு காணப்படுகின்றது.

திரு.அஷ்ரப் தமது கடிதத்தில் புலிகளின் நடவடிக்கைகளை வெறுமனே கண்டிப்பதுடன் மட்டும் நின்றுவிடவில்லை.

திரு.வே.பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அரசியல் ரீதியிலான நடவடிக்கைகளில் இறங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துவதாகவே திரு.அஷ்ரப்பின் கடிதம் விளங்கியிருக்கின்றது.

திரு.அஷ்ரப் தம்மை முஸ்லிம் சமூகத்தவரின் ஒரு முக்கிய தலைவராக இனங்காட்டிய நிலையிலேயே திரு.பிரபாகரனுக்கு பகிரங்கக் கடிதமொன்றை எழுதியுள்ளார்.

இதேவேளை இலங்கையில் தேசிய ரீதியாக முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரமுகர்களான சபாநாயகர் எம்.எச்.மொஹமட், வெளிநாட்டமைச்சர் ஏ.சி.எஸ்.ஹமீத் ஆகியோரும் தமிழீழ விடுதலைப் புலிகள் குறித்து அக்கறை காட்டுவோராகவே இருக்கக் காணப்படுகின்றனர்.

வெளிநாட்டமைச்சர் திரு.ஏ.ஸி.எஸ்.ஹமீத் அரசுக்கும், புலிகளுக்குமிடையிலான பேச்சுவார்த்தைகளின் போது முக்கிய பங்கு வகித்திருந்ததுடன், வடக்கே யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து வே.பிரபாகரனுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தார்.

இதுதவிர திரு.ஹமீட், தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியான நடவடிக்கைகளில் பங்குபற்ற வேண்டுமென்பதை தேசிய அளவில் மட்டுமல்லாது, சர்வதேச ரீதியாகவும் வலியுறுத்தி வருபவராகக் காணப்படுகின்றார்.

சபாநாயகர் எம்.எச்.மொஹமட்கூட அண்மையில் யாழ்ப்பாணம் சென்று புலிகளை நேரடியாகச் சந்திக்க தயாராகியிருந்ததுடன், தமது சக்திக்கு அப்பாற்பட்ட காரணங்களினால் யாழ்ப்பாணப் பயணத்தை ஒத்திப்போட்டிருந்தார்.

சபாநாயகர் எம்.எச்.மொஹமட் அவர்களும் வடக்கு-கிழக்கு பிரச்னை தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசியல் ரீதியிலான பேச்சு வார்த்தைகள் நடத்தப்படவேண்டும் என்பதில் ஆர்வங்காட்டி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் திரு.எம்.எச்.எம் அஷ்ரப் வடக்கு-கிழக்கின் முஸ்லிம் சமூகத்தவர்கள் தொடர்பாக தனது கருத்துக்களை வெளியிட்டு வரும் அதே சமயம், தேசிய நலனைக் கருத்திற்கொண்டு புலிகள் தொடர்பாக பரந்த அரசியல் கண்ணோட்டத்தைக் கொண்டவர்களாகவே சபாநாயகர் எம்.எச்.மொஹமட், வெளிநாட்டமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீட் ஆகியோர் காணப்படுகின்றனர்.

வடக்கு-கிழக்கு வாழ் முஸ்லிம்கள் தொடர்பான புலிகளின் நிலைப்பாட்டை திரு. அஷ்ரப் கடுமையாக விமர்சித்துள்ளார். ஆனால் இதே அஷ்ரப் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளுடன் வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களின் நிலைப்பாடு தொடர்பாக ஓர் உடன்பாட்டுக்கு வந்திராதவராகவே இருக்கக் காணப்படுகின்றார்.

இலங்கை அரசு பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்றை நியமித்து அதன்மூலமாக வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வுகாணும் வழிமுறைகள் குறித்து ஆராய்ந்திருந்தது.

ஆனால் இப்பாராளுமன்ற தெரிவுக் குழுவின் கூட்டத் தொடர்களின்போது இடம் பெற்ற கருத்துப் பரிமாற்றங்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தன்னை தனிமைப் படுத்தியிருந்ததுடன், ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் ஓர் உடன்பாட்டுக்கு வருவதிலும் தவறியிருந்தது.

வடக்கு-கிழக்குப் பிரச்னையைத் தீர்த்து வைப்பது தொடர்பாக ஆராய பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டிருந்தது. ஆனால் இக்குழுவின் நடவடிக்கைகளுக்குப் புறம்பான விதத்திலேயே தமிழ்க்கட்சிகளுக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குமிடையிலான இழுபறிநிலை காணப்பட்டிருந்தது.


இறுதியாக பாராளுமன்றத் தெரிவுக்குழு நடவடிக்கையும் வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு எத்தகைய அரசியல் தீர்வையும் காணத் தவறிய நிலையில் தோல்வி கண்டிருந்தன.

பேரினவாத தேசியக் கட்சிகள் வடக்கு-கிழக்குப் பிரச்னைத் தீர்வு தொடர்பாக தமது தீர்வுத் திட்டங்களை பாராளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக சமர்ப்பிக்கத் தவறியிருந்தன.

மறுபுறத்தே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அனுசரணையின்றியே தமிழ்க் கட்சிகள் பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டத்தில் பங்குபற்றியதுடன், இறுதியாக அத்தெரிவுக் குழு நடவடிக்கைகளையும் பகிஷ்கரித்திருந்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி பாராளுமன்றத் தெரிவுக் குழு நடவடிக்கைகளின்போது தமிழ் அரசியல் கட்சிகளுடன் ஓர் உடன்பாட்டுக்கு வராதமை, வடக்கு-கிழக்கில் தமிழ் முஸ்லிம் சமூகங்களிடையே பிளவை ஏற்படுத்துவதற்கான அனுகூலங்களை பேரினவாத கட்சிகள் கண்டறிவதற்கான வாய்ப்பையளிப்பதாக அமைந்திருந்தது.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகளைப் பகிரங்க கடிதம் மூலம் அணுகியுள்ள திரு.அஷ்ரப், வடக்கு-கிழக்கு விவகாரம் தொடர்பாக ஒரு தெளிவான உறுதிமிக்க



அரசியல் நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டியவராகக் காணப்படுகின்றார்.

வடக்கு-கிழக்கில் தமிழர்களைப் போலவே முஸ்லிம்களின் பாதுகாப்பு, தனித்துவம் என்பனவும் பாதுகாக்கப்பட வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.


இது விடயத்தில் தமிழ் மிதவாத அரசியல் கட்சிகள் முஸ்லிம்களையும் தமிழ் பேசும் மக்கள் என்ற வட்டத்தினுள்ளேயே நோக்குகின்றன. ஆனால் மத ரீதியாகவும், வடக்கு-கிழக்கினுள்ளேயே பிரதேச ரீதியாகவும் முஸ்லிம்களின் தனித்துவம் பற்றி பேசுபவராகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் காணப்படுகின்றார்.

எது எப்படி இருந்த போதிலும், வடக்கு-கிழக்கு இணைப்பைத் துண்டித்து தமிழ் பேசும் மக்களின் பிரதேச பாரம்பரியம், தனித்துவம் என்பவற்றை முறியடிப்பதில் பேரினவாத சக்திகள் 'வல்லூறாக' வட்டமிடுவதையே அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

புலிகளுக்குப் பகிரங்க கடிதமெழுதியுள்ள திரு.அஷ்ரப், பேரினவாத 'வல்லூறு' குறித்தும் எச்சரிக்கையடைய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகின்றது.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# செல்லக் குழந்தைக்கு சொல்லிக் கொடுக்கவும்



**கா**லையில் எழுந்ததும் முதல்வேலை பல்துலக்குவதுதான். ஆமாம், இந்தப் பல் துலக்கும் வழக்கம் எத்தனை வயது முதல் ஆரம்பிக்கிறது?

சில பெற்றோர்கள், மூன்றுவயதுவரை குழந்தைதானே என்று பல்துலக்கவே பழக்கப்படுத்துவதில்லை. பத்து மாதத்தில் குழந்தைக்குப் பல் முளைக்க, ஆரம்பிக்கிற தென்று தெரியும். ஆனால் பல்லின் வேர்கள், குழந்தை தாயின் வயிற்றில் இருக்கும்போதே உருவாகி விடுகின்றன. வேர்களும், ஈறுகளும் தான் பல்லுக்கும் அதன் ஆரோக்கியத்திற்கும் ஆதாரம்.

தாய் கருவைச் சுமக்கும்போதே குழந்தையின் ஈறுகளும், வேர்களும் பலமாக உருவாக தேவையான சத்துள்ள உணவுகளைச் சாப்பிட வேண்டும்.

கல்சியம் நிறைந்த பால், விற்றமின் சி அடங்கிய கரட், பழங்கள், விற்றமின் ஏ.பி.டி.எல்லாச் சத்தும் ஒரு தாயின் உணவில் இருக்க வேண்டும்.

பால் பற்கள்தான் விழுந்து முளைக்கும். அதற்குப் பிறகு சரியாகக் கவனித்தால் போதும் என்று அறியாமை காரணமாகப் பல பெற்றோர்கள் நினைக்கிறார்கள். முதலில் சொன்னபடி ஈறுகள் முன்னாலேயே முளை விடும். அதனால் குழந்தையின் ஒன்றரை வயது முதலே அதைச் சரியாகப் பல்துலக்கச் செய்ய வேண்டும்.

குழந்தைகள் என்றாலே சொக்கிலேட்டுக்கள், இனிப்புக்கள் என சாப்பிடுவார்கள். அதை வாயிலேயே வைத்துக் கொண்டிருக்காமல் உடனடியாகச் சாப்பிட்டுவிட்டு தண்ணீரைக் குடிக்கச் சொன்னால் பல் சொத்தை வராமல் தடுக்கலாம். காலையில் ஒருமுறை பல் துலக்குவது போலவே, இரவில் படுக்கப்போகும் முன் பல் துலக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்.

கூடியவரை எல்லா நல்ல பழக்கங்களையும் ஐந்து வயதிற்குள் குழந்தைக்குப் படிய வைத்துவிட்டால், நீங்கள் வெற்றிகரமான வாழ்க்கையை அவர்களுக்கு அமைத்துக் கொடுத்து விட்டீர்கள் என்று முதுகில் தட்டிக்கொள்ளலாம்.

## லேடீஸ் ஸ்பெசல்

# சிக்கனமாய் இருக்க ஆசையா? இதோ சில யோசனைகள்

**சி**க்கனமாய் இருக்க வேண்டும் என்று ஆசை. ஆனால் இருக்கமுடியவில்லையே என்று வருத்தப்படுகிறவர்களுக்கு சில யோசனைகள்.

குளியல் சோப்பைப் பெட்டியில் வைத்தால் எப்படியும் நீர்படும்போது கசிந்து சோப் வீணாகிறது. இதற்கு என்ன செய்யலாம்? ஒரு சிறிய ஸ்பொன்ஞ்சை சோப்புப் பெட்டியில் வைத்து அதன்மேல் சோப்பை வையுங்கள். சோப் கரையும்போது அதை ஸ்பொன்ஞ் உறிஞ்சிக்கொள்ளும். ஸ்பொன்ஞ்சைக் கொண்டு கண்ணாடிகள், பீங்கான் பாத்திரங்கள், வோஷ் பேசின் போன்றவற்றைச் சுத்தம் செய்யலாம்.

வெங்காயத்தை வதக்க வேண்டும். அதிகமாக எண்ணெயும் விடமாட்டேன், பொன் வறுவலாகவும் வறுக்க வேண்டும். விரைவாகவும் செய்ய வேண்டும். இதற்கு என்ன வழி? இரண்டு ஸ்பூன் எண்ணெய் விட்டு வெங்காயத்தைப் போட்டு, அதன்மீது கொஞ்சம் சீனியைத் தூவுங்கள். பிறகு பாருங்கள். விரைவாகவே வெங்காயம் பொன் போல வறுபட்டுவிடும்.

பச்சை நிறமும், ஊதா நிறமும் தண்ணீரில் போட்டால் சாயம் போய் வெளிறிவிடுகிறது.



நிறம் மாறாமல், வண்ணம் போகாமல் இருக்க ஒரு யோசனை: முதன் முதலில் இந்த நிறமுள்ள துணிகளை நனைக்கும்போது, சோப் போட வேண்டாம். தண்ணீரில் சிறிது புளிக்கரைசலைக் கலந்து அதில் துணியை ஊறவைத்து பதினைந்து நிமிடங்கள் கழிந்ததும் எடுத்துப் பிழிந்து நிழலில் உலர்த்தினால் சாயம் போகாது.

## அட்வைஸ் கதை

# கனவுகளே..... கனவுகளே....!

**—ராணி அக்கா—**

**“அ**க்கா..அக்கா!”

பக்கத்து வீட்டு விமலாவின் குரல் கேட்டு முன் கதவைத் திறந்தேன். பரபரப்பாகக் காணப்பட்டாள் அவள்.

’படுக்கையில் இன்னும் கொஞ்ச நேரம் உருளலாம் என்றிருந்த என்னை எழுப்பிவிட்ட விமலா மீது ஆத்திரம் ஏற்பட்டாலும் அவள் தோற்றம் பரிதாபமாக இருந்தது.

“வா விமலா..! என்ன ஒரு மாதிரியாக இருக்கிறாய்..? என்ன நடந்தது...?”

விமலா பதில் சொல்லாமல் இருக்கையில் அமர்ந்தாள். “இரு கோப்பி போட்டுக்கொண்டு வாறன்....” அவளைவிட முக்கியமாக எனக்குத்தான் கோப்பி தேவைப்பட்டது.

கோப்பிக் கோப்பையைக் கொடுத்ததும் மளமளவென்று குடித்தாள். ஏதோ ஒரு ஏக்கத்தோடு என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய பிரச்சனை என்ன என்று மீண்டும் நானாகவே கேட்கட்டும் என்றிருந்தது அவள் பார்வை. அதனை உணர்ந்தவளாக அவளிடம் கேட்டேன்.

“என்ன விமலா... என்ன நடந்தது...?”

“அக்கா, அதிகாலையில் காணும் கனவு பலிக்கும் என்கிறார்கள். நான் பயங்கரமான கனவு கண்டேன் அக்கா..! ஒரே இரத்தம்...

ஆமாம்...ஒரு பெரிய கத்தியால் ஒருவனை வெட்டிவிட்டேன் அக்கா...அவன்..அவன் அடிவயிற்றில் காயம்பட்டு, இரத்தம் சொட்டச் சொட்ட விழுந்திட்டான் அக்கா... உடனே விழிச்சிட்டேன்... கனவுதான்... மணியைப் பார்த்தேன்.

“மணி நாலரை... அப்புறம் நான் தூங்கவே இல்லை... பயமாயிருக்கக்கா...”

சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவள் தொண்டை கரகரத்தது. கண்ணீரும் பெருகியது.

“பைத்தியமே...! கனவு கண்டுவிட்டு யாராவது இப்படி கலங்குவார்களா...? உனக்கு ஒண்ணுமே ஆகாது...பயப்படாதே... அது உண்மையாக நடக்கப் போகும் விசயமல்ல.... நீயாவது யாரையாவது வெட்டிச் சாய்ப்பதாவது...!”

இவ்வாறு சொல்லி அவளைத் தேற்றினேன். அவளை அணைத்து முதுகைத் தடவிக்கொடுத்தேன்.

விமலாவுக்கு 19 வயது தானிருக்கும். படித்தது போதும் என்று 10ம் வகுப்போடு படிப்பை நிறுத்திவிட்டார்கள். வசதியான குடும்பத்தில் மூத்த பெண் பிள்ளை. இவளுக்கு இரண்டு அண்ணன்மார். மூத்தவன் தகப்பனாருடன் நகைக் கடையைக் கவனிக்கிறான். அடுத்தவன் பல்கலைக்கழக மாணவன்.

இளம் பெண்களுக்கு மட்டுமல்ல, வயதானவர்களுக்குக்கூட பயங்கரமான கனவுகள் அடிக்கடி வருவதுண்டு. இரத்தம், கத்தி, கடலில் அல்லது நீர் நிலையில் மூழ்குதல், தீப்பற்றி எரிதல் போன்ற காட்சிகளை கனவில் காணும்போது இளம் உள்ளங்கள் பதட்டமடைவதுண்டு. வயதானவர்களுக்கு அது பழக்கமாகிவிடும்.

தூக்கத்தில் காணும் கனவுகளை தூங்கி எழும்போது பலர் மறந்து விடுவார்கள்.

பயங்கரமான கனவுகளைக் கண்டு பயந்து எழும்புபவர்கள் மீண்டும் தூங்க மாட்டார்கள். பொழுது புலரும்வரை பயம் நீடிக்கும்.

இளகிய உள்ளம் கொண்ட சிறிசுகள் விடிந்த பின்னரும் பயந்து கொண்டிருப்பார்கள். இந்த வகையைச் சேர்ந்தவள் தான் விமலாவும்.

இத்தகைய பயங்கரக் கனவினைக் கண்ட விமலாவுக்கு என்னிடம் கதைகூற வருவதற்கு முன்னரே மாதவிலக்கு ஏற்பட்டு விட்டது. அவள் கதை கூறியதும் அவளைத் தேற்றி விட்டு முதன் முதலில் கேட்ட கேள்வியும் அதுதான்.

பொதுவாக மாதவிடாய் ஏற்படுவதற்கு முன்னர் இளம் பெண்களுக்கு இரத்தத்துடன் தொடர்புடைய கனவுகள் தோன்றுவது இயல்பு. ஏனெனில் உடலில் ஏற்படும் மாற்றங்களை நம் உள்ளுணர்வு நமக்கு கனவின் மூலம் புலப்படுத்துகின்றது. மாதவிடாய் ஏற்படுவதற்கு சில நாட்களுக்கு முன்னதாகவே உடலிலும் உள்ளத்திலும் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஒரு வகையான அழுத்தத்தினால் இயல்புக்கு மாறுபட்ட கிளர்ச்சிகள் தோன்றும். காரணமில்லாமல் கோபம் வரும். பயம் ஏற்படும். களைப்பு மேலிடும். மிக நெருக்கமானவர்கள் மீது எரிந்துவிழும் சுபாவம் உண்டாகும்.

சில பெண்களுக்கு திருமண நிச்ச



**“....அவளுடைய கனவில் தங்கமீன் குஞ்சு நீந்தி விளையாடுவது போல் தெரிந்தது...”**

தார்த்தங்கள் ஏற்படுமானால், அவர்களுடைய கனவில் ஆபரணங்கள் தோன்றும். அழகிய பூக்களையும் காண்பார்கள். வண்ணச் சோலையில் உலவுவது போலவும் கனவில் காட்சிகள் வரும்.

முக்கியமாக உடலில் ஏற்படும் அல்லது இனிமேல் ஏற்படப்போகும் மாற்றங்களை கனவுகள் நமக்கு எச்சரிக்கையாக விடுக்கின்றன. ஒவ்வொருவர் காணும் கனவும் வித்தியாசமாகவே இருக்கும் என்பதனால், இன்ன கனவுக்கு இதுதான் பலன் என்று நிச்சயப்படுத்திக்கூற முடியாது.

திருமணமாகி 5 வருடங்கள் சென்ற பின்னரும் குழந்தை இல்லையே என்ற ஏக்கத்துடன் இருந்தாள் சித்ரா. அவளுடைய கனவில் அடிக்கடி ஒரு தொட்டியில் தங்க மீன் குஞ்சு நீந்தி விளையாடுவது போன்ற கனவு தென்பட்டது. அவள் அக்காலத்திலேயே கருவுற்றாள். மூன்று மாதங்களின் பின்னர் மீண்டும் தங்க மீன் கனவில் வந்தது. ஆனால், அந்த மீன் தொட்டியில் இல்லாமல் தரையில் கிடந்து துடித்திருக்கிறது. இக்கனவினை சித்திரா கண்ட மூன்றாவது நாள் அவள் வயிற்றுக் கரு கலைந்துவிட்டது.

இவ்வாறு இனிமேல் நடக்கவிருக்கும் சில சம்பவங்களை நமது மனம் அறிந்து நமக்கு சமிக்ஞை தருகிறது. ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல ஒவ்வொருவருக்கும் தோன்றும் கனவு வித்தியாசப்படும். கர்ப்பமுண்டாகும் எல்லாப் பெண்களுக்குமே தங்க மீன்தான் கனவில் வரும் என்பதில்லை. ஒவ்வொருவருடைய உடல் நிலை, உளப்பாங்கு, சுற்றுச்சூழல் ஆகியவற்றுக்கு ஏற்றாற்போல் கனவுகள் அமைகின்றன.

கனவுகளுக்கான சரியான பலனை அறிய பெரிய ஆராய்ச்சிகள் தேவையில்லை. நீங்கள் காணும் கனவுகளில் நினைவில் இருப்பதை மட்டும், கனவினைக் கண்ட அடுத்த நாளே குறித்துக்கொள்ளுங்கள். எல்லாக் கனவுகளுக்கும் பலன் கிடைக்கும் என்பதல்ல. பல மாதங்களின் பின் உங்கள் குறிப்புகளையும் ஒவ்வொரு கனவின் பின்னர் ஏற்பட்ட சம்பவங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நீங்கள் காணும் கனவுகளுக்குரிய பலன் இன்னது தான் என்பதை சுலபமாக அறிந்து கொள்வீர்கள்.

## நீங்களும் தைக்கலாம்

### தையல் இயந்திரத்தை உபயோகிக்கும் முறை (How to use the Sewing Machine)

தையல் இயந்திரத்தைத் தரையில் அதிக உயரமான இடத்திலாவது, அசையும் மேசையின் மேலாவது, வேலை செய்பவருக்கு விருப்பமான இடத்திலாவது, நின்று கொண்டாவது உபயோகிக்கக்கூடாது. இயந்திரத்தை உபயோகிப்பவரின் மார்புக்கு நேராக அமைத்து அழுத்தும் கருவிக்கு (Pressure foot) நேராக நிமிர்ந்து உட்கார்ந்து அதிக துணி இடப்பக்கமும் குறைந்த அளவு மற்றொரு பக்கமும் வைத்து, அழுத்தும் மிதியை (Pressure foot) உயர்த்தித் துணியை இயந்திரத்திலிட்டு, மிதியை, இறக்கி, இடக்கையிலுள்ள பெருவிரல் இடப்பக்கமும் மற்ற விரல்கள் மிதியின் பின் புறமாகவும் வைத்து, விசைச் சக்கரத்தைச் சுழற்றி, வேண்டிய வேகத்தில் இயந்திரத்தைச் செலுத்த வேண்டும். இயந்திரத்திலிருக்கும் துணியை வெளியே எடுக்க மிதியை (Pressure foot) உயர்த்தி, ஊசியையும் உயர்த்தித் துணியை முன்னுக்குக் கொண்டு வருகையில் இயந்திரத்தில் உள்ள நூலைத் தளர்த்திய பிறகு நூலைத் துண்டித்து அப்புறப்படுத்த வேண்டும்.

### தையல் இயந்திரத்தைக் காப்பாற்றும் ஒழுங்கு (Care of Sewing Machine)

தையல் இயந்திரத்தை உபயோகிப்பவர் மற்றவர்களிடம் கொடுக்கக்கூடாது. கைக்குக் கை வித்தியாசம் உண்டு. இது ஞாபகம் இருக்க வேண்டும். உபயோகிக்கும் நேரம் தவிர, மற்ற நேரங்களில் இயந்திரம் தூசு படியாமல் மூடப்பட்டிருக்க வேண்டும். இயந்திரம் மூடப்பட்டிருப்பதால், ஆகாயத்தில் காற்றுடன் ஈரம் சம்பந்தப்பட்ட காற்று இயந்திரத்தைத் தாக்கித் துருப்பிடிக்கச் செய்யாது. இயந்திரத்தின்மேல் காற்றுப் பட்டுக் கறையாக்காது. பலரும் இயந்திரத்தின்மேல் கை வைக்கமாட்டார்கள். சிறு பிள்ளைகள் விளையாட்டாக இயந்திரத்தைச் சுழற்றி உடைக்க மாட்டார்கள்.

இயந்திரம் உபயோகப்படாத காலங்களில் அதில் துணி வைத்து அழுத்தும் மிதியை (Pressure foot) இறக்கி விசைச் சக்கரத் திருகைத் (Large Motion Screw) தளர்த்தி இயந்திரத்தை இயங்காதபடி செய்து மூடிவைக்க வேண்டும்.

### மெக்கானிசம் (Mechanism):

தையல் இயந்திரங்களுக்கு இருகூட்டு (Sets) மெக்கானிஸம் உண்டு. ஒன்று இயந்திரத்தின் மேல் பாகத்தில் அமைந்திருக்கிறது. மேல் பாகத்தில் அமைந்திருக்கும் நூல், நூற்சக்கரத்திலிருந்து ஊசியின் மூலம் தைக்கக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. மற்றொன்று, கீழ்ப் பாகம்; அதாவது படுக்கையில், பாபின் உள்ளிருக்கும் நூற்சக்கரத்திலிருந்து கொடுத்துக்கொண்டிருக்கிறது. இவ்விரு இயந்திர இயங்கங்களும் (Mechanism) விசைச் சக்கரத்தால் (Balance Wheel) ஓட்டத்தில் இருக்கச் செய்கின்றன. இயந்திரத்தை இயக்க ஆரம்பிக்கச் சரியான பக்கம் விசைச் சக்கரத்தைச் சுழற்றிவிட்டு ஆரம்பிக்கலாம். அதிலிருந்து இயந்திரச் சக்கரம் கால் மிதியின் உதவியால் அல்லது மோட்டார் உதவியால் சுழன்றுகொண்டிருக்கும்.

**பரிசுத் திட்ட கூப்பன் இல-11**

## தினமுரசு-அருள் ஜுவல்லர்ஸ் இணைந்து வழங்கும் தங்க நகைப் பரிசுத் திட்டம்

தங்க நகைப் பரிசுத் திட்டத்தில் பங்குபற்றி வெற்றியீட்டும் அதிஷ்டசாலிகளில் முதல் அதிஷ்டசாலிக்கு தங்க நகை காத்திருக்கிறது.


ஏனைய பத்து அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

1. மகளிர் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
2. இல 1 முதல் 20 வரையான பரிசுத்திட்ட கூப்பன்களைச் சேகரித்து வையுங்கள்.
3. சேகரித்து வைத்துள்ள கூப்பன்களைப் பின்னர் நாம் குறிப்பிடும் திகதிக்கு முன்பாக அனுப்பிவைக்கலாம்.

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது-சுகந்தினி

### மசாலாத் தேங்காய்ப் பால்



**தேவையானவை:**

தேங்காய் (சிறியது)
பச்சை மிளகாய்-4
பச்சை மிளகாய்த்தூள்-1/2 தேக்கரண்டி
மஞ்சள் தூள்-கொஞ்சம்
புளித் தண்ணீர்-1 மேசைக்கரண்டி. (கெட்டியாக)
பெரிய வெங்காயம்-1
அரிசி மாவு-1 தேக்கரண்டி
பூண்டு-4 பல்
சீரகம்-1/2 தேக்கரண்டி
கொத்தமல்லிக் கீரை-சிறிதளவு

**செய்யும் முறை:**

1. சீரகம், பூண்டு இரண்டையும் சேர்த்து விழுதாக அரைத்துக்கொள்ளவும்.
2. வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய், பச்சைக் கொத்தமல்லி ஆகியவற்றை பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.
3. தேங்காயைத் துருவி கெட்டியாகப் பால் எடுக்கவும். கடைசியாகப் பிழிந்தெடுக்கும் தண்ணியான பாலைத் தனியாக வைத்துக்கொள்ளவும்.
4. சீரகம், பூண்டு விழுது, பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி, கொத்தமல்லி, வெங்காயம் மிளகாய் தூள், அரிசி மாவு, மஞ்சள் பொடி, உப்பு எல்லாவற்றையும் சேர்த்து ஒன்றாகக் கலந்து கொள்ளவும்.
5. ஒன்றாகக் கலந்த மசாலாவில் தண்ணியான தேங்காய்ப்பால், புளித்தண்ணீர் முதலியவற்றைச் சேர்க்கவும்.
6. குறைந்த நெருப்பில் வைத்து 10 நிமிடம் கொதிக்கவிடவும்.
7. பின்னர் கெட்டியான தேங்காய்ப்பாலை சேர்த்து 1 நிமிடம் கொதிக்கவிட்டு அடுப்பிலிருந்து இறக்கவும்.

(தோசை, இட்லி, சப்பாத்தி, பூரி, முதலியவற்றுடன் பரிமாறினால் சுவையோ சுவை)

## வீட்டுக் குறிப்புகள்



உருளைக்கிழங்கு வறுவலை ஒரே மாதிரியாக செய்து அலுத்து விட்டதா? கொஞ்சம் மாற்றி செய்து, சுவைத்துப் பாருங்களேன்! குட்டி உருளைக்கிழங்கு என்று கடையில் கிடைக்கும். கோலி உருண்டை அளவிலேயே இருக்கும். அதை வாங்கிக்கொள்ளவும். வேக வைத்து, தோலை நீக்கவும். உப்பு, மசாலா சேர்த்து, அரை மணி நேரம் ஊற வைக்கவும். வாணலியில் எண்ணை விட்டு, அதில் மசாலா உருளைக் கிழங்கை போட்டு பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். பஜ்ஜிக்கு மாவு கரைப்பது போல் கரைத்துக் கொண்டு, அதில் வறுத்த உருளைக் கிழங்கை தோய்த்தெடுத்து எண்ணையில் பொரித்தெடுக்கவும். சுவையான மாலை சிற்றுண்டி ரெடி!



வெஜிடபிள் சாலட் செய்யும்போது காரட்டை கத்தியால் துண்டு துண்டாக வெட்டி போடுவதைவிட, வெங்காயம் துருவுவதை போல வட்ட வட்டமாக துருவி பயன்படுத்தலாம். வெவ்வேறு விதமான டிசைனில் துருவக்கூடிய துருவல் இயந்திரங்கள் கடைகளில் கிடைக்கும். அதை வாங்கி பயன் படுத்தலாம்.

# தகவல் பெட்டி

## ஆகாரம் புசிக்கும் சாகசம்




இவர்கள் நால்வரும் வானத்திலிருந்து வந்து குதித்தவர்களல்ல. கர்ணமடிக்கும் விளையாட்டுகளில் வல்லவர்கள். ஒரு கையை மட்டும் ஊன்றிய வண்ணம் தலைகீழாக நின்று மறுகையால் ஆகாரம் புசிக்கும் சாகசச் செயலில் ஈடுபடுகிறார்கள். லொஸ் ஏஞ்சல்ஸ் நகரின் அடுக்குமாடியின் உச்சியில் தங்கள் திறமைகளைக் காட்டும் இவர்கள் (இடப்பக்கமிருந்து)-ஃபிராங்க் ஹொவ் போல்ட், ஹேர்மன் விற்ஸெக், அல் ஜோக்கின் மற்றும் எஃப்.ஜே.வில்லேர்ஸ் ஆகியோர்.

## என்ன குஷி! என்ன குஷி?!



## யார் இவர்கள்?



வஞ்சகமில்லாமல் உடலை வளர்த்து வைத்திருக்கும் இந்த வனிதையர்கள் யார் என்று யோசிக்க வேண்டாம்.
இவர்கள் வனிதையர் அல்ல - வாலிபர்கள்!
ஜப்பான் நாட்டில் சுமோ வகை மல்யுத்தப் போட்டிகள் நடப்பது உங்களுக்கு தெரியும்.
அந்தப் போட்டிகளில் கலந்துகொள்ளும் மனித மலைகள் மோதிக்கொள்ள முன்னர்- அதாவது போட்டிகள் நடப்பதற்கு முன்னர்- களியாட்ட நிகழ்ச்சிகளில் ஒன்றாகச் சேர்ந்து கலந்து கொள்வார்கள்.
களத்தில் மோதுவதற்கு முன்னர் களியாட்டத்தில் குதிக்கும் மலைகள் வினோத உடைகளில் வந்து பார்வையாளர்களை கவர்ந்து கொள்வார்கள்.
பெண்கள் போல கவர்ச்சியாக உடையணிந்து தோன்றிய ஜப்பானிய சுமோ மல்யுத்த மலைகள்தான் கண்கொள்ளாத வகையில் இங்கே காட்சி தருகிறார்கள்.
பெண் உடை அணிய பெரு மலைகளுக்கும் ஆசை!

## பாரு-பாரு! காரு-பாரு!!

## ஹவுஸ் புல் ஹவுஸ் புல்

ஐம்பதாம், அறுபதாம் ஆண்டுகளில் நம் நாட்டிலும் ஜேர்மன் நாட்டின் தயாரிப்பான 'வோக்ஸ்வாகன்' மோட்டார் கார்கள் தெருக்களில் பவனி வந்தன. மலிவு விலையில் கிடைத்த சிறிய ரக கார் இவை. எப்படித் திணித்தாலும் சாரதி உட்பட 6 பேருக்குமேல் இந்த வண்டிக்குள் இருந்து பயணம் செய்யமுடியாது.

1964ம் ஆண்டு கலிபோர்னியா மாநிலத்திலுள்ள ஃபிளேட்டனைச் சேர்ந்த பள்ளி மாணவ மாணவிகள் மொத்தம் 31 பேர் ஒரு வோக்ஸ்வாகனுக்குள் நுழைந்து சாதனை படைத்துள்ளனர்.

நம் நாட்டில் மினிபஸ் நடத்துநர்கள் படைத்துவரும் நிறைய நிறைய அடைத்தல் சாதனையும் வருங்காலத்தில் மெச்சப்படலாம்.

## துவிச்சக்கர வண்டியான துப்பாக்கிகள்



அமெரிக்காவின் சிக்காகோ நகர வீதியில் இக் காட்சியை கண்டவர்கள் வியந்துதான் போனார்கள்.
துவிச்சக்கர வண்டியில் நடமாடும் தையல் நிலையம் வீதி வீதியாக செல்கிறது.
ஒரு குடும்பமே அதில் பயணம் செய்கிறது.
மேலே இருக்கிறார் பாருங்கள்- அவர்தான் உரிமையாளர்.
பெயர்-ஜோசப் ஸ்ரேயின்லாஃப்.
1780ம் அண்டில் பாவிக்கப்பட்ட துப்பாக்கிகள் பதினைந்து ஜோசப் கையில் கிடைத்தன.
இங்கே என்றால் அந்தத் துப்பாக்கிகளை வைத்தே இயக்கம் தொடங்கிவிடுவார்கள்.
ஆனால் ஜோசப் மக்களை வதைக்க விரும்பவில்லை. அவர்கள் உடைகளை தைத்துக்கொடுக்கும் தையல் நிலையம் உருவாக்க விரும்பினார்.
15 துப்பாக்கிகளையும் உருமாற்றி புதிய வகையான துவிச்சக்கர வண்டியை உருவாக்கிவிட்டார்.
மனைவி, மகன், மகள், மூவருடனும் சொந்தமாய் தொழில் நடத்துகிறார். வியக்கவும் படுகிறார். வருவாயும் கிடைக்கிறது.



## உண்டபின் ஓய்வு

உண்டகளை தொண்டனுக்கும் உண்டு. நன்றியுள்ள நாய்க்கு மட்டும் இல்லையா? ஏன் இல்லை?! மதிய வேளை உணவின் பின்னர் ஓய்வெடுக்கும் நாயார். சுகமான தூக்கம்?

www.padippakam.com

## சுளுக்கு சுந்தரி அழைப்பு இல்லை!

'இராவணன்' படத்தில் சுளுக்கு எடுக்கும் பாத்திரம் விசித்ராவுக்கு. 'இராவணன்' படத்திற்குப் பின்னர் தன்னை 'சுளுக்கு சுந்தரி' என்று இரசிகர்கள் அழைப்பார்கள் என்று சொன்னார் விசித்ரா. 'இராவணன்' படம் வந்துபோய் பல மாதங்களாகிவிட்டன. மடிப்பு அம்சா என்கிறார்களே தவிர 'சுளுக்கு சுந்தரி' என்று யாரும் அழைக்கவில்லை பாவம் விசித்ரா.

## "ரஜனியோடு நடிக்கவில்லை வயது இருப்பதால் வருந்தவில்லை"

நடிகை சுகன்யா கமலுடனும் நடித்துவிட்டார். கமலோடு காதல் காட்சிகளில் நடிக்கும்போது வயது குறைந்தது போல் இருந்தது என்று பேட்டியும் கொடுத்தார்.

இதுவரை ரஜனியோடு நடிக்கவில்லையே. அதனால் வருத்தமா? என்ற கேள்விக்கு 'விரைவில் அவருடன் நடிப்பேன் எனக்கு இன்னும் வயது இருக்கிறது. அதனால் சினிமாவில் நீண்டகாலம் நிலைப்பேன். அதனால் ரஜனியோடு நடிக்கும் ஆசை நிறைவேறும்' என்கிறார் சுகன்யா.

## கமல் ஹொலிவூட்டில் இருந்திருந்தால்.....

'பாண்மார்க்' படம்கூட பெரிதாக கை கொடுக்கவில்லை. இப்போது 'உளவாளி' படத்தில் நம்பிக்கையோடு நடித்துவருகிறார் ராம்கி. அவரிடம் சில கேள்விகள்.

அரசியலில் ஈடுபடும் எண்ணம் உண்டா? பதில்: தற்போது இல்லை. எதிர்காலத்தில் மாற்றம் வரலாம்.

கேள்வி 2. எதிர்கால இலட்சியம். பதில்: ஒவ்வொருத்தருக்குள்ளேயும் ஒவ்வொரு விதமான இலட்சியம் குறிக்கோள் இருக்கும். அதை அலட்சியப்படுத்தாமல் இருந்தால் இலட்சியம் ஒருநாள் ஈடேறும்.

கேள்வி 3. சமீபத்தில் மனதை பாதித்த படம்? பதில்: கமலின் 'மகாநதி'. கமல் ஹொலிவூட்டில் இருந்திருந்தால் இந்நேரம் விருதுகளுக்கென்றே அவர் தனி வீடு கட்ட வேண்டியிருந்திருக்கும்.


மன்சூரலிகான்-அரோரா

## சத்யராஜ்-விஜயகாந்த் மீது தாக்கு! தூய தமிழும் மன்சூர் அலிகானும்!!

தமிழ் திரையுலகில் வித்தியாசமானவர் மன்சூரலிகான். சதுரங்க பார்க்காத துணிச்சல் பேர்வழி. சுத்தமாக தமிழில் படங்களுக்குப் பெயர் வைக்க வேண்டும் என்று சொல்கிறார். புரட்சித் தமிழன் எனப்படும் சத்யராஜ் தன் படத்திற்கு 'வா' 'போஸ்ட்' என்று வைக்கலாமா? தமிழன் தன்னை திமிர்ந்து திராவிடனென்றும் என்று சொல்லும் விஜயகாந்த் தன் படத்திற்கு 'ஆனஸ்ட் ராஜ்' என்று பெயர் வைக்கலாமா? என் இனிய தமிழ் மக்களே என்று பேசும் பாரதிராஜா தன் படத்திற்கு 'கேப்டன் மகள்' என்று பெயர் சூட்டலாமா? என்று அடுக்கடுக்காக கேள்விகள் கேட்கிறார்.

ஆனால் மன்சூரலிகான் ...... கதாநாயகனாக நடித்த படத்திற்கு 'திருவிழா' என்று பெயர் ..... 'ராமராசன்' படத்தில் கதாநாயகி நந்தினி பெயர் கொண்ட தெலுங்குப் பெண் 'இராவணன்' பட நாயகி கஸ்தூரி ஆரியப் பெண். இது முறையா? 'சிந்துபாத்' பட நாயகி ..... முரண்பாடாக இல்லையா? அதற்கு மன்சூரலிகான் சொல்லும் பதில் என்ன? தமிழச்சிகள் யாரும் நடிக்க முன்வரவில்லை. அதனால்தான் நடிக்க இடம் கொடுத்தேன். அடுத்த படங்களில் தமிழச்சிகளை நடிக்க வைப்பேன் என்கிறார் பாக்கலாம்.

## மினி சினி

★ கப்பர் ஸ்டார் ரஜினியின் 'அண்ணாமலை' படத்திற்கு இசையமைத்துள்ள தேவா அடுத்து விஜயா வாஹினி நிறுவனம் தயாரிக்க, கப்பர் நடிகர் சிவா நடிக்கும் படத்திற்கு இசையமைக்கிறார்.

★ இயக்குநர் இமயம் கே.பாலசந்தரின் இயக்கத்தில் முதன் முறையாக 'டூயட்' படத்தில் செந்தில் நடித்துள்ளார்.

★ பிரபுதேவா நடிக்கும் 'காதலன்' படத்தில் வரும் ஒரு பாடலை அப்படத்தின் இயக்குநர் ஷங்கரும் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானும் பாடியிருக்கிறார்கள்.

★ கே.பாலு இயக்கத்தில் 'பவித்ரா' படத்தில் நடித்துக்கொண்டிருக்கும் ராதிகா, கபாஷ் இயக்கும் அடுத்த படத்திலும் கதாநாயகியாக நடிப்பதற்கு ஒப்பந்தம் ஆகியுள்ளார்.

★ 'தோழர் பாண்டியன்' படத்தை அடுத்து, சென்ற ஆண்டின் சிறந்த நடிகருக்கான தேசிய விருது பெற்ற மம்முட்டி கதாநாயகனாக நடிக்கும் படமொன்றினை இயக்கவுள்ளார் மணிவண்ணன். இப்படத்தை கோவை செழியன் தயாரிக்கிறார்.

★ 'கிழக்குச் சீமையிலே' படத்தில் பரிசல் ஓட்டும் பெண்ணாக நடித்தவர் முன்னாள் நடிகை சரிதாவின் தங்கை விஜயா. தற்போது இவர் சுகாசினியின் 'இந்திரா' படத்தில் நடித்து வருகிறார்.


விசித்ரா

★ விஜயகாந்தின் 'பதவிப் பிரமாணம்' படத்தின் இயக்குநரான உதயசங்கர் இயக்குநராவதற்கு முன்னர் 'ராமாயி வயசுக்கு வந்துட்டா' என்ற படத்தில் கதாநாயகனாக நடித்துள்ளார்.

★ 'பொன்னுமணி' படத்தில் நடித்த சௌந்தர்யா தற்போது தெலுங்கில் முன்னணியில் உள்ளார். இவர் சமீபத்தில் நடித்த படங்களின் வெற்றியால் மீனா, ரோஜா ஆகியோர் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

★ 'வைகாசி பொறந்தாச்சு', 'மதுமதி' போன்ற படங்களைத் தயாரித்த அன்பாலயா பிரபாகரன் அடுத்துத் தயாரிக்கவுள்ள படத்திற்காக புதுமுகங்களைத் தேடும் வேலையில் இறங்கியுள்ளார்.

★ பிரபல கன்னட நடிகர் ரவிச்சந்திரனுக்கு ஜோடியாக கன்னடப் படமொன்றில் நடித்து வருகிறார் கஸ்தூரி.

★ சரவணன்-ஐஸ்வர்யா ஜோடியாக நடித்துக்கொண்டிருந்த 'அர்ஜுனன்' படம் பாதியிலேயே நிறுத்தப்பட்டு விட்டது.

★ பிரபு நடிக்கும் 'இன்று முதல்...' படத்தின் பெயரை 'வியட்னாம் காலனி' என்று மாற்றியுள்ளனர்.

## ★ இரு ஜோடிகள்!

டியர்சன் படத்தில் நிறைய நட்சத்திரங்கள். ரகுமான்-சௌந்தர்யா ஜோடியோடு சிவா-ரூபஸ்ரீ ஜோடியும் உண்டு. சிவகுமார், நாசர், ஸ்ரீ வித்யா என்று பலரும் நடிக்கிறார்கள்.


ரகுமான்-சௌந்தர்யா படம்-டியர் சன்

மரங்கொத்திப் பறவை தோற்றது போ! இந்த மனங்கொத்திப் பறவை முன்னாலே!

## காதோடு சொல்லுகிறோம்

★ 'பாண்டி கிங்' இந்த வருடம் முடியும்வரை தான் பிஸி என்று பந்தா காட்டுகிறாராம். சான்ஸ் இல்லாமல் வீட்டில் முடங்கிக் கிடந்தவருக்கு ஒரு இரண்டு படம் ஓடியவுடன் தலைகால் தெரியவில்லை என்று தயாரிப்பாளர் வட்டாரம் பேசுகிறது.

★ மதுமதி நாயகிக்கு வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. மீண்டும் அன்பாலயா தயாரிப்பாளரின் அடைக்கலம் தேடியிருக்கிறார். அவரும் வாரி எடுத்துக்கொண்டதாக கோடம்பாக்க வட்டாரம் கிசுகிசுக்கிறது.

★ வேண்டாம் வேண்டாம் என்று மறுத்தபடிதான் கவர்ச்சி உடையில் நடிப்பதாக 'மான்' நடிகை கூட்டமொன்றில் பேசினாராம். இவர் வேண்டாமென்று சொல்ல கையைப் பிடித்து வலுக்கட்டாயப்படுத்தினார்களாக்கும் என்று பேசிக்கொண்டார்களாம் கூட்டத்தில் இருந்தவர்கள்.

★ பழம்பெரும் ரமா நடிகைக்கு மைந்தன் சரியில்லையாம். இவரது சொத்துக்களை கரியாக்குவதே அவரது வேலையாம். வீட்டில் மனைவியிருந்தாலும் தினமும் வெளிச்சாப்பாடுதானாம். சிரிக்கவைக்கும் நடிகை உள்ளே அழுகிறாராம்.

★ ராஜாதிராஜ கம்பீர நாயகன் துணிப் பெயர் கொண்ட கவர்ச்சி நடிகை வீட்டிற்கு வாரா வாரம் காய்கறிகளை விநியோகம் செய்கிறாராம். இருவருக்கும் இடையே அப்படியொரு பிணைப்பாம்.

★ விசித்ரமான மடிப்பு நடிகைக்கு வரும் வாய்ப்புக்களை வேறொரு க நடிகை தட்டிப் பறிக்கிறாராம். தட்டிப் பறிக்கும் வித்தை பற்றி ஆராய்ந்து வருகிறாராம் வி.நடிகை.

★ ஹீர நடிகை உயரமாக இருப்பதால் கதாநாயகர்கள் சிலர் அவரை விரும்பவில்லையாம். தற்போது தொலைக்காட்சி பக்கம் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்.

செல்... நம்... 'இதுதான... என்று ... வைத்து ... டாக்... ராஜசேக... இரு... தனிக்... நடித்த ... தற்போ... கைதா... தம்பி... பார்த்தும்... வேல் இ...

கெட்டிக்க... கமல்ஹாசனி... உடையலங்... கவனிப்பது... சரிகா வழியில்... கிருஷ்ணனின்... கணவர் இ... உடையலங்... எஸ்.ஏ.சந்திரசேகரின்... சந்திரசேகர், இயக்கு... மனைவி ஆகியோ... தொடங்கி ஒரு...

ராசி ந... தமிழ் சின... பார்ப்பது... என்பதில்... தம்... இசையமைப்... ஏ.வி.எம்... சகல வல்ல... 5060... காதவே சி... திரைப...


அரோரா படம்-சேவக...

ல்வாவின்
ம்பிக்கை!

ண்டா போலீஸ்' தெலுங்கு டப்பிங் படத்திற்கு பெயர் அதன் மூலமே பிரபலமானவர் டாக்டர் ராஜசேகர். அவரது தம்பி செல்வாவும் ...ரின் ஜாடையில் ...ருந்தாலும் அவர் கதாநாயகனாக படங்கள் எதுவும் பெரிதாகப் பேசப்படவில்லை. ...பாது 'சக்திவேல்' படம் தன்னை ...கிவிடும் என்று ...வசூல் கணக்கு ...ண்டிருக்கிறார். ...க்கப் பயமோ?

ர மனைவியர்

...மனைவி சரிதா ...மல் படங்களின் ...ார விசயங்களை ...தெரிந்த செய்தி. ...யக்குநர் சுரேஸ் ...னைவியும் தனது ...கும் படங்களின் ...ார விசயங்களை கவனிக்கிறார். ...மனைவி ஷோபா ...உதயகுமாரின் ...ர் கதை எழுதத் ...கலக்குக் களக்கி வருகிறார்கள்.

ல்ல ராசி!

...மா உலகில் ராசி ...சகுனம் பார்ப்பது ...டும்பப் பிடியான ...கை இருக்கிறது. ...ாளர் தேவாவின் ...கார் எண் 1234. ...ட நிறுவனத்தின் ...களது எண்களும் ...பயது எண்களுக் ...லகத்தினர் ...வழிகிறார்கள்.

# சி னி வி சி ட்


ராகுல் ரோய்-அனுஅகர்வால்
படம்-ஜானம்

## இப்போதைக்கு இல்லை!

நடிகர் அர்ஜுன் இயக்கத்தில் 'ஜெய்ஹிந்' மற்றொரு 'ஜென்டில்மேன்' போல் வசூலில் சாதனை படைக்கக்கூடும்.

தன்னையே இயக்கிவரும் அர்ஜுன் வேறு கதாநாயகர்களை வைத்து இயக்குவாரா? இப்போதைக்கு கிடையாது! தன்னை வேறுபடுத்தி காட்டுவதும், தன் நடிப்புத் திறமையை தன் மூலமாக வெளிப்படுத்துவதுமே இப்போது முக்கியம் என்று கருதுகிறார்.

தெலுங்கில் 'அரண்மனைக்கிளி' படத்தில் கதாநாயகனாக நடித்துவருகிறார். தமிழில் ராஜ்கிரண் செய்த பாத்திரம் தெலுங்கில் அர்ஜுனுக்கு.

கமலுக்கு 16 வயதினிலே, ரஜனிக்கு எங்கேயோ கேட்ட குரல், விஜயகாந்துக்கு சின்னக் கவுண்டர், சத்யராஜுக்கு வேதம் புதிது அப்படியொரு வித்தியாசமான படத்தில் நடிக்க ஆசை.

'ஜெய்ஹிந்' முடிந்ததும் அதுபற்றி யோசிப்பேன் என்கிறார் ஜெய்ஹிந்த். படத்தை தெலுங்கிலும் மொழிமாற்றம் செய்கிறார்கள்.


அர்ஜுன்
படம்-ஜெய்ஹிந்த்

## சினிமா விமர்சனம்-வீரா

நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்துள்ள ரஜனிபடம். இரசிகர்களை சகல வழியிலும் திருப்தி செய்ய ஆசைப்பட்டிருக்கிறார் இயக்குநர்.

பாடகராக வாய்ப்புத் தேடி நகரத்திற்கு வந்து ஆரம்பித்த ரஜினி, செந்தில் கூட்டணி இறுதிவரை அமோக நகைச்சுவை உபயத்தில் படத்தைக் கொண்டு செல்கிறது.

வெள்ளப் பெருக்கில் இறந்துபோனதாக கருதப்பட்ட மீனா மீண்டும் வருவதோடு ஏற்பட்ட திருப்பத்தையும் நகைச்சுவை கலந்து, வழக்கமான ரஜினி மார்க் அசட்டுத்தன முழிப்புகள் கலந்து சலிப்பில்லாமல் நகர்த்துகிறார்கள்.

ரோஜாவும், மீனாவும் போட்டி போட்டுக்கொண்டு இரு பாடல் காட்சிகளில் ரஜனியை ஒரு வழி பண்ணிவிட்டார்கள்.

ஜனகராஜும் சிரிக்க வைக்கிறார். புதிய வில்லன் தோற்றத்தில் பிரமாண்டமாக இருக்கிறார். உதவிக்கு ரஞ்சனும் உண்டு.

இரண்டு மனைவிகளை வைத்துக்கொண்டு ரஜனிபடும் பாடு அவரது இரசிகர்களுக்கு வித்தியாச விருந்து. சண்டைகளும் ரஜனி பாணியில் உண்டு. 'வீரா' ரஜினி பாணிப்படம். சிரிக்கலாம். கதை தேடக்கூடாது.

ஹௌ இஸ் இட்? சூப்பர்!

என்று சொல்வார்கள் ரஜினிப் பிரியர்கள்.

## யார் வந்தாலும் ஒரே தொகை!

பொம்பளை சிவாஜி என்று வர்ணிக்கப்படுபவர் மனோரமா. இப்போதும் அவர் காட்டில் மழைக்கு பஞ்சமில்லை. அதனால் சிறிய பட்ஜெட் படமானாலும் சரி, பெரிய பட்ஜெட் படமானாலும் சரி ஒரே தொகையைத்தான் வாங்குகிறாராம்.

## சத்யராஜின் கொள்கை

"ஒரு படமாவது இயக்கிய அனுபவம் இருந்தால் வாருங்கள், உங்கள் இயக்கத்தில் நடிக்க ஓகே" இதுதான் சத்யராஜின் கொள்கை.

கதாநாயகனாக நடிக்கத் தொடங்கியது முதல் அந்தக் கொள்கைப் படிதான் நடித்து வருகிறாராம்.

## நாசர் இந்தியில்

வில்லனாக இருந்து கதாநாயகனாக உயர்ந்து 'மகளிர் மட்டும்' படத்தின் பின்னர் பேசப்படும் ஹீரோவான நாசர் இந்தியில் நடிக்கும் படம் 'யாத்ரா' சன்னி தியோல், பூஜாபட் ஆகியோரோடு நடிக்கிறார்.



## சீசன் கவிஞர்கள்

இசைஞானி இளையராஜா ஒவ்வொரு சீசனுக்கு ஒவ்வொரு கவிஞர்களை தூக்கி விடுகிறார். ஆரம்பத்தில் வைரமுத்து, மு.மேத்தா. பின்னர் முத்துலிங்கம். அதன் பிறகு பிறைசூடன். தற்போது பொன்னடியான் பட்டியல் நீளும்போலத்தான் தெரிகிறது.


கனகா

## சென்னையில் பெண்களின் கருத்தரங்கு!
## கஸ்தூரி வெட்கம் பாரதிராஜா கோபம்!!

சென்னையில் தமிழ் சினிமாவில் பெண்கள் நிலைபற்றி ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. பாரதிராஜா கஸ்தூரி போன்ற திரையுலகத்தினர் முன்னால் இருக்கக்கூடியதாகவே காரசாரமான கண்டனங்கள்.

மரத்தை சுற்றி வந்து பாடுவதிலும், கவர்ச்சியாக நடிப்பதிலும் தனக்கு உடன்பாடு இல்லை. என்று கஸ்தூரி பேசினார்.

பாரதிராஜா பேசும்போது கோபப்பட்டார். "எங்களுக்கு தாலி தேவையில்லை என்று கழற்றி வீசிவிட்டு புதுமைப் பெண்களாக வாருங்கள். இந்தப் பாரதிராஜா உங்கள் பின்னால் வருவான். (அரங்கத்தில் நிசப்தம்)

நடனக் காட்சியில் எனக்கு உடன்பாடு கிடையாது. அது வியாபாரம். ஃபைனான்ஸ் பண்ணுபவர்கள் கேட்கிறார்கள். கொடுக்கிறேன்.

சத்யஜித்ரேயின் எத்தனை படங்களை தமிழர்கள் பார்த்திருக்கிறார்கள்?

இங்கே எட்டு வகைக் காய்கறியோடு வடை பாயசத்தோடு சாப்பிடவில்லை என்றால், திருப்தி வராது. என்று பேசியவர் இறுதியில், "இன்னும் கொஞ்ச காலத்தில் இந்த பாரதிராஜா வித்தியாசமான படங்கள் கொடுப்பான் அவனுக்கென்று ஒரு மார்க்கெட் இருக்கும்" என்று கூறினார்.

பாரதிராஜா உணர்ச்சி வசப்பட்டதை பார்த்து விட்டு பெண்கள் அணி பேசாமல் இருந்துவிட்டது.



## ...நாவல் வேறு- சினிமா வேறு!
## சொல்கிறார் பாலகுமாரன்

"நாவல் வேறு-சினிமா வேறு. இந்த ...ரண்டையும் குழப்பிக்கொள்ள நான் தயாராக ...யில்லை. சினிமாவுக்காக தனித்த கதை செய்வதே ...என் விருப்பம். 84 நாவல்கள் எழுதிய பலம் எனக்கு ...கை கொடுக்கும்" இவ்வாறு சொல்லியிருக்கிறார் பிரபல எழுத்தாளர் பாலகுமாரன்.

...து நம்ம ஆளு படத்திற்கு பாலகுமாரன்தான் இயக்குநர் என்று எழுத்தோட்டத்தில் போட்டுக் காண்பித்தார்கள்.

ஆனால் பாக்யராஜ்தான் உண்மையில் படம் முழுக்க தெரிந்தார்.

அதன் பின் இயக்குநர் ஆசைக்கு பாலகுமாரன் ஒரே முயற்சி போட்டுவிட்டார். இப்போது கதை வசனம் மட்டுமே எழுதுகிறார். ஜென்டில்மேன் படத்திற்கு பிறகு பாலகுமாரன் வசனங்களுக்கு திரையுலகில் அதிக வரவேற்பு கிடைத்திருக்கிறது. தான் எழுதிய நாவல் எதையும் படமாக்கும் உத்தேசம் இடையிலே கிடையாது என்கிறார் பாலகுமாரன்.

முகப்பில்
இதழ் நிறை புன்னகையோடு
சிவரஞ்சனி-பிரசாந்த்



ஆடை கட்டி வந்த நிலவோ-கண்ணில்
மேடை கட்டி ஆடும் எழிலோ-இவள்
ஆடை கட்டி வந்த நிலவோ-குளிர்
ஓடையில் மிதக்கும் மலர்
ஜாடையில் சிரிக்கும் இவள்
காடுவிட்டு வந்த மயிலோ-நெஞ்சில்
கூடுகட்டி வாழும் குயிலோ?
-கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்





## கண்ணே பாப்பா

கண்ணே!மணியே!நீ பேசு
கனிவாய் திறந்து நீ பேசு
அம்மா! அப்பா அண்ணா ன்னு
அன்புத் தமிழில் நீ பேசு!
தாத்தா!பாட்டி!மாமா ன்னு
தங்கத் தமிழில் நீ பேசு!
'அ'னா! 'ஆ' னா! 'இ'ன்னு
அழகுத் தமிழில் நீ பேசு
மழலை பிறக்க நீ பேசு
மணி மொழியாக நீ பேசு
எண்ணம் வாழ நீ பேசு!
இலக்கியம் வாழ நீ பேசு
ஊமை ஒழிய நீ பேசு
உன் மொழி வாழ நீ பேசு!



அனுப்பியது- செல்வன்.இராமநாதன் தமிழ்வண்ணன்
சென் ஜோன்ஸ் தமிழ் மகா வித்தியாலயம்-இறக்குவானை.

"தம்பி சற்றே மெலிவானால்-அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ?
செம்புக்கும்-கொம்புக்கும் அஞ்சி-மக்கள்
சிற்றடி மைப்பட லாமோ?"
–சுப்பிரமணிய பாரதியார்–

## பாப்பா முரசு சிறுகதை

# புலியும் கிலியும்

ஒரு காட்டில் ஒரு கிழப்புலி அட்டகாசமாகத் திரிந்து எல்லாப் பூச்சிகளையும், பிராணிகளையும், கொன்று தின்றது. அதனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என எல்லாப் பிராணிகளும் கூட்டம் போட்டு ஒரு முடிவெடுத்தன. அந்த முடிவை யார் போய் கிழப்புலியிடம் கூறுவது?

எல்லாப் பிராணிகளும் பின்வாங்கிய போது ஒரு வண்ணாத்திப்பூச்சி பறந்து வந்து, "நான் போய் அந்த முடிவைக் கிழட்டுப் புலியிடம் சொல்லிவிட்டு வருகிறேன்," என்று கிளம்பியது.

யானை, ஒட்டகம், சிறுத்தை போன்ற மிருகங்கள் எல்லாம் வண்ணாத்திப் பூச்சியைப் பார்த்துச் சிரித்தன.

"சுண்டங்காய்பூச்சி நீ. அந்தக் கிழட்டுப் புலி உறுமினாலே நீ செத்துப் போவாய்," என ஏளனம் செய்தன. அதையெல்லாம் பொருட்படுத்தாமல் வண்ணாத்திப் பூச்சி பறந்து கிழட்டுப் புலியின் குகைக்குள் சென்றது.

அந்தச் சமயம் அந்தப் புலி தூங்கிக் கொண்டிருந்தது. அதை எப்படி எழுப்புவது? வண்ணாத்திப்பூச்சி பறந்துபோய் புலியின் காதிற்குள் தனது இறக்கைகளைப் படபடத்துவிட்டு, வேகமாகப் பறந்து வந்து மரத்தின் உச்சியில் அமர்ந்து கொண்டது.

தூக்கத்தைக் கலைத்த கோபத்தில் சீறி எழுந்த புலி, "யாரடா அவன் என் தூக்கத்தைக் கலைத்தது?" என்று கேட்டது.

மரத்தில் அமர்ந்திருந்த வண்ணாத்திப் பூச்சி, "நான்தான் தங்களை எழுப்பினேன் பிரபு, அதற்கு ஒரு அவசரமான காரணம் இருக்கிறது. என்னைக் கொல்லாமல் இருந்தால் சொல்கிறேன் பிரபு," என்றது.

"கொல்லமாட்டேன் சொல்," என்றது புலி.

வண்ணாத்திப்பூச்சிக்குத் தைரியம் வந்தது. "பிரபுவே காட்டில் உள்ள பூச்சிகளும், மிருகங்களும் இணைந்து இன்று காலை ஒரு கூட்டம் போட்டிருக்கிறார்கள். அதன்படி நீங்கள் எதையாவது கொல்ல வரும்போது அது உங்களிடமிருந்து தப்பிக்க ஒரு வாய்ப்புத் தரவேண்டுமாம். இரண்டாவது முறை சந்திக்கும் போது உங்கள் விருப்பப்படி கொன்று சாப்பிடலாம். இந்த நிபந்தனையை உங்களிடம் சொல்லிவிட்டுப்போகவே நான் வந்துள்ளேன்," என்றது.

புலிக்கு வந்ததே கோபம், "எனக்கு நிபந்தனை விதிக்க நீங்கள் யார்? இந்தக் காட்டிலேயே மிகவும் வயதில் மூத்தவன் நான்தான். நான் எப்போது வேண்டுமானாலும் யாரை வேண்டுமானாலும் சாப்பிடுவேன். இப்போதே உன்னைச் சாப்பிட்டுக் காட்டுகிறேன் பார்," என நாக்கைச் சுழற்றி வண்ணாத்திப் பூச்சியைக் கவ்வப் பார்த்தது.

வண்ணாத்திப்பூச்சி அங்கிருந்து வட்டமிட்டபடியே புலி வாயில் சிக்காமல் பதில் சொல்லிற்று.

"பிரபுவே, கடவுள் எனக்கு இறக்கைகள் கொடுத்திருப்பது உங்களைப் போன்ற கொடிய மிருகங்களிடமிருந்து தப்பி உயர உயரப் பறப்பதற்குத்தான். நீங்கள் உருவத்தில் பெரியவராக இருக்கலாம். என்னைவிட வயதில் மூத்தவராக இருக்கலாம். ஆனால் இந்தச் சின்னவர் உயரப் பறக்கிற மாதிரி உங்களால் பறக்க முடியாது. உங்களுக்குக் கொடுக்காத ஒரு சக்தியை ஆண்டவன் உருவத்தில் சிறிய எனக்குக் கொடுத்திருக்கிறான். அதைப் புரிந்துகொள்ளுங்கள். எந்த மிருகங்களையும், பூச்சிகளையும் கொன்று சாப்பிடுவதற்கு முன்பு அது தப்பிக்க ஒரே ஒரு வாய்ப்பு தரும்படி தானே உங்களைக் கேட்கிறோம். உங்களுக்கோ வயதாகிக் கொண்டே போகிறது. பேசாமல் எங்கள் நிபந்தனையை ஒப்புக்கொள்ளுங்கள்." என்றது.

கிழட்டுப் புலிக்கு வண்ணாத்திப்பூச்சி சொன்னதில் ஏதோ ஒரு நியாயம் இருப்பதாகத் தெரிந்தது. "ஒரே ஒரு முறை உங்களுடைய காரணங்களைக் கேட்டு கொல்லாமல் விடச் சம்மதிக்கிறேன். இன்று ஒரு நாள்தானே நான் பட்டினி கிடக்க நேரிடும். நாளைக்கு இன்று சந்திப்பவற்றை எல்லாம் கொன்று தின்றுவிட முடியும் அல்லவா? போய் உன் சங்கத்தில் என் ஒப்புதலைச் சொல்லி விடு." என்றது.



வண்ணாத்திப்பூச்சி சந்தோசத்தில் இறக்கைகளைப் படபடத்தபடி பறந்துசென்று தனது வெற்றியை சங்கத்தினரிடையே சொல்லிற்று. அனைத்து மிருகங்களும் சந்தோச ஆரவாரம் செய்தன.

மறுநாள் கிழட்டுப்புலி குகையை விட்டு வெளியே வந்தது. முதலில் எதிரில் வந்த்து அதே வண்ணாத்திப்பூச்சிதான்.

"வா...உன்னை விழுங்கப் போகிறேன்," என உறுமியது புலி.

"நிபந்தனை நினைவிருக்கிறதா? இன்றைக்கு நான் ஆசைதீர மலரில் தேன் உறிஞ்சப் போகிறேன். நாளைக்கு வாருங்கள் பிரபோ?"

என்றது வண்ணாத்திப்பூச்சி.

அடுத்து வந்தது நரி. அதை விழுங்கப் போயிற்று புலி. உடனே அது, "நினைவிருக்கிறதா நிபந்தனை? எனக்கு இன்று உடம்பு சரியாக இல்லை. நாளைக்கு வா பார்க்கலாம்," என்றது.

புலி பல்லை நறநற என கடித்துக் கொண்டது. அப்போது முள்ளம்பன்றி எதிரில் வந்ததும், அதன் மீது புலி பாய அதற்கு அது, "ம்...நெருங்காதே நிபந்தனை மறந்து போயிற்றா? என் உடம்பில் இன்றைக்குப் பாம்பு கடித்து விஷம் ஏறியுள்ளது. நாளை பார்க்கலாம்!" என்றது.

யானை வந்தது. புலி அதன்மீது பாய, "இன்றைக்கு நான் விரதம் இருக்கிறேன். என்னைக் கொன்றால் அது உனக்குப் பாவம். நாளை வா," என்றது.

இவ்வாறு ஒவ்வொரு மிருகமும் புலியிடமிருந்து தப்பியது.

புலிக்குக் கடும் பசி. எதிரில் அதே மாதிரி ஒரு புலி வர அதன் மீது பாய்ந்தது. அது நிஜப்புலி அல்ல. புலியின் விம்பம். குரங்கு கையில் வைத்திருந்த பெரிய கண்ணாடிதான் அது. கண்ணாடி உடைந்து புலியின் உடம்பெங்கும் காயம் ஏற்படுத்தியது. புலியின் உடம்பெல்லாம் இரத்தம் பீறிட்டு புலி இறந்தது. இதைச் சுற்றி நின்ற மற்றப் பிராணிகள் பார்த்துச் சிரித்தபடி, "எதிரி ஒழிந்தது" எனக் கரகோஷம் எழுப்பின.

■

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 14.05.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 39
தினமுரசு வாரமலர்
88/14, சோமாதேவி பிளேஸ்
கிருலப்பனை,
கொழும்பு-05.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 36

**பரிசுக்குரியவர்**
அ.முஹம்மத் அஸாம்
ஸாஹிரா மத்திய கல்லூரி
புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்**

செல்வன்.நிரஞ்சன் சேவியர்
மஸ்கெலியா.

ப.சாந்தி லூசில்டா
புனித அன்னம்மாள் பாடசாலை
கொழும்பு-13.

எம்.சாரங்கன்
உவர்மலை ம.ப.த.விபுலானந்தர் கல்லூரி
திருகோணமலை.

அருமைத்துரை பிரகாஸ்
புனித சவேரியார் மகாவித்தியாலயம்
திருகோணமலை.

ஏ.எப்.ஷிபானா
அலுபொத்த மகாவித்தியாலயம்
படல்கும்புர.


ஏ.எமலின்
சிசிலியா மகளிர் மகாவித்தியாலயம்
மட்டக்களப்பு.

## மழையைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டாமா?

1. மழை என்றால் என்ன?
   0.5 மில்லி மீட்டரிலும் அதிகமான பருமன் (விட்டம்) உடைய நீர்த்துளிகள் மழை எனப்படும்.
02. தூவானம் என்றால் என்ன?
   0.5 மில்லி மீட்டருக்குக் குறைவான பருமனுடைய (விட்டம்) நீர்த்துளிகள் தூவானமாகும்.
03. மழைத் துளிகளின் வடிவங்கள் யாவை?
   வட்டம், நீள்வட்டம்.
04. சிதறுகின்ற மழைத்துளி எவ்வாறானது?
   பருமன் கூடியது.
05. வேகம் கூடிய மழைத்துளிகள் எவ்வாறானவை?
   அதிகளவான பருமன் கொண்டவை.
06. மழைத் துளிகளின் அதி கூடிய பருமன் யாது?
   07 மில்லி மீட்டர் பருமன் (விட்டம்) ஆகும்.
07. முன் நிலை மழை என்றால் என்ன?
   குளிர்ச்சியானதும், வெப்பமானதுமான காற்று மண்டலங்கள் ஒன்றோடொன்று மோதுவதால் ஏற்படும் மழையாகும்.
08. இடிமழை என்றால் என்ன?
   காற்று மண்டலம் நிலப்பரப்பிலோ அல்லது நீர்ப்பரப்பிலோ தடைப்பட்டுச் சுழன்று வருதலால் ஏற்படும் மழையாகும்.
09. மலை மழை என்றால் என்ன?
   மேகங்கள் உயர்ந்து மலைகளின் மேல் மோதி மேல்நோக்கிச் செல்லும்போது குளிர்ச்சியடைவதால் பெய்யும் மழையாகும்.
10. 'மாரி' என்றால் என்ன?
   பனிக்கட்டியின் மேல் பல படிவுகளாக உறைந்த பனியாகும்.
11. மாரி எவ்வெவ் வடிவங்களில் பெய்கின்றது?
   உறை பனியாக, பனித்தூளாக, கல்மாரியாக.
12. உறைபனி என்பது என்ன?
   பனிக்கற்றைகளின் கூட்டுச் சேர்க்கையாகும்.
13. கல்மாரி என்றால் என்ன?
   பனிக்கட்டியின் மேல், பல படிவுகளாக உறைந்த பனியாகும்.
14. பனித்தூள் என்பது என்ன?
   காற்றின் வெப்பம், நீர் உறையும் அளவுக்குக் கீழ் இருக்கும்போது பெய்வதாகும்.
15. மழையை அளக்கும் கருவியின் பெயர் என்ன?
   மழைமானி.

தொகுப்பு: கந்தப்பெருமாள் நிமலதாசன்
மாங்காடு ச.வி-செட்டிபாளையம்.


## அறிவோம் மனதில் பதிவோம்



உலகிலேயே மிகச் சிறிய ஊரும் பிராணி மேற்கிந்தியத்தீவு பல்லிகள். முழு வளர்ச்சி அடைந்த பல்லிகள் தீப்பெட்டியை விடவும் சிறியதாக இருக்கும்.



அமெரிக்காவில் நியூயோர்க் மிருகக்காட்சி சாலையில் வாழ்ந்த சிம்பன்ஸி வகைக் குரங்கு 55 ஆண்டுகள் வாழ்ந்தது.



ஒலியை விட வேகமாகச் செல்பவை சுப்பர் சொனிக் ஜெட் விமானங்கள். 1960ம் ஆண்டு அமெரிக்க விமானப் படையில்தான் முதன் முதலாக இவ்வகைப் போர் விமானம் இடம் பெற்றது. பறந்துகொண்டே இலக்கு நோக்கிக் குண்டு வீசும் திறன் கொண்டது இவ்விமானம்.



அமெரிக்காவில் உள்ள லொஸ் ஏஞ்சலிஸ் நகரில்தான் முதன் முதலாக விமானத்திலிருந்து குண்டு வீசப்பட்டது. 1910ம் ஆண்டு ஜனவரி மாதம் 19ம் திகதி பறக்கும் விமானம் மூலம் குண்டு வீசி ஒத்திகை பார்க்கப்பட்டது.



தவறின்றித் தெளிவாகப் புரியும் வகையில் நிமிடத்திற்கு 300 வார்த்தைகள் வீதம் பேச ஒரு சிலரால் மட்டுமே முடியும். அமெரிக்க முன்னாள் அதிபர் கெனடியும் அவர்களில் ஒருவர்.

## கிரிக்கெட் உலகில்

1. கிரிக்கெட்டிலுள்ள விக்கட் பிச்சினுடைய நீளம்?
   **22 கஜம்.**
2. கிரிக்கெட்டில் 1992ம்ஆண்டு உலக கிண்ணத்தைப் பெற்ற அணி?
   **பாகிஸ்தான் அணி.**
3. கிரிக்கெட்டில் 1996ம் ஆண்டு உலக கிண்ணப் போட்டி எங்கே நடைபெறவிருக்கிறது?
   **இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில்.**
4. இப்போட்டி எத்தனை வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும்?
   **நான்கு வருடங்களுக்கு ஒரு முறை.**
5. முதல் மூன்று டெஸ்டிலும் தொடர்ச்சியாகச் சதமடித்தவர்?
   **தற்போதைய இந்திய அணித்தலைவர் மொஹமட் அஸாருதீன்.**
6. இலங்கையில் தற்போது அதி கூடிய டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்?
   **முத்தையா முரளிதரன்.**
7. இலங்கையிலே முதல் டெஸ்டிலே இருநூறுக்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்றுள்ளவர்?
   **பிரண்டன் குறுப்பு( 201 ஆட்டமிழக்காது)**
8. இலங்கையிலே அதிக பட்ச டெஸ்ட் விக்கட்டுக்களை வீழ்த்தியவர்?
   **ருமேஷ் ரட்நாயக்க, 23 டெஸ்ட்டுகளில் 73 விக்கெட்டுகள் –சராசரி 35-10.**
9. இலங்கை அணியின் முதல் டெஸ்ட் போட்டி. எப்போது நடைபெற்றது?
   **இங்கிலாந்திற்கு எதிராக 1981-82 கொழும்பில்.**
10. இதுவரை இலங்கை அணி எத்தனை டெஸ்ட் போட்டியில் வெற்றி கண்டுள்ளது?
   **நான்கு வெற்றிகளை பெற்றுள்ளது.**

தொகுப்பு: என்டனி டெக்ஸ்டர் பர்னாந்து
புனித ஆசிர்வாதப்பர் கல்லூரி
கொழும்பு-13.

# உருவாகி வரும் புதிய கவாஸ்கர் இந்திய அணியில் இடம் பிடிப்பது உறுதி!



அவர் விளாசியிருந்தார்.

விஜய் மெர்சன்ட், ருசி மோடி, விஜய் மஞ்ச்ரேக்கர், பாபு நட்கர்னி, நாரி கண்டிராக்டர், அஜித் வடேகர், கவாஸ்கர், வெங்கட் சர்கார், சந்திப் பட்டேல், ரவி சாஸ்திரி, டெண்டுல்கர், கம்பிளி, அங்கோலா, சஞ்சய் மஞ்ரேக்கர், பிரவீன் ஆம்ரே போன்ற வீரர்கள் உருவாகிய பம்பாயில் இருந்து இன்னொரு 'சுப்பர் பட்ஸ்மன்' உருவாகி இருக்கிறார். அவரது பெயர் இமோல் முஸூம்தார்.

பம்பாயில் உள்ள பிதிபாய் கல்லூரியில் 2ம் ஆண்டு வர்த்தகம் படித்து வரும் முஸூம்தார் கிரிக்கெட் உலகில் கடந்த 73 ஆண்டுகளாக உடைக்க முடியாத சாதனையாக இருந்த ஒரு சாதனையை முறியடித்து இருக்கிறார். இதனால் கிரிக்கெட் இரசிகர்களின் பார்வை இவர்மீது திரும்பி இருக்கிறது.

உலகில் இதுவரை நடந்துள்ள முதல்தர கிரிக்கெட் போட்டிகளில் அதிக ரன் அடித்து இருந்தவர் என்ற சாதனையை மார்ஸ் ஏற்படுத்தி வைத்திருந்தார். 1920-21ம் ஆண்டு இவர் 240 ரன் அடித்ததுதான் தனி நபரின் அதிக ரன் என்று இருந்தது.

அந்த சாதனையை முஸூம்தார் சமீபத்தில் பரீதாபாத்தில் ஹரியானாவுக்கு எதிராக நடந்த ரஞ்சி கோப்பை போட்டியின் போது மிக எளிதாக முறியடித்து விட்டார். அவர் 260 ரன்கள் அடித்து உலகின் 'சுப்பர் பட்ஸ்மன்' என்ற பட்டத்தைப் பெற்றிருக்கிறார்.


இந்த உலக சாதனையை ஏற்படுத்த அவருக்கு 639 நிமிடங்களும், 516 பந்துகளும் தேவைப்பட்டன. இதில் 31 பவுண்டரிகளை அவர் விளாசியிருந்தார்.

முஸூம்தாருக்கு உள்நாட்டுக்குள் பல போட்டிகளில் விளையாடிய அனுபவம் இருக்கிறது. அத்துடன் தென்னாபிரிக்காவில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய இளைஞர் அணியிலும் இவர் இடம் பெற்றிருந்தார்.

எனவே இந்த சுப்பர் பட்ஸ்மன் இந்திய அணியில் இடம்பிடிக்கப் போகும் காலம் வெகு தொலைவில் இல்லை.

# ஒரு சிறந்த கப்டன்!

ஸ்போர்ட்ஸ்



சார்ஜா கிண்ணத்தை கைக்கெட்டும் தூரத்தில் இருந்து கைவிட்டபோதும் இந்திய அணி நம்பிக்கையை இழக்கவில்லை.

இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் முகமட் அசாருதீன் தவறுகளை சீர்செய்து அணியை உற்சாகப்படுத்த முனைகிறார்.

தான் கப்டனாக இருந்து ஆடிய 27 டெஸ்ட்டுக்களில் 9 வெற்றிகளை பெற்று இந்திய சாதனை படைத்த கப்டன் என்ற பெருமை பெற்றவர் அசாருதீன்.

சார்ஜா தோல்வி அசாருதீனின் புகழ்மிக்க வளர்ச்சியில் ஒரு சறுக்கல்.

இந்திய அணியைப் பொறுத்தவரை ஒரு சிறந்த துடுப்பாட்டக்காரர், பந்து தடுப்பாளர் என்ற பெருமை பெற்றவர் அசாருதீன்.

கிரிக்கெட் ஒரு பொழுதுபோக்கல்ல. அது தனது உன்னத தொழில் என்று நினைக்கும் அசார் இப்போது கற்றல், ஆற்றல், மீண்டும் கற்றல் என்றும் குறிக்கோளுடன்தான் இருக்கிறார்.

1990ல் கப்டன் பொறுப்பை ஏற்ற அசார் தனது சாகாக்களிடம் மதிப்பு பெற்றிருக்கிறார். அதனால் இந்திய அணிக்கு அவரை விட்டால் உடனடியாக வேறு கப்டன் கிடைப்பது கஷ்டம்.

சொந்த மண்ணில்தான் இந்திய கிரிக்கெட் அணி அதிக வெற்றி குவிப்பதாக ஒரு கருத்து நிலவுகிறது. அதனை பொய்யாக்குவது அசாருதீனின் பொறுப்பாகவும் இருக்கிறது.

# ஆடி ஓயும் அலன் போடர்!

உலகிலேயே அதிக ரன்களைக் குவித்துள்ள அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் அலன் போடர் விரைவில் ஓய்வு பெறுகிறார்.

அவுஸ்திரேலிய அணியின் கப்டனாக இருக்கும் 38 வயதான அலன் போடர், இந்திய வீரர் கவாஸ்கரின் சாதனையை முறியடித்து உலகிலேயே அதிக ரன்களை எடுத்துள்ள வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். உலகின் மற்ற வீரர்கள் சாதனையை முறியடிக்க இன்னும் பல ஆண்டுகளாகும்.

வயதாகிவிட்ட காரணத்தால் ஓய்வு பெற எண்ணியுள்ள அலன் போடர், சமீப காலமாக ஒருநாள் போட்டிகளில் விளையாடாமல் ஒதுங்கி வந்தார். கடைசியாக நடைபெற்ற தென் ஆபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டிகளிலும் அண்மையில் சார்ஜாவில் நடைபெற்ற ஒருநாள் போட்டிகளிலும் விளையாடாமல் கப்டனாக மட்டும் இருந்தார்.

அலன் போடர் ஓய்வு பெற எண்ணியுள்ளதால் புதிய கப்டன் தேர்வு செய்ய அவுஸ்திரேலிய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை திட்டமிட்டுள்ளது. பெரும்பாலும் அவுஸ்திரேலியாவின் தற்போதைய துணைக் கப்டன் மார்க் டெய்லர், விக்கட் கீப்பர் ஹீலி, சகலதுறை ஆட்டக்காரர் ஸ்ரீவ் வோவ் ஆகியோரில் ஒருவர் கப்டனாகத் தெரிவு செய்யப்படுவார்.

# தேன் கிண்ணம்

## இறுதிப் பகலாவது.....

எதிர்காலம் என்பதுவே
பயங்கரமானதாய்..
எண்ணுதலும்
வாழ்தலுமே
அச்சமென்றாகிய
ஒரு
சூழலின்
அவதிப்பாடு.

□□

இதயம் சாவதா
வாழ்வதா
என்றொரு கூப்பாடு.
கரிசனை காட்ட
உலகம் தயாராகாத
இறுக்கம்
இன்னும் இன்னும்.

□□

நெருப்புத் தூவப்பட்டதான
தேசத்தைத் தானே
தினம் தினம்
காலையாய்ப்
புலரவைப்பது.

□□

கண்ணீரை அள்ளிக் கட்டிக்
கொண்டு எத்தனை
நாட்களுக்குத்தான்
மானிடம்
சீவிப்பதும்
அவதிப்படுவதும்....?

□□

வெள்ளையாய்
ஒரு பகல்
வினையமான ஒரு
பகல்
ஆயுதங்களின்
ஆர்ப்பரிப்பில்லாத
ஒரு பகல்
அது இறுதிப் பகலாக
இருந்தாலும்
வர வேண்டும்
வர வேண்டும்!-

● அக்குறணை இளைய அப்துல்லாஹ்.



## பரிணாமத்தின் சகுனிகள்

ஓங்கியே ஒலித்த ஆராய்ச்சி மணியை
அடித்ததென்னவோ ஐந்தறிவு அன்பன்.
அக்கணமே கிட்டியதே அருமைக் கன்று.

ஆறறிவுப் பேராளர் நாம் அகிலமெல்லாம் தேடியும்
அற்றுப்போனதே ஆராய்ச்சி மண்டபத்தின்
அத்திவாரம்கூட.

துவண்ட குரலுக்கும், குடித்த நெஞ்சங்களுக்கும்
துணை நின்றான் துவாரகை பாலன்
தானாய்த் துகில் தவழ்ந்தே வந்தது.

அத்தனை வித்தைகளும் அன்றோடே
முற்றாகிப்போனதோ? முடிவாகிப் போனதோ?
முழுத்தரிப்பாய்ப் போனதோ?

அரசியல் ஆட்டத்தை பரிணாமத்தின் சகுனிகள்
அன்றாடம் ஆடும்வரை அம்மக்கள் பகடைகள்.
பாவம் மண்ணோ பலியாடுதானே.

இத்தனைக்கும் இலக்காகிப் போவதும்
இழிவாகிப் போவதும் நம் அத்தனைபேரின்-ஒரே
அன்னை "இலங்காதேவி'யன்றோ?

● ஜெ.மதுபாஷினி-வவுனியா.

## வாழ்வைத் தேடி....!

தூரத்தில் எனக்காக
துக்கம் அனுட்டிக்கும்
என்னினிய பெற்றோர்களே!

பெற்ற நிஜத்தை
நீங்களும்
பிறந்த பாவத்தை
நானும்
இக்கணம் மறப்போம்!

இது
இளமையின் இலையுதிர்காலம்.

எனக்கென்று ஏவப்பட்ட
ஒரு துப்பாக்கிக் குண்டு
பிடரிக்குப் பின்னால்
பின் தொடர்ந்து வருகிறது.
அது
இறப்பின் சேதியை
எப்போதோ ஏந்தி வரலாம்-

அப்போது
அம்மா
தாலாட்டுப் பாடியவளே,
எனக்காக
ஒப்பாரி பாடாதே!

● யாத்திரீகன்.

## கவித்துளி-சிலதுளி..!

இதயத் தோட்டத்தில்
விழி
தூவிய விதை-
'காதல்'

□□

உயிருடன்
சிதை வைக்கும்
மறைமுக காதலி-
'சந்தேகம்'

□□

பூமகளின்
இதயக் குமுறல்-
'எரிமலை'

□□

முகவரியை
தவறவிட்டு
தடுமாறுகிறது-
'சமாதானம்'

□□

பணமிருந்தால்
கூடிவரும்
அது மறைந்தால்
ஓடி விடும்-
'சொந்தம்'

□□

வாழ்வின்
இறுதியை
நினைவுபடுத்தும்-
'விட்டில்'

● ஜொஹாரா ஹுஸைன்
தியத்தலாவ.

## உயிர்ப்புப் புன்னகை

பெண்ணே!
உன் புன்னகை என்ற
பூ மழையில் நனைவதில்தானே
சுகம் எனக்கு!

சின்ன இதழ் குவித்து
நீ 'சிரிப்பூ'க்களை
உதிர்க்கையில் என்
உதயம் சிலிர்த்துக் கொள்கின்றது.

உன் புன்னகை
தரிசனம் காணவே
என் விழிகள் விடிகாலையில்
விழித்துக்கொள்கின்றன!

என் காதல் பார்வைகள்
எட்டாத தொலைவில்
உன் சஞ்சாரம் இருப்பினும்
முக தரிசனத்தை மட்டும்
எனக்கு தவிர்த்துவிடாதே!

எனக்குள் உயிர்ப்பறவைகள்
சிறகடிப்பது உன்னைக்
காண்கையில் மட்டுமே!

● காத்தான்குடி சுபைர்கான்.



## கண்டுகொள்

'ரயர்'ப் புகையினுள்ளே
மனித இறைச்சிக்காக
கடிபுடிப்பட்ட நாய்களையெல்லாம்
படலை தாண்டி வந்து
பராக்குப் பார்த்தவன் நான்!
அவ்வளவு தைரியம் எனக்கு.

ஆனாலும்
பெண்ணே!
அது ஏனோ தெரியாது....
உன்னைக் கண்டால் போதும்
ஊரடங்கு சட்ட காலத்து
கடைசி பஸ்ஸாக நீயும்
இருபது வயது
இளம் பிரயாணியாக நானும்
மாறி விடுகின்றோம்.

எனது நண்பன் ஒருவன்
சொன்னான்-நான் உன்னை
காதலிக்கிறேனாம்!

இப்போதெல்லாம்
உன்னிடம் சொல்வதற்கு
என்னிடம் ஆயிரம் உள்ளது
ஆனால் தைரியம்தான்..

ஒவ்வொரு நாளும்-நான்
ஒத்திகை பார்த்துக்கொண்டாலும்
நான் சொல்ல நினைப்பது

நழுவிப் போய்க் கொண்டிருக்கிறது-
நமது தேசத்துச் சமாதானம் போல..

நீயும் ஒரு இரக்கமற்றவள்-
கிளாளிக் கடலைப் போல

பெண்ணே!
நீ என்னைக் கண்டு கொள்ளாவிட்டால்
நானும் என் எதிர்கால
இரவு பகல்களை
கண்டுகொள்ளப் போவதில்லை.

● த.தயாபரன்.

# இந்த வாரம் உங்கள் பலன்

(08.05.94 முதல் 14.05.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

## நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மேடம் | - சூரியன், கேது, புதன் |
| இடபம் | - வெள்ளி |
| துலாம் | - வியாழன், இராகு |
| கும்பம் | - சனி |
| மீனம் | - செவ்வாய் |

சந்திரன்—மீனம், மேடம், இடபம் இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

14.05.94 இல் மேடச் செவ்வாய்

### மீனம்:

(புரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, மனக் கவலை நீங்கும். | காலை 7 மணி |
| திங்கள்- | மனக் கவலை நீங்கும், காரிய சித்தி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| புதன்- | புதிய முயற்சி, முன்னேற்றம். | பி.ப 1 மணி |
| வியாழன்- | காரியானுகூலம், பணத்தட்டுப்பாடு. | காலை 8 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, கௌரவம். | பி.ப 2 மணி |
| சனி- | தெய்வானுகூலம், மனமகிழ்ச்சி. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்- 4

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | மனமகிழ்ச்சி, செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | காரியானுகூலம், பணவரவு. | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், குடும்ப சுகம். | காலை 7 மணி |
| புதன்- | அந்நியரால் தொல்லை, மனக் கவலை. | பகல் 12 மணி |
| வியாழன்- | வீண் மனஸ்தாபம், செலவு மிகுதி. | காலை 9 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, முன்னேற்றம். | பகல் 11 மணி |
| சனி- | வெளியிடப் பயணம், மனச் சந்தோஷம்.. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 1

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | கௌரவம், முயற்சி மேன்மை. | பி.ப 2 மணி |
| திங்கள்- | உறவினர் உதவி, செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வீண் தொல்லை, செய்தொழில் நட்டம். | பி.ப 1 மணி |
| புதன்- | தனலாபம், பெரியோர் உதவி. | காலை 8 மணி |
| வியாழன்- | அந்நியர் நட்பு, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | மனக் கவலை, தேகசுகம் பாதிப்பு. | காலை 7 மணி |
| சனி- | எடுத்த கருமம் வெற்றி, உயர்ச்சி. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 3

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | புதிய முயற்சி, நன்மையுண்டு. | காலை 7 மணி |
| திங்கள்- | காரிய சித்தி, பணவரவு. | பகல் 1 மணி |
| செவ்வாய்- | வீண் கவலை நீங்கும், உயர்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, கௌரவம். | பகல் 12 மணி |
| வியாழன்- | தெளிவுள்ள மனநிலை, மன மகிழ்ச்சி. | காலை 9 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பி.ப 3 மணி |
| சனி- | உறவினர் தொல்லை, மனக் கவலை. | காலை 10 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், புரட்டாதி)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தேகசுகம் பாதிப்பு, கௌரவம். | காலை 9 மணி |
| திங்கள்- | முயற்சி பலிதம், முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | மனமகிழ்ச்சி, பணவரவு. | காலை 8 மணி |
| புதன்- | துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப 3 மணி |
| வியாழன்- | அந்நியர் உதவி, மனப் பயம் நீங்கும். | காலை 7 மணி |
| வெள்ளி- | செய்தொழில் நஷ்டம், செலவு மிகுதி. | பி.ப 2 மணி |
| சனி- | கௌரவம், உறவினரால் தொல்லை. | பி.ப 1 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | வீண் துயர் அகலும், மன மகிழ்ச்சி. | காலை 8 மணி |
| திங்கள- | வெளியார் உதவி, காரிய சித்தி. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, முன்னேற்றம். | காலை 9 மணி |
| புதன்- | பணவரவு, தெய்வானுகூலம். | பகல் 12 மணி |
| வியாழன்- | மனக் கலக்கம், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| வெள்ளி- | முயற்சி மேன்மை, கௌரவம். | காலை 6 மணி |
| சனி- | அந்நியர் நட்பு, துயர் நீங்கும். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டது முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | முயற்சி மேன்மை, செலவு மிகுதி. | காலை 8 மணி |
| திங்கள்- | புதிய முயற்சி, காரியானுகூலம். | பி.ப 1 மணி |
| செவ்வாய்- | பணவரவு, மனமகிழ்ச்சி. | காலை 8 மணி |
| புதன்- | பெரியோர் உதவி, பணக்கஷ்டம். | காலை 9 மணி |
| வியாழன்- | மனப்போராட்டம், வீண் கவலை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | திடீர் பயணம், அலைச்சல். | காலை 9 மணி |
| சனி- | கவலை நீங்கும், உயர்ந்த எண்ணம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம் -7

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தேகசுகம் பாதிப்பு, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- | பணவரவுத் தடை, மனக் கவலை. | பி.ப 2 மணி |
| செவ்வாய்- | உறவினரால் கஷ்டம், தொழில் நிலைகேடு. | பகல் 12 மணி |
| புதன்- | காரியத் தடை, செலவுக் கஷ்டம். | காலை 9 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, முன்னேற்றம். | காலை 8 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பயணம், பணக் கஷ்டம். | பி.ப 1 மணி |
| சனி- | துயர் அதிகம், பணத்தட்டுப்பாடு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 9

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பயனுள்ள செயல், முன்னேற்றம். | காலை 6 மணி |
| திங்கள்- | செய்தொழில் கஷ்டம், மனப் பயம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- | வீண் மனக்கவலை, உறவினரால் தொல்லை. | காலை 8 மணி |
| புதன்- | தனலாபம், காரியசித்தி. | காலை 10 மணி |
| வியாழன்- | அதிகார விருத்தி, நண்பர்கள் உதவி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | வெளியாரால் தொல்லை, தொழில் கேடு. | காலை 7 மணி |
| சனி- | உறவினர் உதவி, பணவரவு. | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -5

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| திங்கள்- | செய்தொழில் முன்னேற்றம், முயற்சி மேன்மை. | காலை 7 மணி |
| செவ்வாய்- | பெரியோர் உதவி, துயர் நீங்கும். | பகல் 12 மணி |
| புதன்- | பணவரவு, கௌரவம். | காலை 9 மணி |
| வியாழன்- | புதிய தொழில் முயற்சி, வெளியார் உதவி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- | காரியானுகூலம், உறவினர் பகை. | பகல் 12 மணி |
| சனி- | வீண் கவலை நீங்கும், முன்னேற்றம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-8

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | செய்தொழில் நட்டம், மனக் கவலை. | காலை 7 மணி |
| திங்கள்- | சுபகாரிய மகிழ்ச்சி, முன்னேற்றம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | உறவினர் தொல்லை, மனக் கலக்கம். | காலை 8 மணி |
| புதன்- | வெளியிட பயணம், தொழில் சித்தி. | பி.ப 1 மணி |
| வியாழன்- | காரியசித்தி, முன்னேற்றம். | காலை 6 மணி |
| வெள்ளி- | பெரியோர் சகவாசம், அரச சன்மானம். | பகல் 12 மணி |
| சனி- | காரியத் தடை, மனக்கவலை. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | சுப நேரம் |
|---|---|---|
| ஞாயிறு- | தனலாபம், செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| திங்கள்- | பணவரவு, செலவுக் கஷ்டம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | காரியத் தடை, அரச விரோதம். | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் சகவாசம், கௌரவம். | காலை 9 மணி |
| வியாழன்- | வீண் துயர், கலக்கம், தொழில் நஷ்டம். | பி.ப 1 மணி |
| வெள்ளி- | உறவினர் தொல்லை, காரியத்தடை. | காலை 8 மணி |
| சனி- | செலவு மிகுதி, பணக்கஷ்டம். | பி.ப 2 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்- 4


www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்





# கருவறைக்குள் ஒரு படப்பிடிப்பு!

## கருவில் உள்ளபோதே நோய் கண்டறியும் முறைகள்!!



கருவறையில் வளரும் குழந்தைகளுக்கு ஏதாவது நோய்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டறிய இப்பொழுது நவீன-இலத்திரன் கருவிகள் நடைமுறையில் வந்துவிட்டன. தாயின் வயிற்றில் உருவாகி வரும் இக்குழந்தைகளைப் பரிசோதிக்க மின்னலை உருவாக்கல் பதிவுக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.

தாயின் வயிற்றின்மேல் இலத்திரன் கருவியை வைத்ததும் ஒலி அலைகள் அதிலிருந்து குழந்தையை அடைந்து மீண்டும் ஒலியாகவே எதிரொலிக்கப்பட்டு கருவியின் மூலம் ஒரு திரையில் ஒளிக்கீற்றுகளாக விழுவதுடன், தனியாக ஒளித்தாளில் பிரதி பண்ணப்படுகிறது.

நிபுணர்கள் இந்தப் படங்களை ஆராய்ந்து குழந்தைகளுக்கு ஏற்பட்டுள்ள நோய்ப் பாதிப்புகளை துல்லியமாகக் கண்டு பிடித்து விடுகின்றனர். பிறக்கும் குழந்தை தீராத நோயாளியாகவோ அல்லது குறைபாடுள்ளதாகவே இருக்கும் என்று முன்னதாகவே கண்டு கொண்டால் கருச்சிதைவினை ஏற்டுத்திக் கொள்ளவும் வாய்ப்புக் கிடைக்கிறது.

இத்தகைய 'அல்ட்ரா சவுண்ட்' மற்றும் 'சோனோகிறாம்' பரிசோதனைகளுக்கான செலவு மிகவும் அதிகமாகும். இருப்பினும் அமெரிக்காவிலும் மேற்கத்தயநாடுகளிலும் இம்முறையிலான பரிசோதனைகள் அதிவேகமாகப் பரவி வருகின்றன. சோனாகிராம் பரிசோதனைக்கு ஒருதடவை 200 அமெரிக்க டொலர் செலவிட வேண்டியிருக்கும்.

இத்தகைய பரிசோதனைகளை தற்காலத்தைய பெற்றார் விரும்புவதற்கான காரணம், கருவிலிருக்கும் குழந்தையின் உடல் நலத்தைப் பேணுவதற்காகத்தான் என்று சொல்லுவதற்கில்லை என்று நிபுணர்கள் கூறுகின்றனர். பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா என்று முன்கூட்டியே அறிந்து கொள்வதில்தான் அவர்கள் அதிக நாட்டம் செலுத்துகிறார்கள். இத்தகைய பரிசோதனைக்காக எடுக்கப்படும்-கருவாக வளரும் குழந்தையின் படத்தைப் பெற்று அதனை தங்கள் குடும்ப புகைப்பட 'ஆல்பத்'தில் ஏனைய படங்களுடன் தொகுத்து வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள் இவர்கள்.

**கருவாக வளரும் குழந்தையின் படத்தைப் பெற்று தமது குடும்ப புகைப்பட 'ஆல்பத்'தில் தொகுத்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர்.**

மிஸ்யூறி பல்கலைக்கழக மருத்துவப் பிரிவைச் சேர்ந்த டாக்டர் பேர்னாட் எவிக்மன் ஆறு வருடங்களுக்கு மேல் இலத்திரன் கருவிகள் மூலம் கருப் பரிசோதனைகள் நடைபெறுவதையொட்டிய ஆராய்ச்சிகளை நடத்தி வந்துள்ளார்.

இக்குறிப்பிட்ட கால எல்லைக்குள் மொத்தம் 15,000 சுகதேகிகளான கர்ப்பிணித் தாய்மார்களை வைத்து ஆராய்ச்சியினை நடத்தியுள்ளார். இவர்களில் 15 முதல் 22 வார கர்ப்பிணிகளை ஒரு பிரிவாகவும் 31 முதல் 35 வார வரை கர்ப்பிணிகளான தாய்மார்களை மற்றொரு பிரிவாகவும் வைத்து ஆய்வுகளை டாக்டர் பேர்னாட் மேற்கொண்டார்.

பல உபயோகமான தகவல்களை இந்த அய்வின்மூலம் பெற முடிந்ததாக 'நியூ இங்லண்ட் ஜேர்னல் ஒஃப் மெடிசின்' என்ற பருவகால வெளியீடு கூறுகிறது.

கருவிலுள்ள குழந்தையின் குறைபாடுகளைக் கண்டறிய கருவில் 24 வாரங்களாவது குழந்தை உருப்பெற்றிருக்க வேண்டும் என்ற உண்மை அறியப்பட்டுள்ளது. அதற்கு முன்னர் குழந்தையின் உடல் நிலையில் உள்ள கோளாறுகளைக் கண்டறிவது கடினம் என்று கருதப்படுகிறது. இதே காலகட்டத்தில் குழந்தையில் கோளாறுகள் கண்டு பிடிக்கப்பட்டாலும் கருச்சிதைவு செய்வது அபாயகரமானதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாமல் இவ்வளவு பணத்தைச் செலவு செய்து இப்புதிய கருவிகளை வைத்து பரிசோதனை செய்வது வீண்வேலை என்றும் அந்த சஞ்சிகை கூறுகிறது. கருவிலுள்ள குழந்தையின் ஆரோக்கிய நிலையினை இரத்தப் பரிசோதனையின் மூலம் சுலபமாக அறிந்து கொள்ளலாம் என[redacted] தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உங்கள் குழந்தைக்கு பழச்சாறு கொடுக்கலாமா?

## பெற்றோர் கவனிக்கவும்



வேறு எந்த உணவையும் விரும்பி உண்ண விரும்பாத குழந்தைகள் பழச்சாறினை சுவைத்து பருகுவார்கள். குழந்தைகள் விரும்புகிறார்களே என்பதற்காக தாய்மார் பழச்சாறையே கொடுத்து குழந்தையின் பசியைப்போக்கடித்து விட நினைப்பது தவறாகும்.

பழச்சாறை அளவுடன் கொடுப்பதில் தவறில்லை. கூடுதலாகக் கொடுத்து பசியை அடக்கலாகாது. இதனால் குழந்தைகளுக்கு வேண்டிய ஊட்டச்சத்துக் கிடைக்க முடியாமல் வளர்ச்சி பாதிக்கப்படும்.

இப்பொழுது ஆப்பிள் பழச்சாறு கவர்ச்சியான புட்டிகளில் அடைக்கப்பட்டு ஓரளவு மலிவான விலையில் சந்தையில் கிடைக்கிறது. அவுஸ்திரேலியா நியூஸிலாந்து போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் ஆப்பிள் பழச்சாறு தரமானவை என்பதில் சந்தேகமில்லை. கொழுப்பற்றதும் விட்டமின் சி நிரம்பக் கொண்டதுமான இப்பழச்சாறு சிறுவர்களுக்கு நல்லதுதான். ஆனால் அளவுடன் கொடுக்கப்படாவிட்டால் பாதிப்புத்தான் ஏற்படும்.

இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தாய்ப்பாலைத் தவிர வேறு எந்த உணவையும் உவப்பானவை என்று கூற முடியாது. இவர்களுக்கு பழரசம் கொடுப்பதால் அவர்களுடைய சின்னஞ் சிறிய வயிறு பழரசத்தால் நிரம்பி விடும். பசி ஏற்படாது. அவர்களுடைய வளர்ச்சிக்கு அவசியம் தேவைப்படும் அளவு கலோரிகளைக் கொண்ட உணவு உட்கொள்ள முடியாத நிலை எற்பட்டு விடுகிறது.

வளரும் குழந்தைகளுக்கு பாலுணவு மிகமிக அவசியம். பாலுணவில் கிடைக்கும் புரதம் மற்றும் கொழுப்புச் சத்து பழரசத்தில் கிடைப்பதில்லை. வளர்ச்சியைத் தூண்டும் கனிமம் மற்றும் போஷாக்கான அம்சங்களும் மிகவும் குறைவு.

பல ஆய்வுகளை நடத்திய ஆராய்ச்சியாளர்கள், குழந்தை ஐந்து வயதினை அடையும்வரை பழச்சாறுகளைக் கொடுப்பதைக் குறைக்கும்படி அறிவுரை கூறுகின்றார்கள்.

# பிறந்தநாளை மறந்து விடுங்கள் இளமையாக வாழ புதிய யோசனை!

தேகாரோக்கியத்துடனும் திடகாத்திரமாகவும் வாழ விரும்புகின்றவர்கள் தங்கள் பிறந்தநாளை மறந்துவிட வேண்டும். தங்கள் பிறந்த திகதிகளை நினைவில் வைத்துக் கொண்டு வயதைக் கணக்குப் பார்ப்பவர்கள் விரைவில் முதிர்ச்சியடைவதுடன் தமது ஆயுளையும் குறைத்துக் கொள்ளுகின்றனர். இவ்வாறு ஆஸ்திரிய நாட்டு விஞ்ஞானியான டாக்டர் ஹியன்றிச் மிற்றல் மௌவர் கூறுகிறார்.

டாக்டர் ஹியன்றிச்,வியன்னா பல்கலைக்கழகத்தில் உளவளவியல் பேராசிரியராவார். வயோதிபர், இளைஞர் ஆகிய பலதரப்பட்ட வயதினர் 432 பேரை வைத்து இவர் நடத்திய ஆய்வின் பெறுபேறுகளை வைத்தே இக்கருத்தை வெளியிட்டுள்ளார்.

"வருடா வருடம் தங்கள் பிறந்தநாளை நினைவில் வைத்துக் கொண்டாடும் ஒருவரை விட, பிறந்தநாள் எது என்பதையே மறந்தவராகவோ அதனைப் பொருட்படுத்தாதவராகவோ இருப்பவர் நல்ல ஆரோக்கியத்துடனும் சிறந்த மனவளமுடையவராகவும் திடகாத்திரமுடனும் வாழ்கிறார். ஒவ்வொரு வருடமும் தனது வயதைக் கணக்கிடுபவர், தான் வயதாளியாகிக்கொண்டு வருவதையிட்டுக் கவலைப்பட ஆரம்பிக்கிறார். விருந்துபசாரம் நடத்தி மகிழ்ச்சியாக இருப்பதாக வெளிக்காட்டிக்கொள்பவர் உண்மையில் உள்மனதில், தான் வயதானவனாகிக் கொண்டு வருவதாக வேதனைப்படுகிறார். இதனால் அவர் ஒருவித மனநோயாளியாக மாறி உள்ளத்தையும் உடலையும் கெடுத்துக் கொள்கிறார்.

"பிறந்தநாளை மறந்தவர் தனக்கு வயதாகிக்கொண்டு வருவதையும் மறந்து என்றும் மனோதிடம் கொண்டவராக வாழ்ந்து வருகிறார். பிறந்தநாளை கருத்தில் கொள்ளாதவர் தனது 40வது வயதில் 32வயது மதிக்கத்தக்கவராக தோன்றுவார். உடலில் தளர்ச்சி தோன்றாது; சருமத்தில் (முகத்திலும் உடலிலும்) சுருக்கங்கள் தென்படாது. மெலிந்து உறுதியான உடலமைப்பும் கொண்டவர்களாகவே இவர்கள் காணப்படுவர்.

"விழாக் கொண்டாடுவோர், 40வது வயதில் முடி நரைத்தும் கண்கள் குழி விழுந்தும் சருமம் சுருங்கியும் காணப்படுகின்றனர்."

இவ்வாறு கருத்துக்கூறும் டாக்டர் ஹியன்றிச், "அடிக்கடி விருந்துகளில் கண்டகண்ட உணவுகளை உண்டு பழகியவர்கள் தங்கள் இளமையினை விரைவில் இழந்து விடுகிறார்கள்" என்றும் எச்சரித்துள்ளார்.

## சிந்திக்கலாம் இங்கே




"உன் எதிரிகளிடம் உன் பலவீனத்தை பறை சாற்றாதே!

"உன் நண்பர்களிடம் உன் பெருமையைக் காட்டி பீற்றிக் கொள்ளாதே."

சொன்னது யார் என்று மறந்துவிட்டது. சொன்ன கருத்து மட்டும் நெஞ்சில் ஆணியடித்து மாட்டியதுபோல நிலைத்து நிற்கிறது.

கால வெள்ளம் சிலரைக் கரை சேர்த்து விடுகிறது.

வேறு சிலரை அங்கே இங்கே இழுத்தடித்து தொல்லைப்படுத்துகிறது.

எதிர்நீச்சல் போடத்தெரிந்தவர்கள் எப்படியோ கரை சேர்ந்து விடுகிறார்கள்.

முடியாது என்று மனம் முறிந்து போகிறவர்கள் வெள்ளத்தில் மூழ்கி முகவரி இல்லாமல் போய்விடுகிறார்கள்.

இன்னும் பலர் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருப்பார்கள். இன்றோ நாளையோ அவர்கள் கரைவந்து சேருவார்கள்.

கரைவந்து சேர்ந்தவர்கள் வெள்ளத்தில் போராடுகிறவர்களைப் பார்த்து கேலி செய்யக்கூடாது.

திடீரென்று புயல் ஒன்று வந்து கரையில் நிற்பவர்களை வெள்ளத்தில் தூக்கி வீசிவிடக்கூடும்.

அதே சமயத்தில் வெள்ளத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்கள் துரும்பு ஒன்று கிடைத்து கரைக்கு வந்துவிடவும் கூடும்.

இருக்கும் இடம் நிரந்தரம் என்று நினைத்துக்கொண்டிருப்பவன் விழுந்து விட்டால் எழுந்து கொள்வது கஷ்டம்.

எப்போது எதுவும் நிகழலாம். எதற்கும் தயாராக இருக்க வேண்டும் என்ற பக்குவம் உள்ளவன் விழுந்தாலும் எழுந்துகொள்ள முடியும்.

கரையில் நின்றபோது வெள்ளத்தில் தடுமாறிய நாலுபேரை கைகொடுத்து நீ கரைக்கு கொண்டுவந்திருந்தால்,

நாளை நீ வெள்ளத்தில் வீழ்ந்தால் அந்த நாலுபேரில் மூன்றுபேர் நன்றி மறந்தாலும்கூட மீதியுள்ள ஒருவர் உனக்கு கைகொடுக்கலாம். நீ கரைக்கு வர உதவலாம்!

சிலர் இருக்கிறார்கள். அவர்கள் நிறைகுடங்கள் அல்ல. காலம் மாறும் என்ற நிலையறியாதவர்கள்.

ஒருகாலத்தில் உயிர் நண்பனாக இருந்தவனைக்கூட தாங்கள் உயரத்திற்கு போனபின் மறந்துவிடுவார்கள்.

அது மட்டுமல்ல, தங்கள் உயரத்திற்கு அவன் வந்துவிடக்கூடாது என்பதிலும் கவனமாக இருப்பார்கள்.

அவன் மடுவில் இருந்தால்தான் தாங்கள் மலையில் இருப்பதை அவனிடம் பெருமையாகச் சொல்லிக்கொள்ளலாம் என்னும் கயமையான சிந்தனை உள்ளத்தில் இருக்கும்.

அவ்வாறானவர்கள் வீழ்ந்து போகும்போது கண்ணீர்விடக்கூட யாரும் இருக்கமாட்டார்கள்.

தான் மட்டும் உயர்ந்தால் போதும் என்று நினைப்பவர்கள் தாங்கள் ஏறி வந்த ஏணிகளையும் நினைப்பதில்லை.

நாளை இறங்கவேண்டி வரும்போது ஏணி இருக்காது. இடறி விழுந்து சிதறிப் போவார்கள். எட்டி உதைக்கப்பட்ட ஏணிகள் அவர்களைப் பார்த்து சிரித்துக்கொள்ளும்.

கீழே இருப்பதைவிட மேலே உயரத்தில் இருப்பது தான் ஆபத்தானது.

தரையில் இருக்கும்போது தவறி விழுந்தால் உடல் வலிக்கலாம். உயிர் போகாது.

உயரே சிகரத்தில் இருந்து விழுந்தால் சமயத்தில் உடலே உருப்படியாக கிடைக்காமல் போகும்.

உயர வந்துவிட்டேன் என்று கீழே நிற்பவர்களை பார்த்து உற்சாகமாக கையசைத்துக் கொண்டிருக்காதே.

கீழே இருப்பவர்களும் உன்னோடு வந்து உயரத்தில் நிற்க கை கொடுத்து தூக்கிவிடு.

அப்போதுதான் தடுமாறி நீ விழ இருக்கும் சமயத்திலும் அவர்கள் தம் தோள் கொடுத்து உன்னைத் தாங்கிக் கொள்வார்கள்.

கஷ்ட, நஷ்டங்களால் காயப்பட்டு வரும் உன் நண்பனிடம் உன் பெருமையை சொல்லிப் புளுகாதே.

உயருவதற்கு நீ பட்ட கஷ்டங்களை எடுத்துச் சொல்லு.

"காயங்கள் சகஜம். கவலைப்படாமல் முன்னே வா. நான் இருக்கிறேன். முடிந்தது செய்வேன்" என்று தைரியம் கொடு.

நட்பு என்பது பெரிய பலம். உன்னையறிந்த, நீ அவர்களையறிந்த நண்பர்கள் கிடைப்பது பாக்கியம்.

நண்பன் கீழே இருக்கிறானே என்று நீ உயரத்தில் இருந்து குதித்துவிட தேவையில்லை.

அங்கிருந்தபடியே கை கொடுத்து உன் அருகில் அழைத்துக்கொள். அது போதும்.

நீ பிறந்துவர இரண்டுபேர் தேவை. இறந்தபின் சுமந்து செல்ல நாலுபேர் தேவை.

அந்த நாலுபேர் உன்னைச் சுமப்பதை சுமையாக நினைப்பவர்களாக இருக்கக்கூடாது.

எப்போதடா இறக்கி வைப்போம் என்று நினைக்காமல், உன் கடைசிப் பயணத்தில் சுத்தமான கண்ணீர் துளியைக் காணிக்கையாக்குபவர்களாக இருக்க வேண்டும்.

காதற்ற ஊசி கடைவழிக்கு வராமல் போகலாம்.

கயமையற்ற நேசங்கள் சிந்தும் கண்ணீர்துளி உன் கடைவழிப் பயணத்தையும் கௌரவப்படுத்தும்.

எனவே-நல்ல நண்பர்களை ஆதரி! சேகரி! வாழ்க்கையில் அதுவும் ஒரு அற்புதமான வெற்றி.

முன்னேறும்போதும் நட்பு தேவை. முறியும்போதும் நட்பு தேவை. முன்னேறிய பின்பும் நட்பு மறவாத உள்ளம் தேவை.

(வரும் வாரமும் சிந்திக்கலாம்)

# கொலை விழும் நேரம்



சூர்யாவை எதிர்பார்த்த டி.ஐ.ஜி. டென்சில் பிரியா பசுபதி உள்ளே வர அதிர்ந்து பின் சினந்தார். குரலில் சினம் நிறைந்து தெரிய,

"யார் உன்னை உள்ளே விட்டது? நாகரீகம் தெரியுமா மிஸ் பிரியா? அனுமதி இல்லாமல், அப்பொயின்மென்ட் இல்லாமல் எப்படி வரலாம் நீ?"

பதில் சொல்லாமல் பளிச்சென்று சிரித்தாள்.

எரித்துவிடுவது போல அவளையே பார்த்துக்கொண்டிருந்த டி.ஐ.ஜி. டென்சிலுக்கு உச்சி முதல் உள்ளங்கால்வரை கோபம் குடியேறிக்கொள்ள,

மறுபடி கதவு தட்டப்பட, கோபம் மாறாமல்,

"யெஸ் கம் இன்."

என்று உரத்துச் சீற, கதவு திறந்து–

உள்ளே வந்து சல்யூட் வழங்கி, டி.ஐ.ஜி.யையும், அவர் மேசையின் எதிரே இருந்தே பிரியாவையும் மாறிமாறிப் பார்த்து–

விஷமப் புன்னகை உதட்டில் நிரப்பி, அந்த நிமிடமே டி.ஐ.ஜி. டென்சிலின் கோபம், சூரியனைக் கண்ட பனி மூட்டம் போல் விலக காரணமானவர்–

குலாம்ஷா! கிரைம் இன்ஸ்பெக்டர் குலாம்ஷா!

கதிரை விட்டெழுந்து குலாம்ஷாவை நோக்கி வேகமாய் நகர்ந்து, கை நீட்டிப் பற்றி, கை குலுக்கியபின் கரங்கள் விரித்து குலாம்ஷாவை தன்னோடு சேர்த்து அணைத்து, பின் விலக, இருவர் விழிகளிலும் ஈரக் கசிவு பார்த்த பிரியா அவர்களின் நட்பின் இறுக்கம் உணர–

அப்போதுதான் உள்ளே பிரியா இருப்பது நினைவில் உறுத்த–

டி.ஐ.ஜி.டென்சில் அவளை திரும்பிப் பார்க்க, குலாம்ஷா,

"டி.ஐ.ஜி. இது பிரியா. பிரியா பசுபதி. உங்களுக்குத்தான் முன்னரே தெரியுமே. பத்திரிகை நிருபர். புத்தியும் பிளேட் கூர் மாதிரி. சமயத்தில் தாங்க முடியாது."

குலாம்ஷாவை அமருமாறு பிரியாவின் அருகில் இருந்த கதிரையை நோக்கி சைகையால் காட்டி, தன் கதிரைக்கு சென்று அமர்ந்தபடி,

"இப்போதுதான் லைன் கிளியர்."

என்றார் டென்சில் பிரியாவையும் குலாம்ஷாவையும் விழிகளால் துருவியபடி.

விஷமப் புன்னகை மறுபடி உதட்டில் தொற்றிக்கொள்ள,

"எந்த லைன் கிளியர் டி.ஐ.ஜி?"

"சூர்யா என்ற பெயரில் பிரியா வந்தது. என் கோபத்தை கிளறிவிட்டது. கிளறும்வரை வெளியே நின்றுவிட்டு நீ உள்ளே வந்தது."

"ஐயாம் சொறி டென்சில். மீண்டும் சொறி. டி.ஐ.ஜி."

"இந்த மரியாதை எல்லாம் வேண்டாம் இப்போது. நீ கடமையில் இல்லை."

"ஆனால் நீ... சொறி... நீங்கள் கடமையில் இருக்கிறீர்களே டி.ஐ.ஜி?"

முறைத்துப் பார்த்தபடி, அழைப்பு மணி அழுத்த, உதவியாளர் உள்ளே வர, மூன்று தேநீர் கொண்டுவரச் சொல்லிவிட்டு,

"சூர்யாவின் விசிட்டிங் கார்ட் எப்படி பிரியாவிடம்?"

என்று கேட்டவரை இடை மறித்து குலாம்ஷா சொன்னார்,

"அது சூர்யா பிரியாவிடம் கொடுத்தது. சூர்யா மீது உங்கள் சந்தேகப் பார்வை விழுந்திருப்பது தெரியும். சூர்யாவின் டயறி உங்கள் வசம். அதுவும் சித்ரா தூக்குமாட்டி செத்துப் போன இடத்தில் இருந்து கிடைத்ததும் தெரியும்."

குலாம்ஷா சொல்ல, இதெல்லாம் எப்படித் தெரியும் என்பது போல் டென்சில் புருவம் உயர்த்த, அது புரிந்து,

"இதெல்லாம் பிரியா கண்டுபிடித்த விசயங்கள். இவள் சாதாரண நிருபரல்ல. யமகாதக ரிப்போர்ட்டர். துப்பறியும் பத்திரிகையாளர்."

சொல்லிவிட்டு பிரியாவைப் பார்த்து சிரித்தார்.

"என்ன கேலியா? பொலிசை விட நான் பரவாயில்லை. டி.ஐ.ஜி.சேர்! இந்த விசாரணையில் உங்களைவிட அதிக தூரம் எங்கள் பத்திரிகை நுளைந்துவிட்டது."

அவளை ஆச்சரியமாய் பார்த்தபடி டி.ஐ.ஜி.டென்சில் குலாம்ஷாவிடம் கேட்டார்,

"நான் ஏன் பிரியா மீதும் சந்தேகப்படக் கூடாது?"

குலாம்ஷா பதில் சொல்ல முயல, முந்திக்கொண்ட பிரியா,

"படலாமே! தாராளமாகப் படலாம். ஏன்? உடனே கைது செய்து உள்ளேகூடப் போடலாம்."

இரு கரங்களையும் தூக்கி முகம் எதிரே காட்டிச் சிரித்தாள்.

யோசனையாய் அவள் முகம் கூர்ந்து நோக்க, தொலைபேசி அழைத்தது.

மறுமுனையில் ஹரிகரனின் மனைவி பேசினாள்.

"என் மகள் நிர்மலா நேற்றிரவு தாக்கப்பட்டிருக்கிறாள் டி.ஐ.ஜி?"

"எத்தனை மணிக்கு?"

"11.35."

"ஓ...! ஏன் இரவே தகவல் தெரிவிக்காமல் இத்தனை நேரம் தாமதித்தீர்கள்?"

"தொடர்பு கொண்டேன் டி.ஐ.ஜி. ரிங் சத்தம்தான் கேட்டது. யாரும் ஃபோன் எடுக்கவில்லை. சோ...நீங்கள் அலுவலகத்தில் இல்லை. வீட்டுக்கு எடுத்து ஏன் தொல்லை தர வேண்டும் என்றுதான்..."

" எத்தனை மணிக்கு போன் செய்தீர்கள்?"

"சரியாக 11.55க்கு."

"இப்போது உங்கள் மகள் மிஸ்...மிஸ்..."

"நிர்மலா!"

"நிர்மலா எங்கே?"

"தடியால் தலையில் அடித்திருக்கிறார்கள். மின்சாரம் போனதால் அடித்தது யார் என்று அடையாளம் தெரியவில்லை. நிர்மலா கூச்சல் போட்டதால் ஒரே அடியோடு ஓடிவிட்டான். தலையில் சின்னதாய் ஒரு காயம் மட்டும்."

"ரைட், நான் நேரில் வருகிறேன்."

ரிசீவர் வைத்துவிட்டு அழைப்பு மணி அழுத்தினார்.

உதவியாளர் உள்ளே வர, ஹரிகரனின் வீட்டு ஏரியா பெயர் சொல்லி, நேற்றிரவு அந்தப் பகுதியில் மின்சாரம் தடங்கலானதா? தடங்கலானதாயின் சரியாக எத்தனை மணிக்கு என்ற விபரம் அறிந்து சொல்லுமாறு கூறிவிட்டு, உதவியாளர் வெளியே செல்ல,

குலாம்ஷாவைப் பார்த்து,

"வரவர சிக்கல் அதிகரித்துக்கொண்டே போகிறது ஷா. ஹரிகரனின் மனைவி ஏன் பொய் சொல்ல வேண்டும்?"

"என்ன பொய்?"

"இரவு 11மணியில் இருந்து 12.30வரை நான் இங்கேதான் இருந்தேன். ஆனால் 11.55க்கு எனக்கு போன் செய்ததாக திருமதி ஹரிகரன் கலப்படமில்லாத பொய் சொல்கிறார்."

"ஐ.ஸீ!"

குலாம்ஷா யோசனையோடு ஆட்காட்டி விரலால் மீசையை வருடி விட்டுக்கொள்ள, பிரியா குறுக்கிட்டு,

"நான் அதற்கொரு காரணம் சொல்லாமே டி.ஜி.ஜி?"

சொல்லலாம் என்பதாய் தலையசைத்தார் டி.ஐ.ஜி.

காரணம் சொன்னாள் பிரியா. சொல்லச் சொல்ல விசாரணையில் புதிய கோணம் ஒன்று தெரிந்தது. வியப்போடு பிரியாவைப் பார்த்த டி.ஐ.ஜி. முதல் தடவையாக அவளைப் பார்த்து நட்போடு புன்னகைத்தார்.

■

"என்ன சொல்கிறாய் கேசவா? உன்னைக் கொல்லப் பார்த்தார்களா? என்னை ஏன் தாக்க வேண்டும்? உன்னை ஏன் கொல்ல நினைக்க வேண்டும்?"

என்று படபடப்பாய் கேட்டாள் நிர்மலா.

திருமதி ஹரிகரன் எத்தனை தடுத்தும் கேளாமல், தலையில் போடப்பட்ட பிளாஸ்ரரோடு புறப்பட்டு வந்து, கேசவனின் அறையில், அவன் அருகில் இருந்து படபடத்த நிர்மலாவை முதுகில் தட்டிக்கொடுத்து ஆறுதல் படுத்தினான் கேசவன்.


கேசவனுக்கும் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. மோட்டார் சைக்கிளில் மோதிய காரில் இருந்தது யார் என்று தெரியவில்லை.

முகத்திற்கு கறுப்புக் கண்ணாடி அணிந்து, தலையில் தொப்பி மாட்டியிருந்தது மட்டும் தெரிந்தது.

காரின் குறுக்கே நின்று பிஸ்டல் நீட்டி, இறங்கி வருமாறு சைகை செய்ய, இறங்குவது போல் கதவு திறந்து, மறு நொடியே கதவு மூடி கேசவனை இடிப்பதுபோல் சீறி வந்த கார், கேசவன் அதிர்ந்து விலக, ஓடி மறைந்துவிட்டது.

சுட்டிருக்கலாம். ஒரு நொடியில் உள்ளே வந்த பயம் சீறிவந்த கார் கண்டு விலக

## எழுதுவது ரசிகன்




வைத்துவிட்டது.

தான் பிஸ்டல் நீட்டியதை நிர்மலாவிடம் சொல்லவில்லை. தற்செயலாகத் தப்பிக் கொண்டதாக மட்டும் சொன்னான்.

நிர்மலா கண் கலங்கினாள்.

"என்னால்தானே உனக்கும் கஷ்டம் கேசவ்! என் அப்பாவைக் கொன்றார்கள். என் பெரியப்பாவின் மகளைக் கொன்றார்கள். இப்போது என்னை...என்னையும்..யார் கேசவ்..அது யார்? அவர்களுக்கு என்ன வேண்டும்?"

தலையை இரு கரங்களாலும் தாங்கிக்கொண்டு பெரிதாக மூச்சு விட்டாள்.

"இதென்ன நிம்மி. பைத்தியம் மாதிரி புலம்பிக்கொண்டு. சின்ன பிள்ளை மாதிரி நடுங்கிக்கொண்டு. எங்கே, என் முகத்தைப் பார்!"

நிர்மலா திரும்பி நிமிர்ந்து பார்த்தாள். நெருங்கி அவன் மார்பில் முகம் புதைத்தாள். கேசவன் ஜீன்ஸ் மட்டும் போட்டு, சட்டை போடாமல் இருந்தான். வெற்று மார்பில் நிர்மலா முகம் புதைத்து அசைக்க உள்ளே சிலிர்த்துப் போனான். நிர்மலா அவன் வயிற்றில் இடது கரம் மடித்து மெல்லக் குத்தினாள்.

"பயப்படுகிறாயா கேசவ்?"

என்று கேட்டாள். நிமிர்ந்து அவன் தாடையில் உதடு பதித்து, பின் பிரித்து கண்கள் மூடியபடி கடித்தாள். கேசவ் மயக்கமாய் முகம் கவிழ்ந்து நிர்மலாவின் உச்சந்தலையில் அழுத்தமாய் முத்தமிட 'ஷம்போ' வாசனை கிறங்கடித்தது.

"எனக்கென்ன பயம் நிம்மி?"

என்றான். உச்சந்தலையில் இருந்து உதடு விலக்காமல்.

கேசவனின் அறை இருந்த தொடர்மாடி கட்டிடத்தின் கார் நிறுத்துமிடத்தில் வந்து செருகி நின்று ஓய்ந்தது அந்த இளம் பச்சை நிற நிசான் சன்னி கார்.

கார் கதவு திறந்து அவன் நிதானமாக இறங்கினான்.

'இன்று கேசவன் தப்பவே முடியாது.'

என்று மனதிற்குள் உறுதி செய்து கொண்டான்.

பார்க்கிங் விட்டு வெளியேவர, வாட்ச்மேன் வழக்கமாகத் தயாராக வைத்திருக்கும் புன்னகை வழங்க, கவனியாததுபோல் நடந்து, தொடர்மாடிக் கட்டிடத்தை நிமிர்ந்து பார்த்துக்கொண்டான்.

கறுத்த கண்ணாடியும், தொப்பியும் முதுகுப்பையும் வித்தியாசமாய் தெரிய வாட்ச்மேன் அவன் முதுகுக்குப் பின்னால் சந்தேகமாய் பார்த்தான்.

"சந்தேகப்படும்படியான நபர்கள். பொதிகள் பற்றி உடனே அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு தகவல் தரவும்."

காலையில் வானொலி சொன்ன தகவல் மூளையில் உறுத்த, எதிரே இருந்த பொதுத் தொலைபேசியை நோக்கி செல்லத் தொடங்கினான் வாட்ச்மேன்.

மாடிப்படிகளில் உறுதியான காலடிகள் எடுத்துவைத்து கேசவனின் அறையை நோக்கி அவன் முன்னேறிக்கொண்டிருந்தான்.

பொதுத் தொலைபேசியருகே சென்ற வாட்ச்மேன் வானொலியில் சொல்லப்பட்ட தொலைபேசி இலக்கங்கள் யோசித்தான். நினைவில் வர மறுக்க, அன்றைய தினசரியில் அந்த இலக்கங்கள் இருந்தது நினைவுக்கு வர, தன் அறையை நோக்கி வேகமாய் ஓடினான்.

மூன்றாவது மாடியில் இருந்தது கேசவனின் அறை. இரண்டாவது மாடிவரை ஏறியாயிற்று. இன்னும் ஒரு மாடிதான் பாக்கி.

'வருகிறேன் கேசவா. இதோ வந்து கொண்டிருக்கிறேன்.' மனதிற்குள் சொல்லியபடி படிகள் தாண்டிக் கொண்டிருந்தான்.

கேசவன் நிர்மலாவின் மேல் சட்டையில் மேலே இருந்த பொத்தானை விடுவித்தான். விடுவித்த வேகத்தில் பொத்தான் அறுந்து தரையில் விழ,

"ஏன் அவசரப்படுகிறாய் கேசவ்?" என்றபடி அடுத்த பொத்தானை தானே விடுவித்து ஒத்துழைத்தாள் நிர்மலா; தரையில் விழுந்த பொத்தான் ஒரு தடயமாக மாறப் போவது தெரியாமல்!

வாட்ச்மேன் தினசரி பார்த்து இலக்கம் குறித்துக்கொள்ள தாள் தேடி, தாள் இல்லாமல் போக, தினசரியை தூக்கிக் கொண்டு பொது தொலைபேசி நோக்கி ஓடினான்.

மூன்றாவது மாடியில் இப்போது கேசவனின் அறை முன்பாக அவன் வந்து நின்றான்.

சுற்றிலும் பார்த்துக்கொண்டான். ஆண்கள் மட்டும்தான் மூன்றாம்மாடியில் உள்ள அறைகளில் தங்கியிருக்க வேண்டும். அத்தனை பேரும் அலுவலகங்களுக்கு சென்றுவிட்டதில் வெறிச்சோடி கிடந்தது மூன்றாம் மாடியின் தளம்.

முதுகுப் பையில் கைவிட்டு பிஸ்டல் எடுத்துக்கொண்டான். வலது கரத்தில் தயாராக வைத்துக்கொண்டு கதவு தட்ட இடது கரம் நீட்டியவன் சற்று தயங்கி, குனிந்து கதவின் சாவித் துவாரம் வழியாக உள்ளே பார்த்தான்.

நிர்மலாவின் வெற்று முதுகு மட்டும் தெரிந்தது. கேசவனின் தலை நிர்மலாவின் கழுத்துக்கு கீழே இருந்து எழுந்துகொண்டது. இப்போது நிர்மலா கட்டிலில் மல்லாந்து சாய்ந்துகொள்ள, கேசவன் தெளிவாய் தெரிந்தான்.

அவன் நிமிர்ந்து இடது கரத்தால் கதவு தட்டினான்.

உள்ளே கட்டிலில் இருந்து கேசவன் கீழே குதித்திருக்க வேண்டும். கட்டில் அசைந்த சத்தம் மிக மெல்லியதாய் வெளியே கேட்டது.

அவன் மீண்டும் குனிந்து சாவித் துவாரம் வழியே பார்த்தான்.

நிர்மலா அவசரமாய் சட்டை மாட்டிக் கொள்ள, கேசவன் கதவு நோக்கி வருவது தெரிந்தது.

அவன் தயாரானான். கேசவன் வந்து யாரது என்று துவாரம் வழியாக பார்த்துக் கொள்ள முயல,

நிர்மலா எழுந்து ஓடிவந்து கேசவனை தள்ளிவிட்டு கதவு திறந்தாள்.

மறு நொடியே அவன் உள்ளே புகுந்தான்.

கேசவன் தன்னை திடப்படுத்தி தயாராக சந்தர்ப்பமே இல்லாமல்–

கேசவனின் மார்பின் மையத்திற்கு குறிவைத்து, பிஸ்டலின் விசையை தட்டினான்.

சைலன்சர் பொருத்தப்பட்ட பிஸ்டல் சத்தம் காட்டாமல் கேசவன் உடலில் பொத்தல் போட்டது.

சென்ற நிமிடம் வரை அழகான நிர்மலாவின் அணைப்பில் சிலிர்த்த உடல், இப்போது இரத்தத்தில் குளித்துக் கொண்டிருந்தது.

நிர்மலாவின் வெற்றுடம்பில் மெய் மறந்த விழிகள் இப்போது வெறித்துப் பார்த்தபடி அசைவற்றுப் போயின.

அவன் திருப்தியாய் புன்னகைத்தான். திரும்பிப் பார்த்தான்.

நிர்மலா அங்கே இல்லை. அவன் உதட்டில் மீண்டும் ஒரு குரூரப் புன்னகை மலர்ந்தது.

முதுகுப் பையில் பிஸ்டல் வைத்து விட்டு, அதனுள் இருந்து ஒரு ரோஜாப்பூ வெளியே எடுத்து, உதட்டில் ஒற்றி முத்தமிட்டான். பின் கேசவன் உடல் அருகே போட்டான்.

கடைசியாக ஒருமுறை கேசவனின் உடலை பார்த்துக்கொண்டான். திரும்பி நிதானமாக நடந்து, வெளியே வந்து கதவு சாத்தினான்.


மாடியின் விளிம்புக்கு வந்து எட்டிப் பார்த்தவன் அதிர்ந்து போனான்.

கீழே காக்கி யூனிபோர்ம்களில் ஒரு பொலிஸ் பட்டாளமே நின்றது.

மேலே மாடியைக் காட்டி ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான் வாட்ச்மேன்.

(இன்னும் வரும்)

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்: எஸ். நாதன்
வயது: 24
முகவரி: 1028, மருதானை வீதி, கொழும்பு-08.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், நண்பர் தொடர்பு, ஆக்கங்கள் எழுதுதல்.




பெயர்: டி.எம். நுஃமான்
வயது: 24
முகவரி: ஜமானியா ஸ்ரோர்ஸ், கீரியன் கல்லியா, முந்தல்.
பொழுதுபோக்கு: பத்திரிகை வானொலி.



பெயர்: எஸ். வைஜெயந்திமாலா
வயது: 18
முகவரி: அறப்பொலகந்த எஸ்டேட், தெபுவன.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், ஆக்கங்கள் எழுதுதல்.



பெயர்: ஜே. பரீஸா
வயது: 18
முகவரி: 45, பள்ளியாவத்தை, வெலம்பொட, கம்பளை.
பொழுதுபோக்கு: வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல், பேனா நண்பர் தொடர்பு.



பெயர்: ஏ.ஜி.எம். பாறூக்
முகவரி: P.O.BOX-1784, CODE NO: 4400, SABAH-AL-SALEEM, KUWAIT.
பொழுதுபோக்கு: நாவல், பத்திரிகை, டீ.வி., நண்பர்களுடன் அரட்டை.



பெயர்: ஆர். மகேந்திரன்
வயது: 27
முகவரி: 228, MINOKIKOV, KUMATSU BARA, 1-5203-22, ZAMA SHI, KANAWAGA KEN, JAPAN.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல்.

பெயர்: வி. யோகேஸ்வரன்
வயது: 29
முகவரி: செல்வகந்தை தோட்டம், பதுளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை, புத்தகம் வாசித்தல்.

பெயர்: எல். நஸ்ருதீன்
வயது: 15
முகவரி: 6/2, சொறிக்கல்முனை, சம்மாந்துறை.
பொழுதுபோக்கு: வானொலி, பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: ஆர். ரமேஷ்
வயது: 20
முகவரி: 78, பெரக்கும்பா வீதி, குருநாகல்.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி, விளையாட்டு.

பெயர்: எஸ்.எம். பாயிஸ்
வயது: 15
முகவரி: கலீபா ஸ்ரோர்ஸ், விருதொடை, மதுரங்குளி.
பொழுதுபோக்கு: கதை, கட்டுரை வாசித்தல்.

பெயர்: எம். முகமட் அலி
வயது: 22
முகவரி: 156, நாப்பாவல, அவிசாவளை.
பொழுதுபோக்கு: பத்திரிகை வாசித்தல், விளையாடுதல்.

பெயர்: அ. பாஸ்கரன்
வயது: 25
முகவரி: PHI/T. NIHS களுத்தறை.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி, சினிமா, கிரிக்கெட், பேனா நண்பர்தொடர்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



# அம்மா என்றால்.......

என். உதயகுமார்

மணிச்சத்தம் கேட்ட பார்வதி அடுப்படியில் நின்றவள், மகள் கல்யாணியிடமிருந்து கடிதம் வந்திருக்கிறது என்ற நினைப்பில், போட்டது போட்டபடியிருக்க வாசலுக்கு விரைந்து வந்தாள். தபால்காரன் தான் கையில் கடிதத்துடன் நின்றுகொண்டிருந்தான்.

"இந்தாருங்கோ அம்மா, உங்கட மகளிற்றயிருந்து கடிதம் வந்திருக்கு." அவன் கூறியபோது பார்வதியின் முகத்தில் கோடி மின்னல்கள் ஒன்று திரண்டாற்போல் பிரகாசம்.

"இருப்பா, வெய்யிலுக்குள்ள வந்திருப்பா, குடிக்கிறதுக்கு மோர் எடுத்துக்கொண்டு வாறன்." கடிதத்தை வாங்கியவள் அதே வேகத்தில் உள்ளுக்குள் ஓடினாள்.

இது அவனுக்கொன்றும் புதிதல்ல. வழமையாய் நடக்கும் சங்கதிதான். அவன் ஒவ்வொரு முறையும் பார்வதியின் மகளிடமிருந்து வந்த கடிதத்தை கொடுக்கின்ற போதெல்லாம், ஏதோ அவன் தான் கடிதத்தை எழுதி வாங்கிக்கொண்டு வருவதுபோல் பார்வதி அவனுக்கு நன்றி சொல்வதும் தாகத்துக்கு மோர் கொடுப்பதும்...

பார்வதியின் இந்த செய்கைகளைப் பார்த்து, அவளது பிள்ளைப் பாசத்தை நினைத்து அவனுக்கு பார்வதியின் மேல் மதிப்பு உண்டாயிற்று. இப்போ அவனே பார்வதிக்கு கடிதம் அடிக்கடி வரக்கூடாதா என்று நினைப்பதுண்டு.

அவள் கொடுத்த மோரைக் குடித்துவிட்டு, அவளுக்கு நன்றிகூறிக்கொண்டு அடுத்த தெருவிற்குள் போனான் அவன்.

'இந்த நேரம் பார்த்து அவர் வேறு வீட்டில் இல்லையே... கல்யாணி என்ன எழுதியிருக்கிறாளோ, எப்படி இருக்கிறாளோ...' அவளாவது படிக்கலாமென்று நினைத்தால், மூக்குக் கண்ணாடியை எங்கே வைத்தோம் என்பது மறந்து போயிற்று. பார்வதியால் ஆவலை அடக்க முடியாமலிருந்தது. கடிதத்தைப் பிரித்து மெதுவாகப் படிக்க ஆரம்பித்தாள்.

"அன்புள்ள ஐயா, அம்மாவுக்கு....."

முதல் வரிகளைப் படிக்கின்றபோதே பார்வதியின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. 'என் ராசாத்தி, என் ஆசையெல்லாம் கொட்டி வளர்த்தேனே, இப்படி எங்கோ ஒரு தொலைவான நாட்டில் போய் வாழ்க்கைப்பட வைச்சிட்டானே ஆண்டவன்.' பார்வதியின் தாய்மனம் பொருமியது. கண்களைத் துடைத்துக்கொண்டு தொடர்ந்து படிக்க ஆரம்பித்தாள்.

சுந்தரேசன்- பார்வதி தம்பதியினருக்கு கல்யாணி ஒரே பிள்ளை. இருவரும் கல்யாணியின்மீது தங்கள் உயிரையே வைத்திருந்தார்கள். சிறுவயதில் இருந்தே கல்யாணி எதை ஆசைப்பட்டாலும் அதைச் செய்யாமல் இருந்ததேயில்லை. இத்தனைக்கும் சுந்தரேசன் பெரிய பணக்காரர் என்றுமில்லை. சாதாரண கிளார்க் உத்தியோகம் பார்ப்பவர். ஏதோ பார்வதி சீதனமாக கொண்டுவந்த வீடு வளவு, காணி என்றிருந்தமையால் அவரால் நிம்மதியாக காலந்தள்ள முடிந்தது.

கல்யாணி பருவமடைந்தபோது சுந்தரேசன் பார்வதியினரின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

ஆபிஸில் லோன் வாங்கி, பார்வதி அப்படி இப்படியென்று மிச்சம் பிடித்து பாங்கில் மீதப்படுத்தி வைத்திருந்த பணத்தையெல்லாம் எடுத்து, ஊரையே விருந்துக்கு அழைத்து கல்யாணியின் சடங்கு வீட்டை, தடல்புடலாய்ச் செய்து ஊரார் மூக்கில் விரலை வைக்கும்படி அமர்க்களப் படுத்திவிட்டனர்.



ஆனால் கல்யாணி படிப்பை முடித்துக் கொண்டதும் தான் அவர்களுக்கு சத்திய சோதனை ஆரம்பமாகியது. கல்யாணியின் ஜாதகத்தில் செவ்வாய்தோஷம் என்றிருந்த படியால், அவளுக்கு வரப் போகும் கணவனும் செவ்வாய் தோஷம் உள்ளவனாகவே இருக்க வேண்டு மென்று கூறிவிட்டார்கள். அதனால் வரும் வரன்கள் எல்லாமே ஜாதகப் பொருத்தம் அமையாமல் கைநழுவிப் போனபடியே இருந்தன.

இதனால் சுந்தரேசனும் பார்வதியும் கல்யாணியின் நிலையை நினைத்து பெரிதும் மனம் வருந்த ஆரம்பித்தனர். தாங்கள் கண்மூடு முன்னமே கல்யாணியை ஒரு நல்லவனிடம் ஒப்படைக்க முடியாமல் போய்விடுமோ என்று அவர்கள் கலங்கத் துவங்கினர். கடைசியாக கார்த்திகேசு புரோக்கர் ஒரு வரன் கொண்டு வந்திருந்தார்.

"பொடியனுக்கும் இதே ஊர்தான். பொடியன் இப்ப கனடாவிலதான் இருக்கிறான். நல்ல உத்தியோகம். கைநிறைய சம்பாதிக்கிறான். இரண்டு தமக்கைமாரையும் நல்ல இடத்தில கட்டிக்கொடுத்திட்டான், இப்ப பொடியனுக்கு கல்யாணம் பேசுயினம்..... அவனுக்கும் உங்கட மகளைப்போல செவ்வா தோஷம், அதுதான் இந்தப் பொடியனை உங்கட மகளுக்கு முற்றாக்கிப் போடலாம் என்று வந்தனான்..."

இதைக் கேட்டபோது சுந்தரேசனும் பார்வதியும் கடவுள் தங்களுக்கு கண்திறந்து விட்டான் என்று எண்ணி மகிழ்ந்தனர். கல்யாணியை மணக் கோலத்தில் நினைத்துப் பார்த்து மெய் மறந்து போய் நின்றார்கள்.

"ஆனால் பாருங்கோ, இதில ஒரு சின்ன சிக்கல் இருக்குது... பொடியனுக்கு இன்னும் கனடா சிடிசன்ஷிப் கிடைக்கயில்ல. அதனால அவரால இங்க வரமுடியாது. நாங்கள் கல்யாணியை அங்க அனுப்பிவைக்க வேணும்."

கற்பனையில் திளைத்துக் கொண்டிருந்தவர்களை கார்த்திகேசு புரோக்கர் இந்த வார்த்தைகளால் இடை நடுவில் நிறுத்தி அவர்களை சுயநினைவுக்கு கொண்டு வர வைத்தது.

"அப்படியென்றால் நீங்க என்ன சொல்லுறீங்க கார்த்திகேசு?"

"ஓம் அண்ண, பொடியன் போன ஏஜன்சி மூலமாவே, பிள்ள கல்யாணியையும் அனுப்ப அவர் எல்லா ஏற்பாடுகளையும் செய்து தருவார். நாங்கள் பிறகு காசு மூன்றரை லட்சத்தைக் கட்டினால் போதும், ஏஜன்சிக்காரர் கல்யாணியை பத்திரமாக கொண்டு பொடியனிற்ற சேர்த்துவிடுவினம். நீங்கள் அதைப்பற்றியொன்றும் பயப்பிடத் தேவையில்லை. அதுக்கு நான் முழுப் பொறுப்பு.....

"இந்தாங்கோ இதுதான் பொடியனின்ற படம்." படத்தை நீட்டினார் கார்த்திகேசு. படத்தில் அவன் தோற்றத்தில் வெளிநாட்டு வாடை அப்படியே தெரிந்தது. பார்ப்பதற்கு சினிமாக்காரனைப் போல அழகாகத் தானிருந்தான். கல்யாணிக்கு பொருத்தமான ஜோடிதான். ஆனால்...

'மூன்றரை இலட்சம்..' பாங்க் அக்கவுண்டில் ஐம்பதினாயிரம் கூடத் தேறாதே.. இந்த வீடு வளவு, காணி எல்லாமே கல்யாணியுடையதுதானே. அவளுக்குப் பயன்படாதது எங்களுக்கென்ன! இவற்றை அடகு வைத்தாவது பணத்தை புரட்டி விடலாம்... ஆனால் கல்யாணியின் திருமணம்...

'அதைக்கூட பார்க்க முடியாத துர்பாக்கிய வாதிகளாகிவிடுவோமே..

'இத்தனை நாள் கற்பனை கண்டவையெல்லாம் நிஜமாகவே நாங்கள் கற்பனையில் தான் காணவேண்டுமா?'

சுந்தரேசனுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியவில்லை.

"சாதகப் பொருத்தமும் நல்லாப் பொருந்திட்டுது. இது நல்ல இடம், நீங்கள் ஆசைப்பட்டது போலவே கல்யாணிக்கு நல்ல வாழ்க்கை அமையும்...

"எதுக்கும் பார்வதி அக்காவோட கதைச்சு ஒரு முடிவுக்கு வாருங்கோ அண்ணன்."

சுந்தரேசனும் பார்வதியும் இருதலைக் கொள்ளி எறும்பாய்த் தவித்தனர்.

'கல்யாணிக்கு இந்த சித்திரை பிறந்தால் வயது இருபத்தெட்டு முடிந்துவிடும். அவளுடைய வயதுப் பெண்களெல்லாம் கையிலொன்று வயிற்றிலொன்றுமாய் சுமந்துகொண்டு திரியும்போது இவள்மட்டும் கனவுகளை மனதில் சுமந்துகொண்டு எத்தனை நாளைக்குத்தான் வாழவேண்டும்.

'எங்கள் சுயநலத்துக்காக கல்யாணியின் வாழ்வை வீணடிப்பதா......? எங்களைப் பொறுத்தவரை வாழ்க்கை முடிந்துவிடப் போகிறது. ஆனால் கல்யாணி இனிமேல் தான் ஆரம்பிக்க வேண்டும். எங்கள் பாசக்கயிற்றால் அவள் ஆசைகளை, கனவுகளை கட்டிப்போட்டுவிடக்கூடாது.'

சுந்தரேசனும் பார்வதியும் தங்கள் மனதை கல்லாக்கிக்கொண்டு, கல்யாணியை சம்மதிக்க வைத்து, அவளை கனடாவுக்கு அனுப்பி வைத்தனர்.

கார்த்திகேசு புரோக்கர் கூறியபடியே கல்யாணி எந்த இடையூறும் இன்றி கனடாவுக்கு சென்றடைந்ததும், திருமணம் முடிந்தகையோடு அதன் வீடியோ கசெட்டை உடன் அனுப்பி வைத்திருந்தாள்.

சுந்தரேசனும் பார்வதியும் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் வடிய, திரும்பத் திரும்ப பக்கத்து வீட்டு சிவராமனது டெக்கில் போட்டுப் பார்த்து மனம் ஆறிக்கொண்டனர்.

அதன் பிறகு அவர்களது சந்தோஷம் கல்யாணியிடமிருந்து வரும் கடிதம்தான்.

"அம்மா இப்போதெல்லாம் என்னால் அதிகம் சாப்பிடமுடிவதில்லை. உடனே வாந்தி வந்துவிடும். அடிக்கடி தலைசுற்றுது. மயக்கம்போல் ஏற்படும், அப்போது ஒரே களைப்பாயிருக்கும்..." 'அப்படியென்றால் கல்யாணி முழுகாமல் இருக்கிறாள். நான் பாட்டியாகப் போகிறேன்... எனக்குப் பேத்தி பிறக்கப் போகிறாள்....'

கடிதத்தைப் படித்த பார்வதியின் மனம் சொல்லொணாத சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது. 'ஒரு தேத்தண்ணி போடக்கூடச் சரியாகத் தெரியாதே, கையை நெருப்பில் சுட்டுக்கொண்டு தவிப்பாளே.. இப்போ தன்னந்தனியாக வாயும் வயிறுமாக இருக்கும் என் பிள்ளை அங்கு என்ன கஷ்டப்படுகின்றாளோ...'

'அவள் ஆசைப்பட்ட இறால் குழம்பை, வாழைக்காய் சுண்டலை இந்நேரத்தில் அவளுக்கு ஆக்கிப்போட எனக்குக் கொடுத்து வைக்கவில்லையே....' பார்வதியின் மனம் ஒரு புறம் வேதனையாலும் துடித்தது. சுந்தரேசன் வீடு வந்ததும் வராததுமாய் அவரை உட்கார வைத்து, கல்யாணி இப்போ எப்படி இருக்க வேண்டும், எந்த உணவு வகைகளை சாப்பாட்டில் அதிகம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.... என்று எல்லா விபரங்களையும் மூன்று பக்கத்துக்கு எழுதிவித்து உடனே அனுப்பிவிட்டாள். கல்யாணிக்கு சுகப்பிரசவமாய் அமைய வேண்டுமென்று சுந்தரேசனும் பார்வதியும் கோயில் கோயிலாய் வேண்டிக்கொண்டிருக்கையில் கல்யாணியிடமிருந்து தந்தி வந்தது, பேத்தி பிறந்திருக்கிறாள் என்றும் 'அஸ்வினி' என்று பெயர் வைத்துள்ளோம் என்றும்.

நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

சுந்தரேசன் ஹோலில் பேப்பர் படித்துக் கொண்டிருந்தார். பார்வதி குசினியில் பகல் உணவு தயார் செய்துகொண்டிருக்கையில் வாசலிலிருந்து மணிச்சத்தம் பார்வதியின் காதில் விழுகிறது.

போட்டது போட்டபடியிருக்க ஹோலுக்கு விரைந்து ஓடினாள் பார்வதி. தன் மகளிடமிருந்து வரும் கடிதத்துக்காக அல்ல. இப்போது தனது ஆசைப் பேத்தி அஸ்வினியிடமிருந்து கடிதம் வந்திருக்கும் என்ற குதூகலத்தில்...!

■

# பாண்டியனின் ராஜ்யத்தில்



பெனிட்டா லொயோலா

ரஜினிபுர மன்னன் 'வீரா'வின் சபையினிலே ஒரு வழக்கு.

" 'அண்ணாமலை' என்ன பிரச்சனை?"

"எமை ஆளும் 'எஜமானே', தங்கள் 'வேலைக்காரன்' நான் தங்கள் முன் தலை வணங்குகிறேன்."

" 'உழைப்பாளி'யே உன் பிரச்சனை உரைப்பாயாக."

"மன்னா நம் 'தளபதி' தங்கள் இளைய, 'தங்கமகன்' என் மகள் 'வள்ளி' மீது ஆசை கொண்டுள்ளதாக ஒரு சேதி."

"என்ன? என் மகன் 'பாண்டியனா' உன் மகளை...?"

"ஆம் 'தர்மத்தின் தலைவனே' "

"ஓ மை காட். இது என்ன சோதனை?"

"மன்னா ஆத்திரப்படாதீர்கள். நீங்களே விசாரித்தறியுங்கள்."

"யார் அங்கே? அழைத்து வாருங்கள் அந்த 'போக்கிரி ராஜாவை'யும் அவன் காதலியையும்."

டட்டர டட்டட் டட்டர டட்டட் டைங். (வாயால் இசைத்துப் பாருங்கள்)

"பாண்டியா இது என்ன புதுக்கதை?"

"புதுக்கதை இல்ல அப்பா 'புதுக்கவிதை' "

"ஹாங். பார்க்கலாம்." என்று கர்ஜித்தான் மன்னன்.

"தர்மதுரை'யே 'ஆயிரம் ஜென்மங்கள்' ஆனாலும் அவர் தான் என் 'மாப்பிள்ளை' "

என்றாள் வள்ளி.

மன்னனின் கண்கள் 'சிகப்பு சூரியனா'க தகதகத்தது.

" 'நல்லவனுக்கு நல்லவனே', என் மூத்த மகள் 'புவனா ஒரு கேள்விக்குறி'யாய் போய்விட்டாள். ஆனால் இவள் என்றாலும் இன்பமாக 'அபூர்வ ராகங்களை' மீட்டட்டும். 'ராஜா, சின்ன ரோஜா'வை வாழவிடுங்கள். வேண்டுமென்றால் என் உயிரை எடுத்துவிடுங்கள்."

"உன் உயிர் யாருக்கு வேண்டும். உன்னால் முடியுமா 'அலாவுதீனின் அற்புத விளக்கை' கொண்டு வருவதற்கு?"

பாண்டியன் குறுக்கிட்டு "அவர் என்ன 'கழுகு மலைக் கள்வனா' களவாடுவதற்கு." என்றான்.

கோபங்கொண்ட மன்னன் "யாரது குறுக்கில் பேசுவது" என்றான்.

"'மனிதன்' ஹா...ஹா....ஹா..." என்றான் பாண்டியன்.

அதற்கு மன்னன் "நான் 'பாயும் புலி' என்றான்.

பாண்டியனும் தொடர்ந்து "நான் 'மாவீரன்' " என்றான்.

வெகுண்ட மன்னன் "நிறுத்து பேச்சை நான் 'ராஜாதி ராஜா' என்றான்.

"முடியாது. 'நான் அடிமை இல்லை' " என்றான் பாண்டியன்.

அதற்கு மன்னன் "நான் 'தீ' என்னுடன் விளையாடாதே" என்றான்.

'முரட்டுக்காளை' நான் என்னுடன் மோதாதீர்கள் அப்பா."

உடனே வள்ளி மன்னனின் கால்களில் விழுந்து அழுது புலம்பினாள். மன்னனின் கண்கள் குளமாகி மனமோ இளகியது.

" 'பெண்கள் வீட்டின் கண்கள்'. அவர்கள் கண்ணீர் விடுவது எனக்குப் பிடிக்காது. யார் அங்கே? நம் சபை ஐயரை அழைத்து வாருங்கள்."

"மன்னா 'ஸ்ரீ ராகவேந்தர்' 'மிஸ்டர் பாரத்'தையும் அழைத்துக்கொண்டு நம்ம சூப்பர் ஸ்டாரின் 'அன்புள்ள ரஜனிகாந்த்' படம் பார்க்க போய்விட்டார்." என்றான் 'ஊர்க்காவலன்'.

"என்ன 'குரு சிஷ்யன்' இருவரும் போய்விட்டனரா? வரட்டும் அவர்களை கவனித்துக்கொள்கிறேன்."

'படிக்காதவனா'ன அண்ணாமலை மன்னனை வணங்கி 'ராஜாதி ராஜனே', நாட்டுக்கு ஒரு நல்லவனே' நீங்கள் ஒரு 'அதிசயப் பிறவி'. இவர்களுக்கு 'இளமை ஊஞ்சலாடுகிறது.' 'முள்ளும் மலருமா'ய் வறுமையில் வாடிய என் மகள்மீது கருணை காட்டி அவள் கழுத்தில் நம் தளபதி 'மூன்று முடிச்சு' போட சம்மதித்ததற்கு ரொம்ப நன்றி. தேங்யூ வெரி மச்."

'நிழல் நிஜமாகின்றது'. காதல் 'கொடி பறக்குது'. கல்யாணம் நடக்கின்றது. பெரும் 'பணக்காரனா'ன நாதஸ்வர வித்துவான் 'சிவா'வின் நாதஸ்வரம் 'பாண்டியனின் ராஜ்யத்தில் உய்யலாலா...' என இசைத்துக்கொண்டிருந்தது.

●

## கூத்தரித்த கூடி ஜோக்ஸ்

- அந்தத் தலைவரோட பேச்சைக் கேட்டது முதல் எனக்குத் தூக்கமே வரமாட்டேங்குது.
- அப்படி என்ன பேசினார்?
- தமிழா தூங்காதே...தமிழா விழித்துக்கொள்னு திரும்பத் திரும்பச் சொன்னார்.

□□

பாபு: அசாருதீனுக்குத் தலைவலி வந்தால் எப்படி வலிக்கும்?
கோபு: Win Win னு வலிக்கும்.

□□

அவர்: என் மகன் காணாமல் போயிட்டான் சேர்.
பொலிஸ்காரர்: பையன் கறுப்பா..சிவப்பா?
அவர்: பச்சைக் குழந்தைங்க.

□□

ஒருவர்: என் சின்ன மகன் ஓயாமல் ஊரைச் சுத்துறான்.
மற்றவர்: ஒருகால் கட்டு போடுங்க சரியா போயிடும்.
ஒருவர்: ரெண்டு காலையும் கட்டிப்போட்டுப் பார்த்தாச்சு. அவிட்டுகிட்டு ஓடிடுறான்.
அவர்: ஒஃபீசில என் சீட்டைக் கிழிச்சிட்டாங்க.
இவர்: அப்புறம்?
அவர்: தைச்சுகிட்டோம்.

□□

விமல்: அந்தத் தியேட்டருக்குப் போய்ப் படம் பாரேன். நாற்காலி நுனிக்கே வந்திடுவே.
நிமல்: அவ்வளவு த்ரிலிங்கா?
விமல்: இல்லை. அந்த அளவுக்கு மூட்டைப் பூச்சி.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

சிறுகதை

# ப்ரிய வதனா

கவிப்பிரியா நிஷா

கதிரவன் ஏராளமான முனைப்புடன் கதிர்க் கைகளை நாலாபக்கமும் வீசியபடி நடுவானத்திற்கு பயணப் பட்டுக்கொண்டிருந்தான். கிஷானின் மனம் இலேசாக படபடத்துக் கொண்டது. நேரம் செல்லச்செல்ல அவனது எதிர்பார்ப்புக்களும் கொஞ்சம் கொஞ்சமாக அவனை விட்டு நழுவிக் கொண்டிருந்தன.

'இன்னும் தபால்காரனைக் காணலியே. காலையில இருந்து அவனோட வருகைக்காக வழிமேல விழி வச்சி காத்திருக்கேனே. இன்னைக்கும் எனக்கு 'டிமிக்கி' கொடுத்திடுவானா? நோ நோ இன்னைக்கு கண்டிப்பா ப்ரிய வதனாவின் லெட்டர் வரும். அதனால நிச்சயமா தபால் காரன் வருவான். மணி பதினொன்றையும் தாண்டப்போகுது. இன்னும் ஆளைக் காணலியே. நாசமாப் போக! எங்க தொலைஞ்சானோ...?'

மனதிற்குள் தபால்காரனை திட்டிக் கொண்டான் கிஷான். அவன் தபால்காரனை எதிர்பார்த்துக் காத்திருப்பது ப்ரிய வதனாவின் மடலுக்காகத்தான்! சோலைக் குயில் பாடும் அதிகாலைப் பொழுதிலேயே கண் விழித்து ப்ரிய வதனாவின் மடலுக்காக அவன் காத்திருப்பது தபால்காரனுக்கு எங்கே புரியப்போகிறது?

மீண்டும் ஒருமுறை தெருவை விழிகளால் ஆராய்கிறான். ஊஹூம் தபால்காரன் வருவதாகத் தெரியவில்லை. 'இன்னைக்கு தபால்காரன் வரமாட்டானா? ப்ரிய வதனா விடமிருந்து லெட்டர் வராதா?'

ஏக்கத்தோடு வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்த கிஷான், மனச்சோர்வோடு காணப்பட்டான்.

"ஏண்டா கிஷான்! இன்னும் எத்தனை மணி நேரத்துக்கு இப்படியே நின்னுக்கிட்டு இருப்பே? உனக்கு கால் வலிக்கலியா?" அம்மாவின் கேள்வி அவனை சற்று தடுமாற வைத்தது. அதே நேரம் தெருவில் ஒரு சைக்கிள் தென்படவே,

'யப்பா...தபால்காரன் வந்திட்டான்.'

துள்ளிக் குதித்து ஓடிச் சென்றவன் கிலோ கணக்கில் ஏமாந்து போனான். காரணம் சைக்கிளில் வந்திருந்தவன் தபால்காரனல்ல. மீன்காரன். உள்ளத்தில் ஒட்டி இருந்த கொஞ்ச நஞ்ச எதிர்பார்ப்பு களையும் தொலைத்தவனாக, இதற்கு பிறகு தபால்காரன் வரமாட்டான் என்ற எண்ணத்தோடு வீட்டுக்குள் நுழைந்தான் கிஷான். அவ்வேளையில் தபால்காரனின் மணிச்சத்தம் அவன் செவிகளில் ரீங்காரம் இசைத்தது.

மீன்காரனின் சைக்கிளைக் கண்டு தெருவரை ஓடிச்சென்ற கிஷான், தபால் காரனின் சைக்கிளைக் கண்டு தன் வீட்டு வாசலில் நின்றபடியே கடிதத்தைப் பெற்றுக் கொண்டான். அவனது எதிர்பார்ப்புகள் ஏமாற்றமாகவில்லை. ஆமாம் அது ப்ரிய வதனாவின் மடல்தான். அவனது எண்ணத்தில் 'கரு'பெற்று, எழுத்துக்களினால் 'பிரசவ'மாகி இருந்த அந்த 'குழந்தை' மடலை கரங்களில் சுமந்த கிஷான் ஆசையோடு அதனை படித்து மகிழ்ந்தான்.

□□□

கலையுலகில் ப்ரிய வதனா ஒரு மின்னும் தாரகை. ப்ரிய வதனாவின் ஆக்கங்கள் வெளிவராத பத்திரிகையே இல்லை எனலாம். அந்தளவுக்கு அவள் பிரபலமான எழுத்தாளராக திகழ்ந்தாள். ப்ரிய வதனாவின் இரசிகர்கள் பட்டாளம் ஏராளம் ஏராளம். அவர்களில் கிஷானும் ஒருவன். ப்ரிய வதனாவின் ஆக்கங்கள் பத்திரிகையில் பிரசுரமாகி இருந்தால் அன்றைய தினம் அவன் சாப்பிட மறந்து போவான். அவளுடைய ஆக்கங்களை படிப்பதோடு மட்டும் நின்று விடாது, பாராட்டி மடல்களும் அனுப்பி வந்தான்.

தீவிர இரசிகனான கிஷான் நாளடைவில் ப்ரிய வதனாவின் நண்பனானான். இதனால் அவனுக்கு ஏகப்பட்ட சந்தோஷம். பின்னே இருக்காதா என்ன? அவர்களது பேனா நட்பு நண்பன்-நண்பி என்ற ரீதியில் தொடர்ந்து கொண்டிருந்தது. ப்ரிய வதனாவும் கிஷானும் நட்புகொண்டு இரண்டு வருடங்களும் தாண்டி விட்டன. என்றாலும் அவர்கள் ஒருவரை ஒருவர் இதுவரை கண்டதேயில்லை. ஏன் போட்டோக்கள்கூட பரிமாறிக்கொண்டது கிடையாது.

கிஷானின் வீட்டில் அவனுக்கு திருமணப் பேச்சு அடிபட்டது. பெற்றோர் அவனுக்குப் பெண் பார்க்கும் படலத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். ப்ரிய வதனா பெரிய பிரபலமான எழுத்தாளர்தான். இருப்பினும் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவள். 'நான் ஏன் ப்ரிய வதனாவையே கல்யாணம் பண்ணிக்க கூடாது?'

அவன் மனதில் முதன் முதலாக ஆசை விதை போட்டது. இந்த இரண்டு வருட நட்பில் அவன் ஒருநாள் கூட அவளுக்கு சலனம் ஏற்படும் வகையில் மடல் வரைந்தது கிடையாது. அவளை அவன் நண்பியாக - ஒரு எழுத்தாளராக மட்டுமே நினைத்து வந்தான்.

ஆனால் இப்போது மட்டும்...எப்படி அந்த எண்ணம் வந்தது? அதுவும் அவளையே கல்யாணம் செய்து கொள்ள எண்ணும் அளவுக்கு அவனுக்கு எப்படி துணிவு வந்ததென்று அவனுக்கே புரியவில்லை.

**தீவிர இரசிகனான கிஷான் நாளடைவில் ப்ரிய வதனாவின் நண்பனானான்.**
**இந்த இரண்டுவருட நட்பில் அவன் ஒருநாள் கூட அவளுக்கு சலனம் ஏற்படும் வகையில் மடல் வரைந்தது கிடையாது.**
**ஆனால் இப்போது மட்டும்.... எப்படி அந்த எண்ணம் வந்தது.......?**



அவன் தன் விருப்பத்தைப் பெற்றோரிடம் தெரிவித்த போது அவர்கள் ஆவேச மானார்கள்.

"ஊர் பேர் தெரியாத ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு சொல்றியே, உனக்கு புத்தியே கிடையாதா?"

"அவ ஒண்ணும் ஊர்பேர் தெரியாதவளில்ல."

"சரி. அந்தப் பொண்ணை நீ பார்த்திருக்கிறியா?"

"இல்ல."

"நல்லா இருக்கு கதை. அவளைப் பார்க்காம, அவகூட பேசிப் பழகாம எப்படி இந்த முடிவுக்கு வந்தே?"

"அம்மா! முறைப்படி அவளைப் போய் பொண்ணு கேட்கத்தான் உங்களைக் கூப்பிடுறேன். நீங்க இந்தக் கல்யாணத்திற்கு சம்மதிக்கல்லன்னா நான் தற்கொலை பண்ணிக்குவேன்."

அவன் பயமுறுத்தினான். வேறு வழியின்றி அவனது விருப்பத்திற்கு சம்மதித்து நாளையே பெண் பார்க்கச் செல்வதென்று பெற்றோர் தீர்மானித்தனர்.

"இதுதான் ப்ரிய வதனாவின் வீடா?"

"ஆமா! நீங்க யாரு...?"

"நான்தான் கிஷான். ப்ரிய வதனாவோட 'பென் பிரண்ட்."

"ஓ...அது நீங்கதானா...? வாங்க வாங்க உட்காருங்க."

இருபத்தைந்து வயது மதிக்கத்தக்க ஒரு இளைஞன்தான் அவர்களை வரவேற்றான். 'இவன் ப்ரிய வதனாவின் அண்ணனாக இருக்கக்கூடும்' என்றெண்ணிக் கொண்ட கிஷான், சுற்றும் முற்றும் பார்த்தான். இதை அவதானித்த அந்த இளைஞன்,

"என்ன மிஸ்டர் அப்படிப் பார்க்கிறீங்க? இதுதான் பிரிய வதனாவோட குச்சு வீடு. அதவிடுங்க நீங்க திடுதிப்புன்னு வருவீங்கன்னு எதிர்பார்க்கவேயில்லை."

"திடுதிப்புன்னு வந்து ஷொக் ஏற்படுத்தணும்னு தோணுச்சு. அதனாலைதான் முன் அறிவித்தலின்றி வந்துவிட்டோம். இதில உங்களுக்கு சிரமம் ஏதாவது..?"

"நோ..நோ.. உங்களைப் போன்றவங்க எங்க வீட்டுக்கு வந்திருக்கிறதை நினைக்க ஹப்பியா இருக்கு."

அவன் இன்னும் என்னென்னவோ பேசினான். அரசியலிலிருந்து நாட்டு நிலைமைகள்வரை பேசினான். நேரம் போய்க்கொண்டே இருந்தது. ப்ரிய வதனா இன்னும் வரவில்லை. கிஷான் பொறுமையை இழந்தவனாக "ப்ரிய வதனா வீட்ல இல்லியா?"

அந்த இளைஞன் வாய்விட்டுச் சிரித்தான். பிறகு "மிஸ்டர்! ப்ரிய வதனா என்கிறது நான்தான். அது என்னோட புனைபெயர்" மீண்டும் சிரித்தான். கிஷான் முகத்தில் அசடு வழிந்தது. அவன் மெதுவாக தன் பெற்றோரை நோக்க, அவர்களும் அவனோடு சேர்ந்து சிரித்தார்கள்!

---

# அவசியம் ஒரு அனுபவம்

-சேத்தூர் எஸ் பகீரதி-

அலுவலகத்தில் இருந்து பஸ் இல்லாமையால் நடந்து வந்த உமாவின் கால்கள் வலித்தன. அம்மா தந்த தேனீரை அருந்திவிட்டு இந்த மாதத்துக்கான சம்பளப் பணத்தை உமா அம்மாவிடம் நீட்டினாள். பணத்தை வாங்கிக்கொண்ட உமாவின் அம்மா "மகள் நீ ஏதாவது வாங்கணும்னா" அம்மா பணத்தை நீட்ட "தேவையில்லம்மா" உமா கூறிக்கொண்டு தனது அறைக்குள் நுழைகிறாள்.

"அம்மா எனக்கு அவசரமா ஒரு ஆயிரம் ரூபா பணம் வேணும்" சாதாரண தரத்துடன் படிப்பை நிறுத்திவிட்டு வெட்டியாக நண்பர்களுடன் ஊரைச் சுற்றும் உமாவின் மூத்த தம்பி ஜெகனின் அதிகாரக் குரல் அது. "எதுக்கப்பா பணம்?" அம்மா கேட்க "தரப்போறீங்களோ இல்லையோ?" அவன் அதிகாரமாக கத்தினான். "இது உன் அக்காவோட சம்பளப் பணம்." என அம்மா கூறி நீட்டிய பணத்தை 'வெடுக்' என வாங்கிக் கொண்டு ஜெகன் வெளியேறினான். இவற்றை பார்த்துக்கொண்டு நின்ற உமாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"ஏம்மா அவன் பணத்தை இப்படி தண்ணி மாதிரி செலவழிச்சுக் கொண்டும், ஊரச் சுத்திக்கொண்டும், பொறுப்பில்லாமத் திரியுறானே. பார்த்துக்கொண்டு பேசாம இருந்தா பணத்துக்காக நம்மளையும் சேர்த்து அடமானமாக வித்துப் போடுவான். பணம் எதுக்குன்னு அவன அதட்டிக்கூட உங்களால கேட்க ஏன் முடியாது? இனியாவது கண்டமாதிரி பணம் கொடுக்காம என்ன எதுக்குன்னு கேட்டுக்கொடுங்க." ஆத்திரத்தின் எல்லையில் நின்றாலும் உமா நிதானமாகக் கதைத்தாள். "அவன் ஆம்பிள்ளை. அவனுக்கு ஆயிரம் செலவிருக்கும் விடும்மா." அம்மா கூற உமாவுக்கு இன்னும் கோபம் வந்தது.

"சரி அவன் ஊரச் சுத்திக்கொண்டு பொண்ணுங்களக் கிண்டல் பண்ணுறதாவும் இன்னும் ஏதேதோவெல்லாம் சொல்றாங்களே! கொஞ்சம் புத்தியாவது சொல்லக்கூடாதா?" உமா கேட்டாள். "அவன் ஆம்பிள்ளைம்மா! பொண்ணுங்கதான் ஒழுக்கமாக இருக்கணும்." அம்மா கூறினாள். உமாவுக்கு இரத்தம் கொதித்தது. "ஏம்மா ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி? இதுதானே நீங்க சொல்றது?" ஆத்திரத்துடன் தனது தாயை உமா ஏறிட்டாள். "அதில்லம்மா ஆம்பளை கெட்டா சம்பவம். பொண்ணு கெட்டா சரித்திரம்" அம்மா ஒரே பாடும் அந்தப் பல்லவியைப் பாடத் தொடங்க, இனியும் கதைப்பதில் பிரயோஜனம் ஒன்றுமில்லை என நினைத்த உமா ஒன்றுமே பேசாது மௌனமாக தனது வேலைகளில் ஈடுபட்டாள்.

'எப்போது ஆணுக்குப் பெண் சமம் என்னும் கருத்தை ஏகமனதாக எல்லோரும் சம்மதிக்கிறார்களோ அன்றைக்குத்தான் பெண்களுக்கு உண்மையான சுதந்திரம். அதற்கு இன்னுமொரு பாரதிதான் பிறக்க வேண்டும்' என உமா நினைத்துக்கொண்டாள். உமாவுக்கு தனது அம்மாவை நினைக்க ஒரு பக்கம் கோபமாகவும் மறுபக்கம் பாவமாகவும் இருந்தது. சிலர் தங்களுக்கு வரப்போகும் பிரச்சனையை முன்னமே அறிந்து அதில் இருந்து தப்பி விடுவார்கள். சிலருக்கு ஒரு அனுபவத்திற்குப் பிறகுதான் புத்தியே வரும். தனது அம்மாவைப் பொறுத்தவரை அனுபவமே அவசியம் என நினைத்தாள் உமா.

உமா நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவள். சின்ன வயதிலேயே தந்தையைப் பறிகொடுத்த உமாவுக்கு ஊர் சுற்றும் தம்பி ஜெகன் ஒருவனும் உமாவுடன் எந்நேரமும் ஒட்டிக் கொண்டிருக்கும் பிரதாப் என்ற கடைசித் தம்பி ஒருவனும் மூன்று தங்கைகளும் உள்ளனர். மூத்த தம்பி ஜெகனைத் தவிர மற்ற நால்வரும் உமாவின் சொற்படி கேட்பவர்கள். குடும்பத் தலைவனை இழந்ததும் குடும்பப் பாரம் மூத்தவளான உமாவின் தலையில் சுமையாக அழுத்தியது. இருப்பினும் உமா அதைச் சுமையாக நினைக்கவில்லை. உமாவுக்கு மூவாயிரம் ரூபா சம்பளத்தில் வேலை ஒன்றும் கிடைத்தது. அந்தப் பணம் குடும்பத்தை நடத்த ஓரளவு போதுமானதாக இருந்தது.

ஆனால் ஜெகன்தான் உமாவின் சம்பளப் பணத்தில் அரைவாசியை தனது ஆடம்பரச் செலவுகளுக்காகவும் தனது நண்பர்களுக் காகவும் வாங்கிச் செலவு செய்வான். உமா ஏதாவது புத்தி சொன்னால் உமாவுடன் வாக்கு வாதப் பட்டுக்கொண்டு பேசமாட்டான். அந்த வீட்டில் அவனுடைய ஆதிக்கமே நடந்து கொண்டிருந்தது. உமா ஏதாவது பேசினால் அவளது தாயார் தம்பி ஜெகனின் பக்கமே சார்பாக நின்று பேசுவார். 'இந்த அம்மாவைத் திருத்தவே முடியாது. பட்டுத் தேறினால்தான் தெரியும்' என உமா பலமுறை தனக்குள்ளேயே சலித்துக் கொண்டாள்.



அன்று பஸ் இல்லாததால் உமா அலுவலகத்தில் இருந்து நடையில் வந்து கொண்டிருந்தாள். மழை வேறு பிடித்துக் கொண்டது. உமா குடை வைத்திருந்தாலும் நன்றாக நனைந்துவிட்டாள். மழைக்காக ஒதுங்கும் பெண்களை நண்பர்களுடன் சேர்ந்து பலர் கிண்டல் பண்ணிக்கொண்டிருந்தார்கள். உமாவைப் பார்த்த ஒருவன் மற்றவர்களிடம் "டேய் கொட்டுற மழையில வானத்துல இருந்த தேவதை வந்து விழுந்துட்டுதடா" என்று சொல்ல மற்றவர்கள் எங்கே? என வாயைப் பிளக்க "இதோ போகுது" என உமாவைக் காட்டி நகைத்தான். உமாவுக்கு கோபம் வந்தது. அக்கா தங்கையோடு பிறக்காதவர்களாக்கும் என நினைத்தவாறு நிமிர்ந்த உமா திடுக்கிட்டாள். அவளது தம்பி ஜெகனும் தனது நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு பெண்களைக் கேலி பண்ணிக் கொண்டு நின்றான். உமாவைக் கண்டதும் பேசாமல் நின்றான். உமா அவனைப் பார்த்து முறைத்துவிட்டு நடந்தாள். அவனை ஷேர்ட் கொலரோடு அள்ளிப் பிடித்து கை ஓயும் வரையும் 'பளார் பளார்' என அறைய வேண்டும் போல் இருந்தது. வந்த கோபத்தை உமா அடக்கிக்கொண்டு நடந்தாள்.

நாட்களும் நகர்ந்தன. ஜெகனது போக்கில்தான் எந்த மாற்றமும் இல்லை. அன்றொருநாள் ஏதோ வேலையாக இருந்த உமா வாசலில் நிழலாட நிமிர்ந்து பார்த்தவள் திடுக்கிட்டாள். அவளது தம்பி ஜெகன் ஒரு பெண்ணுடன் மாலையும் கழுத்துமாக நின்றான். தன்னையே பார்த்துக்கொண்டு நிற்கும் தனது அக்காவைக் கூட கவனிக்காதவன்போல் "அம்மா, அம்மா" என சத்தமாக அழைத்தான். வெளியில் வந்த அம்மா ஏகமாய் அதிர்ந்தாள். பதட்டத்துடன் "ஜெகன், ஜெகன் என்னடா இதெல்லாம்?" என அம்மா அவனது தோள்களைப் பிடித்து உலுப்ப "எங்களை ஆசீர்வாதம் பண்ணுங்கம்மா." என ஜெகன் தனது அம்மாவின் காலில் விழ அவள் விலகிக் கொண்டாள்.

'ஓ' என தலையில் அடித்துக்கொண்டு அழுத அம்மா "பாவி என்ன காரியம்டா பண்ணிட்டா? உன் அக்காவோட சம்பளப் பணத்துல தண்டச் சோறு தின்னுட்டு இந்தக் காரியம் பண்ணிட்டியேடா. மூத்த அக்காவும் அடுத்தாப்புல மூணு தங்கச்சிகளும் வீட்ல இருக்கும்போது உனக்கு என்னடா அவசரம்? என் தலைமேல இடியை இறக்கிட்டியேடா பாவி" என அழுதுகொண்டே உமாவின் அம்மா பளார் பளார் என ஜெகனின் கன்னத்தில் மாறி மாறி அறைந்தவள் ஓய்ந்துபோய் அழத் தொடங்கினாள்.

ஜெகன் தனது அம்மாவையும், உமாவையும் முறைத்து ஒரு பார்வை பார்த்துவிட்டு அவளையும் இழுத்துக் கொண்டு வெளியேறினான். உமா மௌனமானாள். அழும் அவளது தாயைத் தேற்ற வழி தெரியவில்லை. உமா முயலவும் இல்லை. அழுது ஓயட்டும் என உமா நினைத்துக்கொண்டாள்.

உமா தனது தாயாரையே பார்த்துக் கொண்டு நின்றாள். அழுதழுது அவளது இரு கண்களும் சிவந்திருந்தன. ஒன்றுமே பேசாதிருக்கும் உமாவை அவளது அம்மா ஏறிட்டாள். உமா அம்மாவைக் கலங்கிய விழிகளோடு நோக்கினாள். அந்தப் பார்வை 'நான் முன்பு சொன்னேனே கேட்டீர்களா?' என்பது போலிருந்தது. உமாவைப் பார்த்த அவளது அம்மா மீண்டும் 'ஓ'வென அழத் தொடங்கினாள். உமா தொடர்ந்து மௌனமே சாதித்தாள். அவள் கலங்க வில்லை. ஏனெனில் ஜெகன் இதுவரை பாரமாக இருந்தவன். குடும்பத்தைத் தொடர்ந்து நிர்வகிக்கக்கூடிய ஆற்றலும் மனதில் உறுதியும் இருக்கும்போது அவள் ஏன் கலங்க வேண்டும்? அம்மாவின் முதுகை ஆதரவுடன் வருடிக்கொடுத்து விட்டு உமா பிரகாசமான முகத்தோடு எதுவும் நடக்காதது போல் தனது கடமைகளில் வழமைபோல் ஈடுபட்டாள். இதயம் மட்டும் மெல்ல அழுதது.

(ஒரு நிகழ்வின் நிஜங்கள்)

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# திருமகளும் ஒரு கனவும்!



மூங்கில் மரங்களால் உருவாக்கப்பட்ட அழகான குடில். அதன் அருகே வனப்பான கடல். அந்த கடலின் அலைகள் வந்து பாறைகளில் மோதி எழுப்பிய பேரிரைச்சல் ஒரு புறம், குடிலின் உள்ளே இருந்த சிற்பக் கூடத்தில் உளி கொண்டு கல் செதுக்கும் ஓசை மறு புறம்! சோவென்று இரைச்சலுடன் வீசும் வாடைக் காற்றில் கடற்கரை ஓர சோலைப் பூக்கள் கலந்துவிட்ட வாசனை வந்து இதம் தந்துகொண்டிருக்க,

முடிவடையும் தறுவாயில் இருந்த அழகுச் சிலையை கண் இமை மூடாமல் இரசித்துக் கொண்டிருந்தான் பூங்குன்றன்.

தூக்கம் மறந்து, ஊன் மறந்து எத்தனை நாள் உழைப்பு. தன் கற்பனைக்கு வடிவம் கொடுத்து கண் துஞ்சாமல் உழைத்ததுக்கு கண் நிறைவாய், மனதுக்கு நிறைவாய் பலன் கிடைக்கும் போது படைப்பாளி தான் பட்ட துயரம் மறந்து போவான்.

எனினும் திருப்தி வராது. படைப்பவனுக்கு திருப்தி தான் எதிரி. இன்னும் நன்றாக, இன்னும் சிறப்பாக என்ற தேடலும், முயச்சியும்தான் படைப்பாளியின் முயற்சியை பட்டை தீட்டுகிறது.

பூங்குன்றன் தன் படைப்பை இரசித்தான். இன்னும் சிறப்பாக செய்திருக்கலாம் என்று நினைத்தான். எங்கே தவறு செய்தேன் என்று யோசித்தான்.

பூங்குன்றன் யோசித்ததைப் பார்த்து அந்த அழகுச் சிலை நளினப் புன்னகை உதிர்ப்பதைப் போல் இருந்தது.

தன் படைப்பையே மீண்டும் ஒருமுறை உற்று நோக்கினான். மூளையில் ஒரு மின்னல் கீற்றாய் அந்த சந்தேகம் தோன்றியது.

'எங்கோ பார்த்திருக்கிறேன். இதேபோல் ஒத்த வடிவான உயிருள்ள, உயிர் வதைக்கும் அழகியை எங்கோ பார்த்திருக்கிறேன். எங்கே? எங்கே பார்த்தேன்? அதன் பாதிப்புத்தான் என் கற்பனைக்கு மூலமாகி படைப்பாகி யிருக்கிறது.'

பூங்குன்றன் ஒரு யோகிபோல விழிகளை இறுக மூடிக்கொண்டான். மனமென்னும் பெட்டகத்தில் கிடந்த நினைவுகளை வெளியே கொண்டுவந்து உதறிப்போட்டு தன் கேள்விக்கு விடை தேடினான்.

...ஜல்...ஜல்...ஜல்.....

பூங்குன்றனின் சிந்தனையை, விழி மூடி மனம் ஒரு நிலைப்படுத்தி நடத்திய நினைவுத் தேடலை சிலம்பின் ஒலி கலைத்துப் போட்டது.

கண் திறந்து எதிரே பார்த்தான். காற்றின்றி அசையாமல் இருக்கும் இலைகள் போல, அவன் இமைகள் அசைவற்றுப் போயின.

சாத்த மறந்தன இமைகள். பார்ப்பது கனவா நனவா என்று நம்ப மறுத்தன

## தருவது ரசிகன்

விழிகள்.

பாதச் சிலம்பு ஒலி எழும்ப, பருவ எழில்கள் மோக கணை தொடுக்க, புருவம் வளைந்து காமனின் கரும்பு வில்லாய் போர் தொடுக்க, வானத்தில் இருந்து தரையில் தவறி விழுந்த பிறையாக முன் நெற்றி ஒளி சிந்த, தென்னை அடி மரத்து குரும்பைகளாய் செழித்திருந்த மார்பெழில்கள் மனதை இரக்கமற்ற கொள்ளையர் போல் பறித்தெடுக்க, இருக்கிறதோ இல்லையோ என்று பட்டிமன்றத்தில் ஆராய வேண்டிய விசயம் போல் இடை சிறுத்திருக்க, தரைக்கும் வலிக்காமல், தன் பாதக் கமலங்களுக்கும் வலிக்காமல் அடி எடுத்து வைத்து, அப்படி ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் எதிரேயிருப்பவன் எவ்வளவுதான் உறுதியான மனம் படைத்தவன் என்றாலும் அடியற்ற மரம்போல் மன்மதனின் மலர்ப்படுக்கையில் விழுந்து விடச்* செய்யக்கூடிய எழில்களின் ராணியாக, எந்தவொரு சிற்பியின் கற்பனைக்குள்ளும் சிக்காத பொற் சிலையாய், தன் பவள இதழ்களில் புன்னகை மொட்ட விழ்த்தபடி சொர்ணராணி எதிரே வந்தாள்.

சிலை வடிக்கும் சிற்பி இப்போது தானே ஒரு சிலையாகிப் போனான்.

தலையை உதறிக்கொண்டான். ஒரு முறை திரும்பி தான் படைத்த சிலையைப் பார்த்துக் கொண்டான்.

மீண்டும் ஒரு மின்னல். படைத்த சிலை எதிரே வரும் பருவச் சிலை போன்ற சாயலில் இருப்பது புரிந்துபோக, மறு கணமே திகைத்துப் போனான்.

'சக்கரவர்த்தித் திருமகளை சிலையாக வடித்தேனா? சக்கரவர்த்தியின் செவிக்கு இந்தச் செய்தி போனால் விலையாக என் உயிர் கேட்கப்படுமே. உயிர் போவது இருக்கட்டும். தன் சாயலில் சிலை இருப்பது கண்டுவிட்டால் இளவரசி ஆடிக்காற்றாக ஒரு ஊழிக்கூத்தே நடத்திவிடுவாளே.'

மெல்ல நகர்ந்து சிலையை முதுகால் மறைப்பது போல் குறுக்கே நின்று கொண்டான்.

மழைக்கால மேகமாய் கறுத்தும், நீண்டும் இருந்த கூந்தலில் அவள் சூடியிருந்த மலர் வாசனை அவள் அருகே வந்துவிட்டதை அறிவிப்பு செய்ய, தடுமாறி வியர்த்து,

"வாருங்கள் இளவரசி, தங்கள் பாதங்கள் இந்த பரம ஏழையின் குடிலுக்குள் படுவதற்கு பாக்கியம் செய்திருக்க வேண்டும்."

பாதச் சிலம்பொலியின் ஓசை தோற்றுவிடும் வண்ணமாய் முல்லைப் பற்கள் தெரிய இதழ் விரித்து சிரித்தாள் சொர்ணா.

"முறையற்ற பேச்சாக இருக்கிறது தாங்கள் கூறுவது?"

பதறியவனாக,

"என்ன சொல்கிறீர்கள் இளவரசி?"

"பார் வியக்கும் சிற்பி நீங்கள். தங்கள் கலைப் படைப்புக்களை கண்டு கதிரவனைக் கண்ட கமல மலர்கள் போல் பூரிக்கும் பூவுலகம் முழுவதுமுள்ள உங்கள் நேசர்களில் நானும் ஒருத்தி."

"ஆனாலும் தாங்கள்..."

தயங்கினான். அவன் சொல்ல வந்த விசயம் புரிந்து, கொவ்வை இதழ்களில் மெல் நகை மாறாமல், இனிய சொல் பொழிந்தாள்,

"ஏன் சிற்பியாரே, நாடாளும் மன்னனின் மகளுக்கு கலையாளும் உங்கள் மீது பிரியம் வரக்கூடாதா? அரச வம்சம் என்றால் கலையார்வம் துளியும் கிடையாது என்று முடிவு செய்துவிட்டீர்களா?"

"இல்லை...இல்லை..... நான்.. வந்து.. நீங்கள்... வந்து... அது... வந்து.."

"சிற்பம் வடிப்பதில் வல்லவரான தாங்களிடம் சொற்பதங்கள் மட்டும் உதடுகளுக்குள் சிக்கி உடைந்து போகின்றன. உளி கொண்டு செதுக்க தெரிந்தவருக்கு, உதடு கொண்டு வார்த்தைகளை செதுக்க தெரியவில்லை என்பது வேடிக்கையல்லவா வேந்தே!"

பூங்குன்றனுக்கு காலும் ஓடவில்லை. கையும் ஓடவில்லை. இளவரசி கேலி செய்கிறாளா என்னும் சந்தேகம் வந்துவிட்டது.

கொல்லும் விழிக் காரிகையின் புத்தெழில்கள் சமீபத்தில் இருக்க, கத்தி முனையில் நிற்பது போல் இருந்தது.

விலங்குடைத்து பாயும் வேங்கைப் புலி போல, அவன் தடுத்தும் கேளாமல் அவள் பூரிப்பான அழகுகள் மீது பாய்ந்து செல்லும் விழிகளுக்கு விலங்கு போடும் வலிமையை மனம் இழந்து கொண்டிருந்தது.

"நான்...இந்த ஏழையை வேந்தே என்று அழைப்பதுதான் வேடிக்கையாக இருக்கிறது இளவரசி!"

தன் இடையை இரு கரங்களாலும் தாங்குவது போல் கம்பீரமாய் நின்றபடி சொர்ணா பதிலுக்கு கேட்டாள்.

"இதில் என்ன வேடிக்கை சிற்பியாரே? நாடாளும் மன்னரை வேந்தன் என்கிறோம். இல்லையா?"

"ஆம்..ஆம்."

"கலையாளும் உங்களை ஏன் வேந்தன் என்று அழைக்கக்கூடாது?"

"ஆம்...ஆம்...இல்லை...இல்லை. தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?"

"நீங்கள் இந்த உலகத்திலேயே இல்லை. சற்று விலக முடியுமா சிற்பியாரே மறைந்துள்ள சிலையை என் விழிகளும் காணட்டுமேன்."

"இல்லை இளவரசி."

"இளவரசிக்கும் தடையா சிற்பியாரே? இதற்கு தண்டனை என்னவென்று தெரியுமா?"

"அது... இளவரசி.... இப்போதுதான் தயாராகிறது. பூரணமாகும் முன்னர் தாங்கள் காண்பது......"

"மன்னிக்க வேண்டும். நான் பார்த்தே ஆகவேண்டும். இல்லாவிட்டால் இந்த இடத்தைவிட்டு நகரவே மாட்டேன். பூர்த்தி செய்துவிட்டு சொல்லுங்கள். அது வரை என் விழிகள் பூத்தே இருக்கட்டும்."

சங்கடமாகவும், அடுத்து என்ன ஆகுமோ என்ற அச்சத்துடனும் விலகினான் பூங்குன்றன்.

சிலைமேல் பதிந்தன அஞ்சன விழிகள். பதிந்த விழிகள் நிலைத்து நின்று நீண்ட நேரம் இரசித்து மகிழ்ந்தன.

பூங்குன்றனின் உள்ளே ஒரு பிரளயமே நடந்து கொண்டிருந்தது. பூகம்பம் வெடிக்கப் போகிறது! பூவையின் வடிவில் அது இருக்கப் போகிறது என்று இதயம் வேகமாய் துடித்தது.

சொர்ணராணியோ தன்னை மறந்து கரவோசை செய்தாள். கரவோசை செய்ய வளையல்கள் குலுங்கி எழுப்பிய ஓசையும் கலந்து ஒலித்தது.

சிற்பியை நோக்கி திரும்பினாள்.

"இதற்கும் ஒரு தண்டனை இருக்கிறது சிற்பியாரே."

இதழ்களில் தெரிவது குறு நகையா அல்லது கோபமா என்று புரியாமல் தடுமாறினான் பூங்குன்றன்.

அவள் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் திசை தெரியாக் காட்டில் சிக்கியவன் கதிபோல் ஆனான் சிற்பி.

"சிலை வடித்த கரங்கள் எங்கே? இரசித்து வியந்து படைத்த விழிகள் எங்கே? பதில் சொல்லாமல் சுவர் மேலே பூனைபோல இருப்பது ஏன்? தண்டனைக்கு சம்மதமா? அல்லது தப்பிக்கொள்ளும் தந்திரமா?"

'விழிக் கணைகளால் வதைப்பது போதாது என்று இப்போது வினாக் கணைகளால் வேறு வதைக்கிறாளே' என்று மனதுக்குள் நினைத்தான்,

"தவறுதான் இளவரசி. என்றோ ஒருநாள் தங்களை கண்டு கொண்ட என் விழிகள் உங்கள் எழில் உருவை மனதில் பத்திரப்படுத்தி வைத்துவிட்டன."

"என்றோ ஒரு நாள் அல்ல சிற்பியாரே. ஆயிரம் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழாவில்! தவறு செய்தது உங்கள் விழிகள் மட்டுமல்ல. என் விழிகளும்தான்! என்று என்பதை நீங்கள் மறந்து போனாலும் என்றும் மறக்காமல் உங்கள் திரு உருவம் என் நெஞ்சில் இருக்கிறது. நீங்கள் சிற்பி, சிலையாக வடித்து விட்டீர்கள். நான் மனதில் நிலையாக உங்களை வைத்துவிட்டேன்."

பழம் நழுவிப் பாலில் விழுந்தது. ஆனால் பூங்குன்றனுக்கோ பஞ்சு பறந்து பெரு நெருப்பில் விழுந்தது போல் இருந்தது. பதறிப்போனான்.

"வேடிக்கையாகக்கூட அப்படி பேசாதீர்கள் இளவரசி."

"வேடிக்கையாகப் பேச வரவில்லை நான். வேண்டுகோள் விடுக்கவே வந்தேன்! உங்கள் முகம் காண்பதற்கு முன்பே, குணம் அறிந்து நெஞ்சில் நேசம் வளர்த்த கதை சொல்லவும் வந்தேன். காணவேண்டும் என்று என் கண்கள் துடித்தன. அன்று விழாவில் காண முடிந்தது. அன்றோடு என் கண்கள் தூக்கம் மறந்தன. இன்று நேரில் வந்து அருகில் நின்று பார்த்தும் விட்டேன். என் அன்பை நிராகரிக்க வேண்டாம் என்று வேண்டுகோள் விடுக்கவே விரைந்து வந்தேன்."

யாரோ ஒரு தேவதை தன்னைத் தூக்கி மலர்ப்படுக்கையில் எறிந்து விட்டு நகைப்பது போல் இருந்தது பூங்குன்றனுக்கு.

தொடர்ந்து உதடு துடிக்க அவளே பேசினாள்.

"பொய் சொல்ல வேண்டாம். காதல் என்ற வார்த்தையை உச்சரிக்க இடையில் உள்ள தடைகள் எச்சரிக்கும் என்று தெரியும். ஆனால் உங்கள் நினைவில் நான் இருப்பது சத்தியம். உங்கள் படைப்புக்களில் என் தாக்கம் வருவதும் நிச்சயம். எனவே நிராகரிக்க வேண்டாம். நெஞ்சறிய பொய் சொல்லி நெய்யாக உயிர் உருக வேண்டாம்."

சொர்ணராணியின் பேச்சில் தெரிந்த அழுத்தமும், ஆவேசமும் பூங்குன்றனை கட்டிப் போட்டன.

அடுத்த நொடியே ஒரு காரியம் செய்தாள் சொர்ணராணி.

பூங்குன்றனை நெருங்கினாள். எதிர்பாராத வேகத்தில் அவன் உதடுகளை நோக்கி தன் இதழ்களை கொண்டு சென்று அமுத பானத்தால் நனைத்தாள்.

சொர்ணராணியின் மார்பில் தவழ்ந்த முத்துமாலை பூங்குன்றனின் மார்பை அழுத்தியது. சொர்ணராணி ஆவேசமாய் அவன் முதுகை இறுக்க, முத்துமாலை அவன் மார்பில் ஆழப் பதிந்து குறி பதித்தது.

விலகினாள். விரைந்து சென்றாள்.

▫▫▫



## இலக்கிய நயம்

யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட மஞ்சத்தில் கிடந்த சொர்ணராணி நகைத்தாள்.

அருகே இருந்து சாமரம் வீசிய தோழி பதிலுக்கு தானும் நகைக்க, சொர்ணா திடுக்கிட்டு விழித்து,

"ஏனடி சிரிக்கிறாய் நீ?" கோபம் குரலில் தெரிந்தது.

அது கனவு பறிபோனதால் வந்த கோபம். காதலில் கனவு சுகம். கனவு முறிந்து நனவு வர, கனவில் கண்ட காதலன்(லி) முகம் மறைய கோபம் வரும். அது புரிந்து தோழி மீண்டும் நகைத்தாள்.

"உனக்கு பிடித்த குறள் ஒன்று சொல்லட்டுமா?" என்று கேட்டாள்.

"சொல்லேன்" என்றாள் சொர்ணா.

தோழி ஒருகணம் யோசித்து, மனதில் சேகரித்து வைத்திருந்த குறளில் பொருத்தமானது தேடி எடுத்துச் சொன்னாள்.

**"நனவென ஒன்றில்லை ஆயின் கனவினான் காதலர் நீங்களர் மன்."**

குறள்-1215
அதிகாரம்-122

## குறுக்கெழுத்துப் போட்டி இல-48

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | | | ■ | 2 | 3 |
| 4 | | | 5 | | ■ | |
| | ■ | 6 | | ■ | 7 | |
| | 8 | | | | ■ | ■ |
| ■ | ■ | | ■ | 9 | 10 | |
| 11 | | | | ■ | | ■ |
| | ■ | | ■ | 12 | | |

### இடமிருந்து வலம்

1. மாதத்தில் ஒருநாள் தவறாமல் வந்துவிடும்.
2. சுவைக்கும் ஏற்றது. ஆரோக்கியத் திற்கும் நல்லது.
4. மிதவாதிக்கு நேரெதிர்.
7. ஆடியில் வாடி விடும்.
8. இதன் இலையில் பனிநீர் தூங்கும் என்று பாடல் ஒன்று உண்டு.
9. இதற்குள் நம்நாடும் அடக்கம்.
11. பாதையில் இதுவும் இருக்கும்.
12. ஒரு மதத்திற்குரியது.

### மேலிருந்து கீழ்

1. பாடங்களில் ஒன்று.
3. கொழுந்து விட்டும் எரியும்.
5. திருக்குறள் தந்தவரின் துணைவி.
6. இதனைத் தனியாட்சி மொழியாகக் கொண்டுவருவேன் என்று அமரர் பண்டாரநாயக்கா தெரிவித்தார்.
10. உள்ளே இருப்பது முத்து.
11. சூரியனைக் கண்டால் விலகிவிடும்.

*இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 14.05.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல-48**
**தினமுரசு வாரமலர்**
**88/14, சோமாதேவி பிளேஸ்,**
**கிருலப்பனை**
**கொழும்பு-05.**

*சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.*

### குறுக்கெழுத்துப் போட்டி இல-46க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 இ | 2 த | ய | ம் | ■ | 3 மீ | 4 தி |
| 5 டி | சை | ன் | ■ | 6 ச | த் | ரு |
| ய | ப் | ■ | ■ | ர | ■ | டி |
| ப் | 7 பி | ர | யா | ண | ம் | ■ |
| ப | டி | ■ | 8 கா | ம் | போ | 9 தி |
| ம் | ப் | 10 ந | ■ | ■ | ■ | ட |
| ■ | 11 பு | கை | ப் | ப | ட | ம் |

### குறுக்கெழுத்துப் போட்டி இல.46இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்

1. திருமதி. மகேஸ்வரி இராஜலிங்கம். மட்டுநகர்.
2. ஏ. பிரமிளா அவிசாவளை.
3. செல்வி. பாத்திமா ஷர்மின் கந்தளாய்.
4. ஜே. விஜயலட்சுமி கண்டி.
5. செல்வி. எமிலியானா பர்னாந்து கண்டி.
6. கே. ராஜேந்திரன் தெஹிவளை.
7. எம்.ஐ. அப்துல் ஜபார் ஏறாவூர்-03.
8. பி. ராகவன் மட்டக்களப்பு.
9. செல்வி.எஸ். ஜீவமனோ திருகோணமலை.
10. ஜெயா ராமச்சந்திரன் கொழும்பு-05.

*இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.*

## சிந்தியா பதில்கள்

ஹலோ சிந்தியா! உலகில் மிகப் பயங்கரமான ஆயுதம் எது?

அழகரெத்தினம் அன்னலெட்சுமி
சேனைக்குடியிருப்பு-01.

ஆசை! அது சரித்திரத்தில் பல சாதனைகளுக்கு காரணமாகவும் இருந்திருக்கிறது. சாம்பல்மேடுகள் தோன்றவும் வழி வகுத்திருக்கிறது. இன்னொரு ஆயுதம் அன்பு. அதுவும் ஆக்கவும் செய்யும். அழிக்கவும் செய்யும்.

▫▫

இந்திய கிரிக்கெட் அணியில் இருக்கும் வீரர்களில் அழகு தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்கள் யார்?

செல்வி ரம்ஸானியா-அக்குறனை.

தற்போது யாரும் இல்லை.

▫▫

ரஜனியின் வீரா எப்படி இருக்கிறார்?

றிஸ்வானா ஹமீட்-ஏத்தாலை.

அண்ணாமலையளவுக்கு சொல்ல முடியாது.

▫▫

'புதுக்கவிதையின் தந்தை' மு.மேத்தா இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறார்?

பா.பானுசந்தர்-அக்கரைப்பற்று-07.

அவரைப் புதுக்கவிதையின் தந்தை என்று யார் சொன்னது? கவிஞர் மு.மேத்தா தன் முன்னுரைகளைக்கூட புத்தகமாய் போட்டு விற்கத் தெரிந்த புத்திசாலி. தற்போது சில காலமாக சற்று அடங்கியிருக்கிறார்.

▫▫

சிறந்த நடிப்பாற்றல் உள்ளவர்கள் நடிகர்களா? அல்லது அரசியல்வாதிகளா?

எஸ். தாஜான்றியா றஹ்மான்-பிலியந்தலை.

நடிக்கிறார்கள் என்றே தெரியாதவகையில் நடித்துக்கொண்டிருக்கும் அரசியல்வாதிகள்.

▫▫

அன்பின் சிந்தியா! வாழ்க்கையில் பொய் முகம் காட்டும் மனிதர்கள் பற்றி நீங்கள் கூற விரும்புவது என்ன?

திருமதி கிறேஸ் தங்கராசா-வந்தாறுமூலை.

தங்கள் முகங்களையே முகமூடியாக்கிக் கொண்டவர்கள். அவர்களைப்பார்த்து ஒப்புக்காகக் கூட புன்னகைப்பதும் பாவம்.

▫▫

சிந்தியா! வரும் பொதுத் தேர்தலில் வெற்றி யார் பக்கம்? ஆருடம் கூற முடியுமா?

பா.பாலன்-பசறை.

ஆருடம் சொல்ல நான் ஒன்றும் அரசியல் ஜோசியர் அல்ல. என்றாலும் கடந்த மேதினம் அன்று மறைந்த ஜனாதிபதியின் சிலை திறப்பு விழாக்களைக்கூட ஆளும் கட்சியால் சிறப்புற நடத்திட இயலவில்லை. எதிர்க்கட்சிகளோ பிரமாண்டமான ஊர்வலங்கள் நடத்தி பிரமிக்க செய்துவிட்டன. மொத்தத்தில் மாற்றம் தெரிகிறது.

# மகாபாரதம்

அங்கம் 28

இவ்வாரம் (08.05.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்



காலத்தின் குரல்: ஒரு பெண் தனக்குரிய மணாளனைத் தானாக தேர்ந்தெடுக்கும் உரிமை பண்டைக்காலம் தொட்டு நடைமுறையிலிருந்து வந்த வழக்கம். ருக்மணிக்கு அந்த உரிமை மறுக்கப் படுவதையும் அவளுடைய தந்தையும் சகோதரனும் சிசுபாலனை அவள் கணவனாக்க முயல்வதையும் அவள் விரும்பவில்லை. தனது உரிமையை நிலைநாட்டும் நோக்குடன் கிருஷ்ண னுக்கு அவள் எழுதும் கடிதம் அவளது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகிறது. தனது கணவனைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் தனக்கு உண்டு என்பதை நிரூபிக்க நாட்டம் கொண்ட ருக்மணியை நாமும் வாழ்த்தக் கடமைப்பட்டவர்கள். விடுதலை வேட்கை கொண்ட முதலாவது பாரதப் பெண்மணி ருக்மணியே என்று வரலாற்றேடு அவள் பெயரைப் பொறிக்கும்.

-காட்சி தொடக்கம்-

துவாரகை–கிருஷ்ணன் ருக்மணியின் கடிதத்தைப் படிக்கிறான்.

பாடல்:

*உள்ளத்தினுள்ளே-உறைந்துவிட்ட*
*உத்தமரே வணக்கம்-உங்கள்*
*எண்ணத்தினாலே உருக்குலைந்தே மிங்கு*
*வண்ணமிழந்து விட்டேன்-இவள்*
*கண்கள் களித்திட காட்சியளித்திட*
*ஓடோடி வாரீரோ-உயிர்*
*வாடி வதங்குமுன் தேடி வந்தென்னை*
*தேற்றியணைப்பீரோ...!*

பலராமன் வருகிறான்.

**பலரா:** கிருஷ்ணா! கடும் யோசனையுடன் காணப்படுகிறாயே? காரணம் என்னவோ...?

**கிருஷ்:** விதர்ப நாடு செல்ல வேண்டும். உதவி கோரி ஓலை வந்துள்ளது. விஸ்மக மன்னனும் ருக்மியும் இளவரசி ருக்மணியை சிசுபாலனுக்கு மணம் முடிக்க முயலுகின்றனர்.

**பலரா:** அப்போ தனக்குரிய கணவனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை ஒரு பெண்ணுக்கு மறுக்கப்படுகிறதோ?

**கிருஷ்:** விதர்ப நாட்டு அரச வம்சத்தில் தான் இந்த அநீதி முதன் முதலில் இடம் பெறுகிறது.

**பலரா:** பரத கண்டத்தின் பாரம்பரியத்தை விதர்ப நாட்டானுக்கு எடுத்துக்கூறும் காலம் வந்துவிட்டது. படையைத் தயாராக்கட்டுமா?

**கிருஷ்:** ருக்மணி என்னை மட்டுமே வரச் சொல்லியிருக்கிறாள். படை வேண்டிய தில்லை. தனியே செல்கிறேன்.

**பலரா:** உன்னைத் தனி வழி செல்ல அனுமதிக்கமாட்டேன். ருக்மி கட்டாயம் போர் தொடுப்பான்.

**கிருஷ்:** சரி! நான் முதலில் செல்கிறேன். நீங்கள் படையுடன் தொடர்ந்து வாருங்கள்.

-காட்சி மாற்றம்-

சிசுபாலன் விதர்பநாட்டுக்கு படையுடன் செல்ல எதிரே கிருஷ்ணன் இரதத்தில் செல்கிறான்.

-காட்சி மாற்றம்-

ருக்மணியின் அந்தப்புரம்.

**ருக்ம:** கண்ணா! உன்னையே எதிர்பார்க் கிறேன். விரைந்தோடி வா...என்னை ஏமாற்றிவிடாதே!

▫▫▫

விதர்ப நாட்டு அரண்மனையின் வெளிப்புறம். சிசுபாலனை மக்கள் வாழ்த்தி வரவேற்கின்றனர்.

சிசுபாலனை ருக்மி வரவேற்று அரசவைக்கு அழைத்துச் செல்கிறான்.

**விஸ்மகன்:** செத்தி நாட்டு இளவரசே! சிசுபாலரே வாருங்கள்...! வாருங்கள்!

**சிசுபா:** வணக்கம் மகாராஜா! அப்பா பல வெகுமதிகளை தங்களுக்காகத் தந்துள்ளார். ஏற்றுக்கொள்ளுங்கள்.

▫▫▫

ருக்மணி தோழியுடன் பூக்களை ஏந்தி வெளியே செல்கிறாள். சகோதரன் ருக்மி எதிர்கொள்கிறான்.

**ருக்மி:** தங்கையே எங்கு செல்கிறாய்?

**ருக்மணி:** கையில் மலர்களுடன் வேறு எங்கே செல்வேன்? ஆண்டவனைத் தரிசிக்கவே செல்கிறேன் அண்ணா!

**ருக்மி:** இளவரசர் சிசுபாலன் நம் நாட்டுக்கு வந்துள்ளார் என்ற மகிழ்ச்சியான செய்தியை கூறவே வந்தேன் ருக்மணி!

**ருக்மணி:** நானும் கேள்வியுற்றேன். பூஜைக்கு நேரமாகிறது. நான் வரட்டுமா..?

▫▫▫

விநாயகர் ஆலயத்தில் ருக்மணி வழிபடுகிறாள்.

**அசரீரி ஒலி:**

அண்ட சராசரம் அத்தனையும் ஆக்கித் தந்தவன் எவனோ அவனே அழகியே உன்னை ஏற்க வருகிறான். உன் ஆவலைத் தீர்க்க ஓடோடி வருகிறான்.

**தோழி:** எதனைத் தேடுகிறீர்கள் அரச குமாரி?

**ருக்மணி:** என் எதிர்காலத்தைத்தான் தேடுகிறேன்.

கிருஷ்ணன் இரதத்தில் வருகிறான். ருக்மணியைக் கண்டதும் இரதத்தை நிறுத்த அவள் கிருஷ்ணனை அடைகிறாள்.

**கிருஷ்:** இரதத்தில் ஏறு என் அன்பே!

**ருக்மணி:** துவாரகா நகரிலிருந்து தனியாகவா வந்தீர்கள்?

**கிருஷ்:** எனது இரதத்தில் நீ ஏறிக் கொள்வாயானால் என் தனிமை நீங்கி விடுமல்லவா...?

கிருஷ்ணன் கைலாகு கொடுத்து ருக்மணியை இரதத்தில் ஏற்றிக்கொள்கிறான்.

**ருக்மணி:** தங்களுக்கு நன்றி கூற வார்த்தைகளே இல்லை பிரபு!

**கிருஷ்:** நன்றி எனக்குக் கூற வேண்டாம் அன்பே!

அன்போடு என்னை எவர் அறைகூவி னாலும் அவர் அருகில் ஓடோடிச் செல்வதே என் பணி. நாம் புறப்பட அனுமதி தருகிறாயா?

**ருக்மணி:** தங்களுக்கு கட்டளையிட நான் யார் பிரபு?

**கிருஷ்:** உனது அழைப்பின் பேரிலேயே இங்கு ஓடி வந்தேன். போவதற்கும் நீ அனுமதித்தே ஆக வேண்டுமல்லவா? நாமாகவே எமது சொந்த விருப்பில் ஒன்றுபட்டு இங்கிருந்து செல்கிறோம் என்பதை எல்லோருக்கும் அறிவித்து விடுகிறேன்.

கிருஷ்ணன் சங்கினை எடுத்து ஊதுகிறான்.

-காட்சி மாற்றம்-

விதர்ப நாட்டு அரண்மனை–சிசுபாலனும் ருக்மியும் சொக்கட்டான் ஆடுகின்றனர்.

**ருக்மி:** நண்பரே இப்பொழுது உமது ஆட்ட முறை!

**சிசுபா:** கிருஷ்ணனின் சங்கொலி கேட்கிறதே! அவன் எங்கோ அருகில் நிற்கிறான் போலும்!

**ருக்மி:** நடக்க முடியாது. பகடையை உருட்டுங்கள்.

**சிசுபா:** நிச்சயமாக இது கிருஷ்ணனின் சங்கொலிதான்.

**காவலன்:** இளவரசே! துவாரகைப் படைகள் நம் நாட்டுள் பிரவேசித்து விட்டன.

**இரண்.காவ:** வாசுதேவ குமாரன் கிருஷ்ணன் இளவரசி ருக்மணியைக் கடத்திச் சென்றுவிட்டார் பிரபு!

**சிசுபா:** என்ன..! ஓர் இடையனுக்கு இத்தனை துணிச்சலா? ருக்மி! நீ படையுடன் சென்று பலராமனின் படையை முறியடி.... கிருஷ்ணனை நான் ஒரு கை பார்த்து விடுகிறேன்.

**ருக்மி:** பொறுங்கள்! ருக்மணி முறைப்படி இன்னும் உங்கள் மனைவியல்ல. நான் கிருஷ்ணனிடமிருந்து தங்கையை மீட்கிறேன். நீங்கள் பலராமன் படையுடன் மோதுங்கள்.

- பலராமன் படையுடன் ருக்மியும் ஜராசந்தனும் மோத, கிருஷ்ணன் ருக்மணியுடன் இரதத்தில் சென்று கொண்டிருக்கிறான்.
- கிருஷ்ணன் இரதத்தை இடை மறிக்கிறான் ருக்மி.

**ருக்மி:** இரதத்தை நிறுத்து கிருஷ்ணா! என் தங்கையை இவ்வாறு அழைத்துச் செல்வது உனக்கு அடுக்காது. அவளை விட்டுவிடு.

**கிருஷ்:** தாமதித்துவிட்டாய். ருக்மணியை என் இரதத்தில் ஏற்றியதும் அவள் என்னுடையவளாகி விட்டாள்.

**ருக்மி:** அவள் வீதியில் கிடந்த வெகுமதிமிக்க பொருளல்லவே! அவளை அடைவதா னால், சுத்த வீரனைப் போல் என்னுடன் பொருதிப்பார்.

**கிருஷ்:** அப்படியா! சரி போரிட்டே பார்ப்போமே!

- கிருஷ்ணன் தனது சுதர்சன சக்கரத்தை ஏவி ருக்மியின் ஆயுதங்களைக் களைந்து அவனைக் கயிற்றினால் கட்டி விடுகிறான்.
- பலராமன் ஜராசந்தனுடன் கதாயுதப் போர் புரிந்து அவனை வெல்கிறான்.

**கிருஷ்:** ருக்மி! வேறு ஆயுதங்கள் எஞ்சி யிருந்தால் அவற்றையும் பிரயோகிப் பதுதானே!

**ருக்மி:** இவ்வாறு அவமானப்படுத்த வேண்டாம். என்னைக் கொன்றுவிடு.

**கிருஷ்:** நீ அவமானப்பட வேண்டிய எதுவும் நடக்கவில்லையே! உன் தங்கையின் மானத்தைக் காக்கவே போரிட்டாய். நீ ஒரு வீரன் என்பதால் நீடூழி வாழ வாழ்த்துகிறேன்.

**காலத்தின் குரல்:** ,அரசியலைக் களங்கப் படுத்துபவன் எப்போதும் ஊழல் மார்க்கங்களையே நாடுவான். மக்களின் அபிமானத்தை தன்பால் ஈர்க்க குறுக்கு வழிகளை நாடத் தலைப்படுவான். யுதிஷ்டிரன் அஸ்தினாபுரத்தின் அடுத்த அரசனாகப் போகிறான் என்ற உண்மையை பொறுக்க முடியாத துரியோதனன் சகுனியின் உதவியுடன் நாட்டின் சீரமைப்பைக் கெடுத்து சின்னாபின்னமாக்குவதில் ஈடுபடுகின் றான். திறை சேரியின் திரண்ட செல்வதை தங்கள் சுகபோகத்துக்காக வாரி இறைக் கின்றனர். மக்களை தம் வசமாக்கும் பொருட்டு ஏராளமான பொருளை செலவிடுகின்றனர். திருதராட்டிரன் இதனை நன்கு உணர்வார். ஆனால் மகனைத் தட்டிக்கேட்கும் திராணி அவருக்கில்லை.

▫▫▫

கானகத்தில் திருதராட்டினர் சஞ்சயனால் செலுத்தப்படும் தேரில் செல்கிறார்.

**திருத:** நாம் நாட்டின் எல்லையைத் தாண்டி விட்டோமா சஞ்சயா? வித்தியாசமான மணம் பரவுகிறதே!

**சஞ்ச:** ஆம் பிரபு! அழகான பசுமை நிறைந்த வனத்தினூடே செல்கிறோம்.

**திருத:** சஞ்சயா! பசுமை என்கிறாய்; பச்சை என்கிறாய்.... காற்றுக்கும் வர்ண முண்டா? இன்று என் கண்களாகவே இருந்து எனக்கு உண்மைகளை விபரமாகக்கூறு..! உண்மைக்கும் பொய்க்கும் இடையில் மணத்திலும் உருசியிலும் மாற்றமிருப்பதை நான் உணர்வேன்.

**சஞ்ச:** ஆமாம் பிரபு! உண்மை சிலவேளை களில் கசப்பாகவே இருக்கும். ஆகவே நான் என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுங்கள் பிரபு!

**திருத:** உன்னை நம்புகிறேன். உண்மையினை கூறு...!

**சஞ்ச:** முதலாவதாக, யுதிஷ்டிரன் மக்களிடத்தில் மிகுந்த செல்வாக்கைப் பெற்று வருகிறான். குறிப்பாகக் கூறுவதானால் தங்களுக்கிருப்பதை விட இளவரசர் யுதிஷ்டிரர் மக்களின் மதிப்பை மிகவும் கவர்ந்து விட்டார் மகாராஜா! அவர் விரைவில் உங்கள் இடத்தை அடைந்து விடுவார் என்றே எனக்குத் தோன்றுகிறது.

**திருத:** என்ன..? எனது உரிமைகளை யுதிஷ்டிரன் அபகரித்து விடுவானா?

**சஞ்ச:** அந்தக் கருத்து அவரிடம் இருக்கு மானால் மக்கள் அபிமானத்தை அவர் பெற முடியாது. அஸ்தினாபுர மக்கள், விரைவில் அவருக்குரிய உரிமைகளை-தாங்கள் அளிக்காமல் விட்டாலும்-பெற்றுக்கொடுக்க முற்பட்டு விடுவார்கள் என்ற அர்த்தத்திலேயே அவ்வாறு கூறினேன்.

**திருத:** அப்போ... எனது மகனுக்குச் சேர வேண்டும் என்று நான் கருதும் உரிமைகளை சந்தோஷமாக விட்டுக் கொடுத்துவிட வேண்டும் என்கிறாயா? எனக்குத் தெரியும். பீஷ்மரும் விதுரரும்கூட பாண்டவர்கள் மீதுதான் அதிக பாசம் கொண்டுள்ளனர். துரோணாச்சாரியார் என் ஆணைக் குட்பட்டிருந்தபோதும் அர்ச்சுனனையே தன் பிரதான சீடனாகத் தேர்ந் தெடுத்துள்ளார். துரியோதனன்மீது என்ன பிழை உண்டென்பதையே நான் அறிய விரும்புகிறேன்.

**சஞ்ச:** பேராசை மகாராஜா! அளவுக்கு மீறிய ஆசை வீரனுக்கு அழகல்ல என்பதே என் கருத்து.

**திருத:** சரி! அரண்மனையை நோக்கி தேரைச் செலுத்து...!

▫▫▫

- துரியோதனன் தேரில் செல்கிறான். மக்கள் வாழ்த்துகின்றனர்.
- ஒரு பெண்மணி கவலையாகக் காணப்படுகிறாள். இரதத்தை நிறுத்தி அவளிடம் உரையாடுகிறான்.

**துரியோ:** பெண்ணே! ஏன் கவலையுடன் காணப்படுகிறாய்?

**பெண்:** திருமண வயதில் எனக்கு பெண் பிள்ளைகள் உள்ளனர். வறுமையின் காரணமாக அவர்களுக்கு வாழ்க்கை அமைத்துக் கொடுக்க முடியவில்லை பிரபு!

**துரியோ:** கவலையை விடு பெண்ணே! இதோ சில பொருட்களைப் பெற்றுக்கொள். உன் பெண்களுக்கு திருமணத்தை நாமே முடித்து வைப்போம்.

**பெண்:** நீடூழி வாழ்க மகனே!

▫▫▫

துரியோதனன் அரண்மனை.

**சகுனி:** அஸ்தினாபுரியின் அரசனாக வரவேண்டியவன். இப்படி அமைதி யின்றி இருக்கலாமா? அரசியலுக்கு விவேகம் முக்கியமல்லவா? உன் முகத்தில் கோபக்களை தட்டுகிறதே மகனே!

**துரியோ:** மாமா! தங்கள் ஆலோசனை களின்படிதான் நடந்தேன். பலனைக் காணவில்லை. கஜானாவைக் காலி செய்தேன். பலருக்கும் வாரி இறைத் தேன். ஆனால் யுதிஷ்டிரனின் புகழ் தான் மேலோங்குகிறது.

**சகுனி:** விரைவில் எல்லாவற்றையும் நீயே அடைவாய். அதற்காகவே புருவஞ் சனரைச் சந்தித்துவிட்டு வருகிறேன்.

**துரியோ:** அந்த வயதான சிற்பி என்ன செய்யப் போகிறார் மாமா?

**சகுனி:** ஒரு பெரும் படையினால் சாதிக்க முடியாததை புருவஞ்சனர் சாதிப்பார் மருமகனே. வாரணாவதியில் சிவ மஹோற்சவம் இம்முறை நடைபெறும் அல்லவா? அந்த விழாவுக்கு இம்முறை நீ போக வேண்டியதில்லை. யுதிஷ்டிரனே அரசின் பிரதிநிதியாகக் கலந்து கொள்ளட்டும்.

**,துரியோ:** புதிர் போடுவதை விடுத்து புதுமார்க்கமிருந்தால் கூறுங்கள் மாமா!

**சகுனி:** முழு விபரத்தையும் அறியுமுன் ஆத்திரப்படாதே! விழாவுக்கு வருகை தரும் யுதிஷ்டிரன், புருவஞ்சனனால் அமைக்கப்படும் அரக்கு மாளிகையில் தங்குவான். அப்போது தற்செயலாக ஏற்படும் தீ விபத்து அரக்கு மாளிகையில் தாவிப் பிடித்தால் போதுமே!

**துரியோ:** அரக்கு மாளிகையா...? மாமா நீங்கள் அசகாய சூரரேதான். தங்கள் ஆற்றலின் மீது ஐயுறும் அவசரக்கார முட்டாள் நான்!

**சகுனி:** இளமைப் பிராயம் சந்தேகங்களின் இருப்பிடம்தானே! கவனமாகக் கேள்! உன் தந்தையார் தனது தம்பி பாண்டுவின் புத்திரர்களை மீறி உனக்குரிய உரிமை களைத் தர முடியாத நிர்ப்பந்தத்தி லிருக்கிறார். சிவமகோற்சவத்துக்கு இம்முறை யுதிஷ்டிரனை அனுப்பும்படி அப்பாவிடம் கூறு. அரக்குமாளிகை சமாச்சாரம் வெற்றியளித்தால் நமக்கே வெற்றி.

-காட்சி மாற்றம்-

திருதராட்டிரன் அரண்மனை.

**துரியோ:** அப்பா! யுதிஷ்டிரனை இந்நாட்டின் வருங்கால மன்னனாக அறிவித்து என்னைப் புண்படுத்தி விட்டீர்கள். எனக்கு நீங்கள் அளித்த வாக்குறுதிகள் அத்தனையும் வீணாகிவிட்டன. பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு அப்பா!

**திருத:** சரி இப்போ நான் என்ன செய்ய வேண்டும்?

**துரியோ:** நான்கு சுவருக்குள் அடைபட்டுக் கிடக்கும் தங்களுக்கு சுற்றி நடக்கும் சூழ்ச்சிகள் தெரியாது. இவற்றைக்கூறி தங்கள் அமைதியினைக் கெடுக்கவும் விரும்பவில்லை.

**சகுனி:** ஒன்று தெரியுமா மைத்துனரே! யுதிஷ்டிரன் நாளுக்கு நாள் மக்களிடம் செல்வாக்குப் பெற்று வருகிறான்.

**திருத:** நல்ல செய்திதானே!

**சகுனி:** ஆனால் நமக்கு சாதகமானதல்லவே! இன்று யுதிஷ்டிரன் பெறும் செல்வாக்கு தங்களுக்கு எதிராக எந்த நிமிடமும் திருப்பி விடப்படலாம் அல்லவா?

**திருத:** அவன் அவ்வாறு எப்போதும் நடக்க மாட்டான்.

**சகுனி:** ஏன் நடவாது? அரியணையில் ஏறும் நாளை அவன் ஆவலுடன் காத்திருக் கிறான். அவன் நேரடியாகச் செய்ய மாட்டான். ஆனால் மக்கள் மூலமாக நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தலாம் அல்லவா?

**திருத:** எனது அருமை தம்பியின் மகன் அவ்வாறு ஒருபோதும் நடக்க மாட்டான்.

**சகுனி:** உண்மைதான். அவனுக்காக அஸ்தினாபுரியின் மக்களே அக்கைங் கரியத்தைச் செய்யலாம் அல்லவா? மக்களை பாண்டவர்கள் வசப்படுத்தி வைத்துள்ளனர். அன்று அரசவையில் அடுத்த மன்னரைத் தெரிவு செய்வது தொடர்பாக நடைபெற்ற உரையாடலின் போது உங்கள் படைகளின் அதிபதி-சேனாதிபதி என்ன சொன்னார் என்பதை மறந்து விட்டீர்களா?

**துரியோ:** அப்பா! யுதிஷ்டிரனுக்குக் கீழ் இரண்டாவது நிலையில் இருப்பது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு ஏற்றபடி மாற்றங்கள் செய்யவில்லையானால் நாங்கள் தற்கொலை செய்வதைத் தவிர வேறு வழியில்லை.

**திருத:** தயவு செய்து என்னிடம் அவ்வா றெல்லாம் பேசாதே மகனே!

**துரியோ:** எனது பிரச்சினைகளை வேறு எவ்வாறு தங்களுக்குப் புரிய வைப்பது அப்பா?

**திருத:** நான் இப்போ என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

**சகுனி:** இம்முறை வாரணாவதியில் நடைபெறும் சிவமகோற்சவத்தில் யுதிஷ்டிரன் அரச பிரதிநிதியாகக் கலந்து கொள்ளட்டும்.

**திருத:** ஒவ்வொரு வருடமும் நான்தானே கலந்துகொள்வேன்?

**சகுனி:** ஆமாம்! இன்றுவரை உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்த யாரும் இருக்க வில்லை. தவிர தங்கள் எதிர்கால மன்னருடன் நேரடியாகப் பழகும் வாய்ப்பு அஸ்தினாபுரி மக்களுக்கு இதுவரை கிட்டவில்லை. தங்களுக்குப் பதிலாக யுதிஷ்டிரன் இம்முறை விழா வுக்குச் சென்றால் மக்களுக்கு அந்த வாய்ப்புக் கிட்டுமல்லவா?

**திருத:** இருப்பினும் சகுனி...!

**சகுனி:** தங்கள் குடும்பத்தின்மீது அக்கறை கொண்டுள்ள என்மீது தங்களுக்கு நம்பிக்கை இல்லையா?

**திருத:** உன்மீது எனக்கு நிரம்ப நம்பிக்கை யுண்டு. உண்மையில் எனது மகனை அஸ்தினாபுரத்துக்கு மன்னனாக்கவே விரும்பினேன். ஆனால் அதனால் பாண்டவர்களுக்கு நான் தீங்குவிளைத்த வனாகலாகாது. குறிப்பாக யுதிஷ்டிரன், அவர்கள் எல்லோரையும் விட நல்லவன்-கீழ்ப்படிவானவன்.

**சகுனி:** ஆகவே அவனே சிவமகோற்சவத்தில் கலந்துகொள்ளட்டும். எதிர்கால அரசனும் அவன்தானே!

-காட்சி மாற்றம்-

பீஷ்மரின் மாளிகை.

**விதுர:** அஸ்தினாபுரத்தில் யுதிஷ்டிரன் அமைதியையும் பாதுகாப்பினையும் ஏற்படுத்திவிட்டான் என்பதில் சந்தேகமே யில்லை. ஆனால்....!

**பீஷ்ம:** ஆனால், ஆனால் என்ற வார்த்தையை விட்டு விடமாட்டீரோ விதுரரே!

**விதுர:** இந்தக் காலம் நிச்சயமற்றது. எதிர்பாராத சம்பவங்கள் நடைபெறு கின்றன. அண்ணன் பாண்டு, முனிவரைக் கொல்வார் என்றோ அண்ணன் திருதராட்டினர் அரசாள்வார் என்றோ எவரும் நினைத்ததில்லையே. விதியின் கோரத் தாக்குதல் எப்போதும் அஸ்தினா புரியை நோக்கி வீசப்படுகின்றது. இன்று அஸ்தினாபுரத்தின் கொடிய விரோதி சகுனிதான். தனது நாட்டை மறந்து சகுனி இங்கேயே சுற்றித் திரிவதில் ஏதோ மர்மமான காரணம் இருக்கிறது என்றே எனக்குப் படுகிறது.

**பீஷ்ம:** அஸ்தினாபுரியின் அரசனாக யுதிஷ்டிரன் முடிசூடிக்கொள்வதில் வேறு தடங்கல்கள், இடையூறுகள் ஏற்படும் என்று கருதுகிறீரா?

**விதுர:** அத்தகைய சந்தேகம் எதுவும் என்னிடம் இல்லை....!

**பீஷ்ம:** உம்....! தொடரும்...உம் மனதில் உள்ளவற்றை மறையாமல் கூறும்... எனது மரணத்துக்கான காலம் இன்னும் வரவில்லை என்பதும் உமக்குத் தெரியும்!

**விதுர:** அஸ்தினாபுரத்தின் திறைசேரியை துரியோதனனின் கையில் கொடுத்திருக்க லாகாது என்பது எனது கருத்து. தனது செல்வாக்கினை மக்கள் மத்தியில் நிலைநாட்ட நாட்டின் நிதியை தன் விருப்பம்போல் செலவிடுகிறான். இன்றைய அரசியல் சூழ்நிலையில் அரண்மனை நிதி எவ்வளவு பிரதானமானது! இதுதான் என்னைக் கவலையில் ஆழ்த்துகிறது பெரியப்பா!

பின்னணிப் பாடல்:

**விதியின் வேகத்தைக் குறைத்திடலாமோ**
**வேதனைப் புயலை மறைத்திடலாமோ**
**விதியே புயலாய் வீசிடும்போது**
**கதியே கலைந்து நிலை குலையாதோ...!**

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

www.padippakam.com


பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.




அருள் ஜுவலர்ஸ்
இல. 3, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி: 436331


## சிறு எறும்பும் சேவை செய்யும்!



## சரித்திரத்தில் ஒரு திருப்பம்



இன்று தென்னாபிரிக்க நாடு கறுப்பர்களின் கைகளில்!

நெல்சன் மண்டேலா - இப்போது தென்னாபிரிக்காவின் நம்பிக்கை நட்சத்திரம்

## வாழ்க்கைத் தேர் நகர வேண்டுமானால் வடம் பிடிக்கவேண்டும் நாங்களும்!

கண்டி மாவட்ட இலங்கை-இந்திய கலாசார சங்கம் தமிழ்-சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு ஒரு விளையாட்டுப் போட்டி நடத்தியது.
அதில் ஒரு அம்சம் கயிறு இழுத்தல் போட்டி.
திருமணமான பெண்கள்-திருமணமான ஆண்களுக்கிடையிலான கயிறிழுத்தல் போட்டியில் ஒரு காட்சிதான் படத்தில் தெரிகிறது.
சமத்துவம் பற்றிய வெறும் பேச்சுக்களைவிட சமூகம் அதை ஏற்க வைக்கும் விதமான போட்டிகளிலும், பொருத்தமான செயல்களிலும் ஈடுபடுதலே முக்கியம்.
போட்டி ஏற்பாட்டாளர்களை பாராட்டலாம்.
படம்-கண்டி திருமா



வாரமலர் தினமுரசு

## வஞ்சகமில்லாத வாஞ்சை



## ஆழ்கடலுக்குள் அதிவேக பாய்ச்சல்



## மனிதனுக்கு ஒரு மாற்று

